தமிழரசு

16-11-1993 ரூ.3





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


| | |
|---|---|
| 69 சதவிகித இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் வேண்டும் மாண்புமிகு முதல்வர் உரை ... | 2 |
| மழை வெள்ளம் - நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மதுரை - குன்னூர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். | 9 |
| நீலகிரி நிலச்சரிவு: பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி ... | 12 |
| மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... | 17 |
| மதுரை மாவட்டத் திருக்கோயில்கள் ... | 21 |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் ... | 24 |
| மதுரை மூதூர் ... | 29 |
| டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டத் தொடக்க விழா ... | 33 |
| மனம் கவரும் மதுரை (கவிதை) ... | 41 |
| திருமுருக கிருபானந்த வாரியார் ... | 42 |
| டான்பெட் ... | 45 |



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

கார்த்திகைத் திங்கள் - 1

மலர்:24 இதழ்:10

16-11-1993

விலை: ரூபாய் மூன்று






# 69 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்ய இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் வேண்டும்!

## மாண்புமிகு தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார்-பேரறிஞர் அண்ணா ஆகியோர், போராடிப் பெற்றுத் தந்த, பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான உரிமை, இதய தெய்வம் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களால், 50 சதவிகிதம் என உயர்த்தப்பட்டு, தற்போது தமிழகத்தில் மொத்த ஒதுக்கீடு, 69 சதவிகிதம் என்றுள்ள தனிச் சிறப்புக்கு, பங்கம் நேர்ந்துள்ள சோதனையிலிருந்து மீள்வதற்காக, 4.11.1993 அன்று, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவினை ஒட்டி, விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, சட்டமன்றப் பேரவையின் இந்தச் சிறப்புக் கூட்டத்தை, இன்று கூட்டியுள்ள தங்களுக்கு, என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறுகிய கால அழைப்பாக இருந்தும் கூட, அதனை ஏற்று, இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கருத்துரைகள் வழங்கிட வருகை தந்துள்ள, அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், பேரவைத் தலைவர் வாயிலாக, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஒரு இக்கட்டான, அதே நேரத்தில், சோதனை மிகுந்த கட்டத்தில், இன்றைக்கு இங்கே கூடியிருக்கிறோம். பிற்படுத்தப்பட்ட, பெரும்பான்மைத் தமிழ்நாட்டு மக்களின், சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்காக, வகுத்துச் செயல்படுத்தப்பட்டு வரும்,, இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்குப் பின்னடைவு ஏற்படுத்தப்பட்டு, ஓர் நெருக்கடியும், சோதனையும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனையிலிருந்து, தமிழ்நாட்டின் கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மக்களை, மீட்பதற்கான வழி வகைகளை ஆராய்ந்து, தக்க முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்திலும், கட்டாயத்திலும், நாம் இன்றைக்கு இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள், இன்றைக்குத் தமிழ்நாட்டில், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோருக்கெனவும், ஒரு சதவிகிதம் பழங்குடியினருக்கெனவும், 30 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கெனவும், 20 சதவிகிதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கெனவும், 31 சதவிகிதம் பொதுத் தொகுப்பிற்கெனவும், அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும், இட ஒதுக்கீடு நடைமுறையில் இருந்து வருகின்றது.

நாம் அனைவரும் அறிவோம்; இட ஒதுக்கீட்டுக் கொள்கையை, அறிமுகம் செய்து, செயல்படுத்துவதில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது. இட ஒதுக்கீட்டில் மாத்திரம் அல்லாமல், பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக, பல வேறு வகையான நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை, இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கென்று, ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு. இந்த வரலாறு, ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே தொடங்குவதாகும். 1854-ஆம் ஆண்டு, வெள்ளையர் ஆதிக்கத்தின் ஆட்சி, இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அன்றைக்கு இருந்த 'வருவாய் வாரியம்', அதாவது, Board of Revenue, மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையிலிருந்து, இந்த வரலாறு தொடங்குகிறது. 1920-ஆம் ஆண்டு, நீதிக்கட்சி, தேர்தல்களில் வெற்றியைப் பெற்றவுடன், இட ஒதுக்கீட்டுக் கொள்கை, புதிய பரிமாணத்தைப் பெற்றது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெற்றது.

அதுவரை வருவாய்த் துறையில் மாத்திரம் நிலவி வந்த இட ஒதுக்கீடு, அரசின் எல்லாத் துறைகளுக்கும், துறைகளின் எல்லா நிலைகளுக்கும், விரிவாக்கம் செய்யப்பட்டது. அரசுப் பணிகளில் சேர்க்கப்படுவோர், ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும், பணிகளில் அமர்த்தப்படுவோரின் எண்ணிக்கை, பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் வகையில், 1921-ஆம் ஆண்டு ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணை தான், முதல் கம்யூனல் ஜி.ஓ., அதாவது First Communal Government Order என்று, பிற்படுத்தப்பட்டோரின் முதல் உரிமைச் சாசனம் ஆகும்.

இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், அரசுப் பணிகளில் நுழைவதற்கு மாத்திரமே என்று இருந்ததை, பணி உயர்வுக்கும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டது தான், இரண்டாவது கம்யூனல் ஜி.ஓ. என்பதாகும்.

பின்னர், 1927 நவம்பர் 4-ஆம் தேதி அன்று, அந்தந்த இனங்களின் மக்கட் தொகை அடிப்படையில், அரசுப் பணிகள் வழங்கப்பட வேண்டுமென்ற, எல்லா தரப்பிலிருந்தும் எழுப்பப்பட்ட கோரிக்கையை ஏற்று; 12 அரசுப் பணியிடங்கள் காலி என்றால், அவற்றுள் 5 பணி இடங்கள், பிராமணர் அல்லாதாருக்கும்; 2 இடங்கள் பிராமணருக்கும்; 2 இடங்கள் ஆங்கிலோ இந்தியர் மற்றும் கிறித்துவருக்கும்; 2 இடங்கள் முகமதியருக்கும்; ஒரு இடம் நலிவடைந்த வகுப்பினருக்கும், என்ற இட ஒதுக்கீட்டு முறை, நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டு முறை, 1947-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

1934-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட, 'சென்னை ராஜதானி பிற்படுத்தப்பட்டோர் லீக்', Madras Provincial Backward Class League என்ற அமைப்பு, தொடர்ந்து கோரி வந்தது. அந்த கோரிக்கையையும் ஏற்று, ஏற்கெனவே இருந்து வந்த இட ஒதுக்கீட்டுப் பட்டியலில், 'பிற்படுத்தப்பட்ட இந்துக்கள்', Backward Hindus என்ற பிரிவும் சேர்க்கப்பட்டு, இட ஒதுக்கீட்டு முறை, 1947-இல் மாற்றியமைக்கப்பட்டது. மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் அமைந்த முதல் காங்கிரஸ் அரசு, அதற்கு முன்னரே அமலில் இருந்து வந்த, வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்தது என்பதைச் சுட்டிக்காட்டகடமைப்பட்டுள்ளேன்.



1951-ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்டோர் இயக்கம், ஒரு திருப்பு முனையைச் சந்திக்க வேண்டியதாயிற்று. இந்திய அரசியல் சட்டம் அமலுக்கு வந்தவுடன், கம்யூனால் ஜி.ஓ. நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராக, சிலர் நீதிமன்றங்களுக்குச் சென்றனர். கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, Champakam Dorairajan Vs. State of Madras என்ற வழக்கில், உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதைப்போலவே, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, Venkataraman Vs. State of Madras என்ற வழக்கின் மூலம், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. இந்த இரண்டு வழக்குகளையும் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், கம்யூனால் ஜி.ஓ., நாடு சுதந்திரம் அடைந்த பின், உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படி, செல்லத்தக்கது அல்ல எனத் தீர்ப்பளித்தது. பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில், பேரடி விழுந்தது கண்டு, கிளர்ந்து எழுந்தார் தந்தை பெரியார். அன்று பிற்படுத்தப்பட்டோர் நலம் நாடிய அனைவரும், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் தலைமையில், ஓரணியில் திரண்டனர். பெருந்தலைவர் காமராஜரும் அன்றைய தினம், பிற்படுத்தப்பட்டோர் நலம் நாடியே,இந்த உணர்வினைத் தக்க வகையில் வெளிப்படுத்தினார். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும், என்ற தமிழக மக்களின் உறுதியான உணர்வுகள், அன்றைய மாநில அரசை மட்டுமல்லாது, மத்திய அரசையும் சிந்திக்கச் செய்தன.

தமிழ்நாட்டின் உணர்வுகளுக்குச் செவி சாய்த்த, அன்றைய பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், இந்திய அரசியல் சட்டத்தில், 15(4) என்ற புதிய பிரிவைச் சேர்த்து, அரசியல் சட்டத்தின் முதல் திருத்தத்திற்கு, வழி வகை செய்து, தமிழ்நாட்டில் அப்போது எழுந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு, முடிவு கண்டார்.

அரசியல் சாசனத்தின் 15-வது பிரிவில், 15(4) என்னும் புதிய உட்பிரிவு ஒன்று,

"Nothing in this article or in clause (2) of article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes and Scheduled Tribes"- எனச் சேர்க்கப்பட்டது.

15(4) என்ற இப்புதிய உட்பிரிவு, அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டவுடன், தமிழகத்தில் இட ஒதுக்கீடு திருத்தி அமைக்கப்பட்டது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, 15 சதவீதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் என்றும், பொதுத் தொகுப்பிற்கு 60 சதவீதம் என்றும், இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு அரசியல் சாசனத்தின்படி, இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது, திராவிட இயக்கத்தின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதை, எவரும் மறுத்தது இல்லை என்பதை, அனைவரும் அறிவோம்.

மாநிலங்களின் சீரமைப்பிற்குப் பின்னர், 1954-ஆம் ஆண்டு, இட ஒதுக்கீட்டில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு, மாறுதல் செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, 16 சதவீதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் என்றும், பொதுத் தொகுப்பிற்கு 59 சதவீதம் என்று குறைத்தும், இட ஒதுக்கீடு மாற்றப்பட்டது.

1969-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட, சட்டநாதன் கமிஷன், அதனுடைய அறிக்கையை, 1970-ஆம் அரசுக்கு அளித்தது. சட்டநாதன் கமிஷன் அளித்த பரிந்துரைகளில், ஒன்று ஏற்கப்பட்டு, இட ஒதுக்கீடு, 7.6.1971-ஆம் நாளன்று, திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, 18 சதவீதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவீதம் என்று உயர்த்தியும், பொதுத் தொகுப்பிற்கு 51 சதவீதம் என்று குறைத்தும், இட ஒதுக்கீட்டு முறை அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தக் கட்டத்தில், Kerala Vs. N.M. Thomas, என்ற உச்ச நீதி மன்றத்தின், புகழ் பெற்ற வழக்கு ஒன்றில், Justice Thiru Fazal Ali, தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் ஒன்றை, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"Decided cases of this Court have no doubt laid down that the percentage of reservation should not exceed 50%. As I read the authorities, this is however a rule of caution and does not exhaust all categories. Suppose for instance, a State has a large number of backward classes of citizens which constitute 80% of the population and Government, in order to give them proper representation, reserves

80% of the jobs for them, can it be said that the percentage of reservation is bad and violates the permissible limits of Clause (4) of Article 16? The answer must necessarily be in the negative. The dominant object of this provision is to take steps to make inadequate representation adequate".

நீதிபதி திரு. பசல் அலி அவர்கள் குறிப்பிட்டுள்ளது, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கருதி, அரசு மேற்கொள்ளும் கொள்கைகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எந்த விதத்திலும் முரணாகாது என்பதையே வலியுறுத்துகிறது. எனவே, தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீடுக் கொள்கை எந்த வகையிலும் எதற்கும் புறம்பானதாக ஆகாது என்பது தெளிவாகிறது.

நீதிபதி திரு. பசல் அலி அவர்கள் அளித்த, இத்தீர்ப்பின் அடிப்படையில் சிந்தித்த வேளையில் தான், முதலமைச்சராக இருந்த, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1980-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அதுவரை பிற்படுத்தப்பட்டோருக்கு, 31 சதவீதம் என்று இருந்த இட ஒதுக்கீட்டை, 50 சதவீதம் என உயர்த்தினார். மொத்த ஒதுக்கீடு அன்று, 68 சதவீதம் என்ற அளவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இத்தீர்ப்பின் அடிப்படையில், வேறு சில மாநிலங்களும் தங்களது மாநிலத்தில் இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்த்திக் கொண்டன.

1990-ஆம் ஆண்டு, சென்னை உயர் நீதி மன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு என்று 1 சதவீதம், தனியாக இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டு, பொதுத் தொகுப்பில் அதுவரை இருந்த வந்த, 32 சதவீத இட ஒதுக்கீடு, 31 சதவீதமாகக் குறைக்கப் பட்டது.

இவ்வாறு, தமிழ்நாட்டில் நிலவி வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின், பரிணாம வளர்ச்சியைப் பரிசீலனை செய்யும் போது, இட ஒதுக்கீட்டின் அளவு, பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்ட, மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் தேவைக்கு ஏற்ப, ஒவ்வொரு கட்டத்திலும், மேல் நோக்கி வளர்ந்துள்ளதே அன்றி, எந்த நிலையிலும், ஒதுக்கீட்டு அளவு, இதுவரை குறைக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மை, புலனாகும்.

மத்திய அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும், பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கெனப் பரிந்துரைத்த, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, 27 சதவீதம் ஒதுக்கீடு செய்வதாக, முந்தைய மத்திய அரசு, 13.8.1990 அன்று ஆணை வெளியிட்டதையும், தற்போதைய மத்திய அரசு, 25.9.1991 அன்று, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு, 10 சதவிகித ஒதுக்கீடு என்ற அம்சத்தை, இணைத்து வெளியிட்டதையும், அப்படியே நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை, அனைவரும் அறிவீர்கள்.

நம் தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின், ஒட்டு மொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 30.9.1991 அன்று, இதே சட்டப் பேரவையில், "............................

மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில், 27 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக, 50 சதவிகித என்று, இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டும் இன்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், இந்தச் சட்டப் பேரவை, மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம், என்னால் முன்மொழியப் பெற்று, எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களின் பேராதரவோடு, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது என்பதனை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்தத் தீர்மானத்தை, இந்தியப் பிரதமர் மாண்பு மிகு திரு நரசிம்மராவ் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அத்தோடு, வேண்டுகோளும் விடுத்திருந்தேன்.

மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பாக, உச்ச நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்குகளில், 16.11.1992 அன்று, உச்ச நீதி மன்றத்தின் ஒன்பது நீதி பதிகள் அடங்கிய அரசியல் சட்ட பெஞ்ச், Nine Judges Constitutional Bench, தனது தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பில்,

தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து, நான்கு மாத காலத்திற்கு உள்ளாகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல், நீக்குதல், ஆகியவற்றைப் பரிசீலனை செய்ய, நிரந்தரக் கமிஷன் Permanent Commission ஒன்றை அமைக்க வேண்டும்.

ஆறு மாத காலத்திற்கு உள்ளாகப், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து, முன்னேறிய பகுதியினரை, Creamy Layer-ஐ, நீக்க வேண்டும். மொத்த இட ஒதுக்கீடுகள், 50 சதவிகிதம் உச்ச வரம்பை மீறாத வகையில், அமைத்துக் கொள்ள வேண்டும் -

என்பவை, மிக முக்கியமான அம்சங்களாகும்.

இந்திய உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில், உள்ள அம்சங்கள் எல்லாம், விரிவாகவும், ஆழமாகவும், 7.1.1993 அன்று நடைபெற்ற, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில், பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனைக்குப் பின்னர், ஒதுக்கீட்டிற்கு 50 சதவிகித உச்ச வரம்பு விதித்துள்ள ஆணைக்கு எதிராகவும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து, முன்னேறிய பகுதியினரை நீக்க வேண்டும் என்று ஆணைக்கு எதிராகவும், உச்ச நீதி மன்றத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், மறு ஆய்வு மனு, Review Petition தாக்கல் செய்வது என்று, அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், உச்ச நீதி மன்றத்தின் ஆணையையொட்டி, நிரந்தரக் கமிஷன் ஒன்றை அமைத்திடவும், அரசு முடிவு செய்தது.

அமைச்சரவைக் கூட்டத்தில், மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் ஒன்று, 15.3.1993 அன்று அமைக்கப் பட்டது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதற்கான அறிவிப்பு, இந்த மாமன்றத்தில் தான் செய்யப்பட்டது. இந்திய உச்ச நீதி மன்றத்தில், மறு ஆய்வு மனு, 22.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அத்தோடு, தெளிவாக்க மனு Clarificatory Petition ஒன்றும், 23.4.1993 அன்று, உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மறு ஆய்வு மனு, உச்ச நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகச் சொல்லப் பட்டாலும், இதுவரை, நமது அரசிற்கு, உச்ச நீதி மன்றத்தில் இருந்து, இது பற்றி எந்தவிதத் தகவலும் வரவில்லை.

மண்டல் கமிஷன் வழக்குகளில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கென, அமைக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு வரவில்லை என்பதும், இந்திய அரசியல் சட்டத்தில், இட ஒதுக்கீட்டிற்கு, உச்ச வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதும்; வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்ற பிரச்சினை தான், உச்ச நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு வந்ததே அல்லாமல், கல்வி நிறுவனங்களில் இட

ஒதுக்கீட்டுப் பிரச்சினை, பரிசீலனைக்கு வரவில்லை என்பதும்; மறு ஆய்வு மனுவில் தமிழ்நாடு அரசு, உச்ச நீதி மன்றத்தின் கவனத்திற்குப் பணிந்து வைத்துள்ள வாதங்களாகும்.

கல்வி நிறுவனங்களில், அனுமதி கொடுக்கும் பிரச்சினையை சென்னை யைச் சார்ந்த ஓர் அமைப்பு, சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுப்பிய போது, சென்னை உயர் நீதி மன்றம் 26.7.1993 அன்று வெளியிட்ட தீர்ப்பில், இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதத்திற்கு குறைத்திட, உச்ச நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயம் செய்யவில்லை; எனவே இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை, நடப்பு ஆண்டில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே பின்பற்றி வந்துள்ள கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றலாம்; 1994-95-ஆம் ஆண்டிலிருந்து, இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதமாகக் குறைத்து, அமலாக்கம் செய்ய வேண்டும், என்று தெளிவாக்கியது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை ஒட்டி, தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகள், மற்றும் பொறியியல் கல்லூரிகளில், அனுமதி தொடர்பான ஏற்பாடுகள், விரைந்து மேற்கொள்ளப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக, சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, உச்ச நீதி மன்றத்தில், தனி அனுமதி மனு, Special Leave Petition ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு அரசும், இப்பொழுது உள்ள இட ஒதுக்கீடு முறை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உள்ள நிலைமையைக் கருதி, என்றென்றைக்கும் தொடர வேண்டும் என்கிற அடிப்படை யில், உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில், தனி அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

நமது அரசின் சார்பில், உச்ச நீதி மன்றத்தில், வாதாடி, நமது நிலையை உறுதி செய்ய, புகழ் பெற்ற வழக்கறிஞர் களான Thiru Kapil Sibal அவர்களும், Thiru Soli Sorabjee அவர்களும், நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையைச் சார்ந்த நிறுவனம், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள, தனி அனுமதி மனுவின் மீது, இடைக் கால உத்தரவாக, உச்ச நீதிமன்றம், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க் கின்றபோது, இட ஒதுக்கீடு, 50 சத வீதத்திற்குள் தான் அமைய வேண்டும் என்று, வலியுறுத்தியுள்ளது.

சென்னையைச் சார்ந்த அந்த அமைப்பு, உச்ச நீதிமன்ற இடைக்கால உத்தரவுக்குப் புறம்பாக, தமிழ்நாட்டில், தொழிற் கல்லூரிகளில் ஏற்கனவே பின்பற்றப் பட்டு வந்த, 69 சதவீத இட ஒதுக்கீடு அடிப்படையில், மாணவர்கள் அனுமதிக் கப்படுவதாக, நீதிமன்ற அவமதிப்பு மனு, (Contempt Petition) ஒன்றைத் தாக்கல் செய்து, அதுவும் உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது.

எப்படி, அன்று சுயமரியாதை இயக்க காலந்தொட்டு, திராவிட இயக்கம் பெற்றுத் தந்த "கம்யூனல் ஜி.ஓ." விற்கு எதிராக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்ததோ- அது போன்றே, பிற்படுத்தப் பட்டோரின் நன்மைக்கென, இந்த அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைக்கு எதிராக, ஒரு முட்டுக்கட்டை உருவாகி உள்ளது என்பதை, மிகுந்த கவலை யோடும் வருத்தத்தோடும், இந்த அவை யில் குறிப்பிட விரும்புகிறேன்.

நீதிமன்றங்கள் வழங்குகின்ற தீர்ப்பு களைப் புறக்கணிப்பதோ, அவமதிப்பிற்கு உள்ளாக்குவதோ, இந்த அரசின் நோக்கமல்ல. நாட்டிலுள்ள எல்லா நீதிமன்றங்களின் மீதும், மாண்புமிகு நீதிபதிகளின் பாலும், இந்த அரசு எந்த நிலையிலும், மிகுந்த மரியாதையையும், கௌரவமான போக்கையும் கடைப் பிடித்து வருகிறது; தொடர்ந்து கடைப் பிடித்து வரும் என்பதனையும், மிகத் தெளிவாக அறுதியிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு தமிழ் நாட்டில், மிகப் பெரும்பான்மையாக வாழும், பிற்படுத்தப்பட்டோரின் முன் னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனை, பின்னடைவு, இவைகளிலிருந்து அவர் களை மீட்க என்ன தான் வழி? 69 சதவீத இட ஒதுக்கீடு, இனி என்றென்றும் தொடர்ந்திட, இந்திய அரசியல் சட்டத் தில், உரிய திருத்தத்தைக் கொண்டு வருவதைத் தவிர, மாற்று வழி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இந்த மாதிரியான சூழ்நிலைகளில், கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சி களையும், அவைகளைத் தவிர்த்திட, தடைக்கற்களை அகற்றிட, மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகளையும், இந்தப் பேரவை நினைவுகூர வேண்டும் என்று, நான் மிகுந்த கனிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

காலப்போக்கில், மக்களின் அபிலாஷை களுக்கும், மனமாற்றங்களுக்கும் ஏற்ப, சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள், தவிர்க்க முடியாதவை மாத்திரம் அல்லா மல், தடுத்து நிறுத்த முடியாதவையும் கூட என்பதை, இந்த மாமன்றத்தில் கோடிட்



டுக் காட்ட, நான் விரும்புகிறேன். அவற்றைத் தொடர்ந்து, இந்திய அரசியல் சட்டத்திலோ, அல்லது மற்ற சட்டங் களிலோ, அல்லது அரசின் கொள்கை களிலோ, தகுந்த மாற்றங்களைச் செய் வது, அரசியல் விவேகம் ஆகும்; காலத் தின் அவசியமும் ஆகும்.

நான் முன்பே எடுத்துக் காட்டியது போல, Communal G.O., சட்டத்திற்கு புறம்பானது என்று, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்த போது அன்றைய பாரதப் பிரதமர், ஜவஹர்லால் நேரு அவர்கள், தமிழ் மக்களின் உணர்வுகளுக்குச் செவி சாய்ந்து, முதன் முதலாக, இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கே, வழி வகை செய்தார். இந்திய அரசியல்

சட்டத்தில் ஏற்பட்ட, முதல் திருத்தத்திற்குக் காரணமே, தமிழ்நாடு, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க, எடுத்த நடவடிக்கை தான் என்பது, வரலாற்று உண்மையாகும்.

மன்னர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை ஒழித்திட, அன்னை இந்திரா அவர்கள் முயற்சித்தாரே! அது புரட்சிகரமான திட்டம் அல்லவா? அதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் எவ்வளவு? சளைத்தாரா இந்திராகாந்தி அவர்கள்? இல்லை.

14 வங்கிகளை நாட்டுடைமையாக்க, அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், முனைந்தாரே! அது மிகப் பெரிய சோஷலிச நடவடிக்கை அல்லவா? அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், எத்தகையவை? இவைகளை எல்லாம் கண்டு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், கவலை கொண்டாரா? இல்லை! சாதனைச் சரித்திரம் படைத்தார்.

எப்படி? தடைகளை எல்லாம் அகற்ற, 1971-ஆம் ஆண்டில், இந்திய அரசியல் சட்டத்தில்; 25-வது மற்றும் 26-வது திருத்தங்களை ஏற்படுத்தி, வெற்றி கண்டார்.

1973-ஆம் ஆண்டில், ஆந்திர மாநிலத்திலுள்ள தெலுங்கானா மக்கள், தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டார்களே? அப்போது இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், என்ன செய்தார்? தெலுங்கானா மக்களின் சமூகப் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும், முழுமையாகப் புரிந்து கொண்ட அவர், தெலுங்கானா மக்கள் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில், அரசியல் சட்டத்தில், 32-வது திருத்தத்தை கொண்டு வந்து, நிறைவேற்றப் பாடுபட்டார் என்பதை, இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், பன்னெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும், இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு, சமீப காலமாக ஏற்பட்டுள்ள சோதனைகள், அன்னை இந்திரா அவர்களின் சாதனைகளை, நினைவுக்குக் கொண்டு வந்து விட்டன என்பதை, இந்தப் பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது உணர்வுகளை நாம் மறைக்கத் தேவையில்லை. அப்படி ஒரு சூழ்நிலை, தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும், சூசகமாகத் தெரிவிப்பது, எனது கடமை என்று கருதுகிறேன்.

இட ஒதுக்கீட்டின் அளவுகோல்களும், வரையறைகளும், சம்பந்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அமைய வேண்டுமே ஒழிய, அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும், தேவைகளுக்கும், முரணாக இருக்கக் கூடாது.

இந்திய நாடு ஒரு மிகப் பெரிய நாடு. பல இனங்கள், பல சமயங்கள், பல மொழிகள் ஆகியவைகளை, தன்னகத்தே கொண்ட நாடு. பலதரப்பட்ட மக்களின் சமுதாயப் பிரச்சினைகள், காலப்போக்கில், முழுமையாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றால், அவ்வப்பொழுது ஏற்படும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, அரசியல் ரீதியாகவும், சட்டங்களின் அடிப்படையிலும், தேவையான மாற்றங்களைக் கொண்டு வந்து, அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமாகத் தான், இந்தப் பரந்த நாட்டில், மக்களிடையே அமைதியையும், மன நிறைவையும் உருவாக்க முடியும். இட ஒதுக்கீடு, முழுக்கு முழுக்க ஒரு சமுதாயப் பிரச்சினையாகும்.

இந்த சமுதாயப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், மாநில அரசின் கடமை என்பது மட்டும் அல்லாமல், மத்திய அரசுக்கும் சம பங்கு உண்டு. அதற்கு உறுதுணையான சட்டத் திருத்தங்கள் செய்திட, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு துணை இருக்க வேண்டும் என்பதைத் தான், இன்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சமூக ரீதியிலும், கல்வியிலும், பின் தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்கென, மாநில அரசுகள், தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளலாம்; அரசியல் சட்டத்தின் பிற பிரிவுகள், அவற்றிற்கு குறுக்கீடாக இருக்கலாகாது, என்ற அரசியல் சட்டத்தின், 15(4) பிரிவை இணைத்து, முதல் அரசியல் சட்டத் திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து பேசிய, அன்றைய பிரதமர், பண்டித நேரு பெருமகனார் அவர்கள் கூட, இதே கருத்தைத்தான் வலியுறுத்திப் பேசியுள்ளார். அன்று அவர் பேசும்போது குறிப்பிட்டார்:

"If this amendment is passed, the State Governments concerned will have a certain power to go ahead with the laws that they have already passed. We shall help them in examining them and dealing with them. They should, if necessary, amend their laws here and there so as to deal with these hard cases".



# இட ஒதுக்கீட்டுக் கொள்கை குறித்துத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 9.11.1993 அன்றைய சிறப்புக் கூட்டத்தின் தீர்மானம்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்களின், சமுதாய, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்கென, அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, நீண்ட நெடுங் காலமாகவே, நடைமுறையில் இருந்து வருகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில், 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கு என்றும், 1 சதவீதம் பழங்குடியினருக்கு என்றும், 30 சதவீதம் பிற்படுத்தப் பட்டோருக்கு என்றும், 20 சதவீதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கு என்றும், 31 சதவீதம் பொதுத் தொகுப்பிற்கு என்றும், இட ஒதுக்கீடு, கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில், பல நூற்றாண்டுக் காலமாக, ஒடுக்கப்பட்டு நலிவடைந்த மக்கள், இந்த இருபதாம் நூற்றாண்டில் தான், தொடர்ந்து அமலில் இருந்து வரும், இட ஒதுக்கீட்டுக் கொள்கையினால், உரிய பயன்களையும், நல்ல வாழ்க்கை நிலையையும் பெற்று, முன்னேறி வருகின்றனர். தமிழ்நாட்டில் நிலவி வரும், இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியை, ஆராய்ந்து பார்க்கும்போது, இட ஒதுக்கீட்டின் அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கேற்ப, ஒவ்வொரு கட்டத்திலும், மேல்நோக்கி வளர்ந்துள்ளதே அன்றி, எந்த நிலையிலும், ஒதுக்கீட்டு அளவு, இதுவரை குறைக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மை, புலனாகும்.

நம் தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின், ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 30.9.1991 அன்று, இந்தப் பேரவையில், ''............ மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில், 27 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக, 50 சதவிகிதம் என்று, இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் வேலை வாய்ப்புகளில் மட்டுமன்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும், இந்தச் சட்டப்பேரவை, மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது'' என்னும் தீர்மானம், எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களின் பேராதரவோடு, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது. அந்தத் தீர்மானம், இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு நரசிம்மராவ் அவர்களுக்கு, அனுப்பி வைக்கப்பட்டு, தேவையான வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குகளில், இந்திய உச்ச நீதிமன்றம், மொத்த ஒதுக்கீடுகள், 50 சதவிகித உச்ச வரம்பினை மீறாத வகையில், அமைய வேண்டும் என்று, 16.11.1992 அன்று, ஆணை பிறப்பித்தது. இதனை நிறைவேற்றக் காலக்கெடு எதையும், உச்ச நீதிமன்றம் நிர்ணயிக்கவில்லை. கல்வி நிறுவனங்களில், இந்த ஆண்டிற்கான

---

மிகத் தெளிவாக அன்று, பண்டித நேரு தெரிவித்த கருத்துக்களுக்குச் செயல் வடிவம் தர வேண்டிய அவசர அவசியம், இன்றைய மத்திய அரசுக்கு ஏற்பட்டு உள்ளது. இந்தக் கடுமையான பிரச்சினைகளில், மாநில அரசுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க, சட்டங்களை, ''இங்கொன்றும் அங்கொன்றுமாக'' திருத்திக் கொள்வதற்கும், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், நாங்கள் உதவிடுவோம் என அவர் சொல்லியதிலிருந்து, சட்டத் திருத்தங்கள் செய்ய, மத்திய அரசு துணை இருக்க வேண்டும் என்பது, தெளிவாகிறது.

எனவே, மத்திய அரசின் மூலம், உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டிய, அப்படிப்பட்ட ஓர் அவசியம், இன்று தமிழகத்திலே, ஏன், நாடு தழுவிய நிலையில் எழுந்துள்ளது என்றால், அதை அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள், என நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக வாழும், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, சமூக முன்னேற்றம் கருதி, பொருளாதார நலம் கருதி, அவர்களுக்குத் தொடர்ந்து, தேவையான அளவிற்கு இட ஒதுக்கீடு செய்வது, தமிழ்நாடு அரசின் தலையாய கடமையாக அமைந்துள்ள இந்த நேரத்தில், இதற்காகத் தேவைப்பட்டால், அன்று பண்டித ஜவகர்லால் நேரு குறிப்பிட்டதைப் போல், இந்திய அரசியல் சட்டத்தில், தகுந்த திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்றால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தான் இருக்கும். நமக்கு நீதிமன்றங்களைப் புறக்கணிக்கும் எண்ணம், கிஞ்சித்தும் இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைத் தெளிவுபடுத்தி, அவற்றைப் பாதுகாப்பதும், அவற்றை நிறைவேற்ற, எல்லா வித நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதும் தான், இப்போது நம்மிடையே இருக்கக்கூடிய, தலையாய பொறுப்பாகும். அன்று 'கம்யூனல் ஜி.ஓ.'-வைப் பாதுகாக்க, எப்படி அரசியல் சட்டத்திலே, முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டதோ- அதே நடவடிக்கை, இன்றும் எடுக்கப்பட்டாக வேண்டும்.

எனவே தான், 69 சதவீத இட ஒதுக்கீட்டினை, உறுதிப்படுத்துவதற்காக, இந்திய அரசியல் சட்டத்தில், திருத்தம் தேவைப்படுகிறது என்பதை, நாம் உரிய முறையில், உணர்த்த வேண்டியவர்களாய் உள்ளோம். அதுதான், பிற்படுத்தப்பட்ட மக்களின் உள்ளங்களில், தற்போது ஏற்பட்டுள்ள காயத்தைப் போக்கும் மாமருந்தாகும். அவர்களை எதிர்நோக்கி நிற்கும் பின்னடைவுகளிலிருந்து, அவர்களை மீட்கும் ஒரே வழியாகும். இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

"In a democracy, neither the Constitution nor the Government is Supreme; it is the people who are Supreme and they have the right to change the Constitution partially or completely... The pre-condition for a constitution to be really democratic is that it is adaptable and responsive to the people's will, and the Government set up under it is not the Government of one or of the few, but of all, by all and for all"

என்ற தத்துவத்தை, மிகுந்த பணிவோடு, உங்கள் எல்லோருடைய கவனத்திற்கும் வைத்து, இன்று ஏற்பட்டுள்ள சூழலில், உடனடியாக நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத் தீர்மானத்தினை, இந்தப் பேரவையில் முன்மொழிந்திட விரும்புகிறேன்.●



அனுமதி கொடுக்கும் பிரச்சினை, சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுப்பப் பட்டபோது, சென்னை உயர் நீதிமன்றம், இட ஒதுக்கீட்டைப் பொருத்தவரை, நடப்பு ஆண்டில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே பின்பற்றி வந்துள்ள கொள்கையைத் தொடர்ந்து பின்பற்ற லாம் என்றும், 1994-95 கல்வி யாண்டில், இட ஒதுக்கீடு அளவு, 50 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும், தீர்ப்பளித்தது.

பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, தொய் வில்லாத தொடர்ந்த முன்னேற்றம் கருதி, இப்பொழுதுள்ள இட ஒதுக்கீடு முறை, தொடர வேண்டும் எனும் நிலையினை, உறுதியாக மேற்கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, இந்திய உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது. இடைக்கால உத்தரவாக இந்திய உச்ச நீதி மன்றம், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற போது, இட ஒதுக்கீடு, 50 சதவிகிதத்திற்குள் தான் அமைய வேண்டும் என்று, வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு அரசு, இதுவரை கடைப் பிடித்து வந்துள்ள 69 சதவிகித இட ஒதுக்கீடுக் கொள்கை, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடையவும், வளம் பெறவும், ஒரு சிறந்த பயனுள்ள சாதன மாக அமைந்திருந்தது. தமிழ்நாட்டின் வரலாற்று உண்மை ஆகும். ஆகவே, இந்தக் கொள்கை தொடர்ந்து நிறை வேற்றப்பட்டால் தான், பெரும்பான்மை யான தமிழ் மக்களுடைய வாழ்க்கை, வளர்ச்சியடைய இயலும் என்று, இந்தப் பேரவை கருதுகின்றது. எனவே, தமிழ்நாடு அரசு, இதுவரை மேற்கொண்டு வந் துள்ள, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை, தொடர்ந்து கடைப்பிடிக்கப் படவும், நிறைவேற்றப்படவும், இந்திய அரசியல் சட்டத்தில், தக்க திருத்தம் கொண்டு வருவதைத் தவிர, மாற்று வழி வேறு ஏதும் இல்லை என்று, இந்தப் பேரவை கருதுகின்றது.

காலப் போக்கில், சமூகத்தில் இயல் பாகவே ஏற்படுகின்ற மாற்றங்கள், தவிர்க்க முடியாதவை. பெருவாரியான மக்கள் நலனைக் கருதி, இந்திய அரசியல் சட்டத்தில், மாற்றங்களைக் கொண்டு வருவதும், புதிய சட்டங்களை இயற்று வதும், மத்திய மாநில அரசுகள், தங்கள் செயல் முறைகளில் மாற்றம் செய்து கொள்வதும், தேவைப்படுகின்ற ஒன் றாகும். இந்திய நாட்டு வரலாற்றில், இது போன்ற மாற்றங்கள், பல நேரங்களில் நிகழ்ந்துள்ளன.

எனவே, இப்பொழுது ஏற்படுத்தப் பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும், சமூக மறுமலர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற் றத்திற்கு, எந்த வகையிலும் ஊறு நேரா வண்ணம், எப்பொழுதும் போல், இனி வருங்காலம் முழுவதிலும், அரசுப் பணி களிலும், கல்வி நிலையங்களின் அனுமதி யிலும், 69 சதவிகித இட ஒதுக்கீடு, தொடர்ந்து அமலில் இருக்கத் தக்க வகையில், இந்திய அரசியல் சட்டத்தில், விரைவில், உரிய திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று, இந்த மாமன்றம், மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

## நிறைவு உரை

பிற்படுத்தப்பட்டோரின் மேம் பாட்டில், சோதனையும், வேதனையும் மிகுந்த இந்தக் காலக் கட்டத்தல், நான் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தை, இந்தப் பேரவையில் உள்ள, எல்லாக் கட்சிகளையும், சார்ந்த உறுப்பினர்களும், ஒரு மனமாக ஏற்று, நிறைவேற்றித் தர வேண்டும் எனக், கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழகமே ஓர் உருக்கொண்டு எழுந் துள்ளது என்பதை, உலகத்திற்கு உணர்த்திட, இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும், என்ற என் உணர்வினையும், கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தீர்மானம், பேரவையின் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களாலும், ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு மனதாக நிறை வேற்றப் பெறும் என்ற நம்பிக்கையுடன், தீர்மானத்தை முன் வைத்துள்ள இந் நேரத்தில், அமைச்சரவைக் கூட்டத்தில், அரசு எடுத்துள்ள இன்னொரு முக்கிய முடிவினையும், பேரவைக்குத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இத்தீர்மானத்தின் நியாயம் மிகுந்த உணர்வினை, இங்குள்ள அனைத்து உறுப்பினர்கள், மற்றும் அரசியல் கட்சிகள், அப்படியே ஏற்றுக்கொண்டு உள்ளனர் என்பது மட்டுமல்லாது, ஒட்டுமொத்தத் தமிழகமே, இத்தீர்மானத் தோடு ஒன்றியுள்ளது என்பதை, பறை சாற்றும் வகையிலும், அன்று 1951-இல், தந்தை பெரியார் தலைமையில், கிளர்ந் தெழுந்த தமிழகத்தின் உணர்வுகள், அப்படியே மங்காமல், மாறாமல், தமிழக மக்களிடம் உள்ளது என்பதை உணர்த் தும் வகையிலும், தமிழகம் தழுவிய ''பொது வேலை நிறுத்தம்'' ஒன்றினை வரும் 16.11.1993 அன்று, நடத்துவது என முடிவெடுத்துள்ளோம். வழி வழி வந்த தமிழகத்தின், தனி உரிமையை நிலை நாட்டிட, அவ்வேலை நிறுத்தத்திற் கும், அனைவரது ஆதரவினையும், ஒத்து ழைப்பினையும், வழங்கிட வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள், இதுவரை பெற்றதை இழந்திட தயாராக இல்லை. இழந்ததை மீட்க, எல்லா முனைகளிலும், எல்லா முறைகளி லும், தொடர்ந்து முயற்சிப்போம்; ஓரணி யாக நின்று குரல் கொடுப்போம், எனத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நமது தமிழகத்தில், நீண்ட நெடுங் காலமாக ஆதி திராவிட மக்கள் பிற் படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்ட மக்கள் அனுபவித்து வரும் இட ஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட இத் தீர்மானத்தினை அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்து கருத்துக் களைக் கூறியுள்ளனர்.

சில மாண்புமிகு உறுப்பினர்கள் அரசியல் பிரச்சினைகள் பற்றிக் குறிப் பிட்டுத் தங்கள் கருத்துக்களைத் தெரி வித்தாலும், அரசியல் பிரச்சினைகள் பற்றி வேறு நேரங்களில் பேசிக் கொள்ள லாம் என்ற எனது வேண்டுகோளை ஏற்று, இத்தீர்மானத்தின் மீது தங்கள் மேலான ஆதரவுக் கருத்துக்களையே கூறிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தீர்மானத்தை இம்மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைத்து மாண்புமிகு உறுப்பினர் களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

# மழை-வெள்ளம்-நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மதுரை-குன்னூர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட புயல் சின்னத்தின் காரணமாகத் தமிழகமெங்கும் சென்ற வாரம் தொடர்ந்து மழை பெய்திடலாயிற்று; குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இந்த மழையின் வேகம் அதிகமிருந்தது.

இதனால் - குளங்கள், ஏரிகள், ஆறுகள் நிரம்பின; கரையுடைத்துப் பெருக்கெடுத்து ஊருக்குள் புகுந்தன. இதன் விளைவால் 70-க்கும் மேலானோர் உயிரிழந்தார்கள். சாலைகள், இரயில் பாதைகள் படுசேதமடைந்து போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலப் பயிர்கள் நாசமாயின. தொடர்ந்து பெய்த மழையினாலும், சூறாவளி காற்றினாலும் மிகுந்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதால் அவற்றை நேரிடையாக பார்வையிட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனுப்பி வைத்தார்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகளைத் துரிதமாகவும், போர்க்கால அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களை விரைவில் மீட்டு பாதுகாப்பான இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டுமென்றும், அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களைத் தயார் செய்து முடிக்க வேண்டுமென்றும், அவர்களைத் தங்க வைக்கும் இடங்களில் நல்ல குடிநீரும் தேவையான அடிப்படை மருத்துவ வசதிகளும் கழிப்பறை வசதிகளும் போர்க்கால அடிப்படையில் செய்து தரும்படியும் ஆணையிட்டார்.

குறிப்பாக அதிகமான பாதிப்புக்கு உள்ளான செல்லூர் பகுதி மக்களுக்காக தமுக்கம் மைதானத்தில் பெரிய அளவில் உணவு தயாரித்து செல்லூர் பகுதி மக்களுக்கு தொடர்ந்து வழங்க ஆணையிட்டார்கள். அதே போல் கூடல் நகர் தங்கியுள்ள பாதுகாப்பான இடங்களுக்கு அருகிலேயே பெரிய அளவில் உணவு தயாரிக்கும் கூடத்தை ஏற்படுத்தி உணவு வழங்க மதுரை மாநகராட்சிக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் ஆணையிட்டார்கள். கப்பற்படை படகுகளை முழுமையாகப் பயன்படுத்தி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இருவரையும் மதுரை மாநகரில் நடைபெறும் நிவாரண பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருமாறு கேட்டுக் கொண்டார். கடுமையான மழையாலும் நீர்ப்பெருக்காலும் பாதிப்பிற்கு உள்ளான மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட நெடுஞ்சாலைகளை உடனடியாகச் சீர்படுத்தி நல்ல நிலைக்குக் கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்றும் ஆணையிட்டார்.

### முதல்வர் பயணம்

மதுரை மாநகரம் இந்த மழை வெள்ளத்தால் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. வீடு வாசலை இழந்தும், சொத்து சுகங்களைக் கைவிட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் அல்லலபட்டனர்.

இதையறிந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்கவும், அல்லலுற்ற மக்களையெல்லாம் நேரில் பார்த்து ஆறுதல் கூறவும், அரிசி போன்ற முக்கியப் பொருட்களை வழங்கி அல்லல் நீக்கவும் எனப் பயணமானார்.

சென்னையில் இருந்து ஹெலிகாப்டர் தனி விமானத்தில் 12.11.93 வெள்ளிக்கிழமை காலை





9.30 மணியளவில் தனி ஹெலிகாப்டர் விமானத்தில் அவர் புறப்பட்டார்.

## வெள்ளச் சேதங்கள்

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில், காஞ்சிபுரமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பாலாற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் பாழ்பட்டுள்ளதை அவர் அவ்விமானத்தில் இருந்தவாறே பார்த்தார்.

அடுத்துத் திருச்சி மாவட்டத்திற்கு வந்த அவர் - காவிரியாறு கரைபுரண்டோடியதால் ஏற்பட்ட பாதிப்புகளையும் விராலிமலைப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் விளைவுகளையும் தொலைநோக்கிக் கண்ணாடி மூலம் கண்டு பதைத்தார்.

## மதுரையில் முதல்வர்

அதன்பின் மதுரை மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தது அந்த ஹெலிகாப்டர். கொட்டாம்பட்டி, மேலூர், வெள்ளரிப்பட்டி, ஒத்தக்கடை, நாவிலைப்பட்டி, செல்லூர் ஆகிய பகுதிகளில் இருந்து மக்களுக்கேற்பட்டிருக்கின்ற பாதிப்புகளையும், வெள்ளத்தில் மூழ்கிவிட்ட சாலைகள் - இருப்புப் பாதைகளையும் பார்த்தார்.

முதலில் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயணம் செய்த ஹெலிகாப்டர் மதுரையில் உள்ள ஆயுதப்படையினர் பயிற்சிக்குரிய விமானதளத்தில் இறங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், எதிர்பாராத பெருமழை காரணமாக அந்தத் தளமும் விமானத்தை இறக்கமுடியாத அளவில் சீர்கேடுற்றிருந்ததால், மதுரை விமான நிலையத்திலேயே தரையிறக்கப்பட்டது.

## மதுரை மேம்பாலம்

விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு இரா. முத்தையா - மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் வரவேற்கப்பட்டார்.

பின்னர் - மதுரையில், பாதிப்பிற்குள்ளான பகுதிகளைப் பார்க்கக் கார் மூலம் பயணமானார்.

மதுரை மேம்பாலம் பகுதிக்கு வந்த அவர், காரை நிறுத்திக் கீழே இறங்கினார். வைகையின் சீற்றத்தால் உண்டாகியுள்ள விளைவுகளையெல்லாம் வேதனையுடன் பார்த்தார். பின்பு, அதே காரில் நகரின் முக்கியப் பகுதிகளையெல்லாம் பார்த்துவிட்டு நேரே தமுக்கம் திடலுக்கு நண்பகல் ஒரு மணியளவில் வந்து சேர்ந்தார்.

## மக்களுக்கு ஆறுதல்

தமுக்கம் திடலில் - வீடு வாசலை இழந்த







ஏறத்தாழ மூவாயிரம் மதுரை வாழ் மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். துயருற்றிருந்த அவர்களையெல்லாம் பார்த்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறினார்.

அதையொட்டி அங்கே நடைபெற்ற பாதிக்கப் பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகளும் நேரி லேயே வழங்கும் விழாவிற்கு மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் தொகுதிச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களும் கலந்துகொண்டனர். பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவரும் வந்திருந்தார்.

வாடிக்கிடந்த மக்கள் வரிசையுற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் வரலாயினர். அவர்கள் ஒவ்வொரு வருக்கும் 500 ரூபாய் பணம், 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருக்கரங்களால் வழங்கப் பட்டன; மக்களில் சிலர் கொடுத்த மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

## ஆலோசனைக் கூட்டம்

அந்நிகழ்ச்சிக்குப் பின் மதுரையிலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், வெள்ளப் பாதிப்பு நிவாரணம் பற்றி ஆலோசனைக் கூட்டமொன்று நடத்தினார்.

இக்கூட்டத்தில் - மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு எஸ்.டி. சோமசுந்தரம், திரு எஸ். கண்ணப்பன், திரு டி.எம்.செல்வகணபதி, திரு அ.மா. பரமசிவம் ஆகியோரும் - அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்ராமன், அரசு உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கிருஷ்ணசாமி ராஜீவன் ஆகி யோரும் கலந்துகொண்டார்கள்.

அதற்குப் பிறகு - ஹெலிகாப்டர் விமானம் மூலம் - திண்டுக்கல் பகுதியில் வெள்ளச்சேதம் ஏற்பட்ட பகுதிகளைப் பார்த்துவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை திரும்பினார்.





## நீலகிரி நிலச்சரிவு:

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி!

நீலகிரி மாவட்டத்தில் குன்னூருக்கு அருகாமையில் பரளியாறு-மரப்பாலத்திற்கு இடைப்பட்ட இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக அங்கே சென்று கொண்டிருந்த சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 2 பேருந்துகள் நிலச்சரிவின் இடிபாடுகளுக்கிடையே சிக்கிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் 25 பேர்கள் உயிரிழந்ததையும் 103 பேர்கள் காயமடைந்ததையும் கேள்விப்பட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்தார்.

காயம் அடைந்தவர்கள் அனைவருக்கும் சிகிச்சை அளிப்பதற்காக, கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள் அனைவருக்கும் தீவிர சிகிச்சை அளித்து அவர்கள் விரைவில் குணமடைய அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் விரைவில் குணமடைய வேண்டுமென்ற தனது அவாவினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக்கொண்டார். இந்த விபத்தில் உயிர் இழந்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ.10,000-மும், கடுங்காயம் அடைந்தவர்களுக்குத் தலா ரூ.5,000-மும், சாதாரண காயமடைந்தவர்களுக்குத் தலா ரூ.2,500-ம் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பெரியார் மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இடங்களின் நிவாரண நடவடிக்கையைத் துரிதப்படுத்தச் சென்றுள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்களையும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களையும், உடன் நீலகிரி மாவட்டத்திற்கு விரைந்து சென்று விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு காயம் அடைந்தவர்களுக்கு நல்ல மருத்துவச் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யுமாறும், நிவாரண நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டியும் ஆணையிட்டுள்ளார்.

நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட சாலைகளை உடனடியாகப் புதுப்பித்து மீண்டும் போக்குவரத்தைத் தொடங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பாதைகள் செப்பனிடப்பட்டு விரைவில் போக்குவரத்து தொடங்கப்படும்.

### இராணுவ உதவி!

விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று நிவாரண நடவடிக்கை மேற்கொள்வதற்கு மிகுந்த சிரமம் உள்ள காரணத்தினால், இந்திய இராணுவத்தின் உதவியை நாடும்படி மாண்புமிகு



முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, கோயம்புத்தூரில் உள்ள இந்திய இராணுவத்துடன் தொடர்பு கொண்டு அவர்களை விபத்து நடந்த இடத்திற்குச் சென்று நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு உதவும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. கோயம்புத்தூரில் உள்ள இந்திய இராணுவம், சம்பவம் நடந்த இடத்திற்கு மீட்புப் பணிக்காக விரைந்து சென்றுள்ளது.

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்

நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே ஏற்பட்ட நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், நிலச்சரிவினால் காயம் அடைந்து கோவை அரசுப் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களைப் பார்த்து ஆறுதல் கூறவும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14.11.1993 அன்று காலை 9.00 மணிக்குச் சென்னையிலிருந்து விமானப்படை தனி விமானம் மூலம் புறப்பட்டு கோயம்புத்தூருக்கு காலை 10.30 மணிக்குச் சென்றடைந்தார்.

அங்கு கோயம்புத்தூர் அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 12 நபர்களையும் சந்தித்து ஆறுதல் கூறி, பழங்களையும் ஹார்லிக்ஸ் பாட்டிலையும் வழங்கினார். நிலச்சரிவினால் காயம் அடைந்த 12 நபர்களில் 8 நபர்களுக்குத் தலா ரூ.5,000 வீதமும் சிறுகாயம் அடைந்த 4 நபர்களுக்குத் தலா ரூ.2,500 வீதமும் வழங்கினார்.

கடும் காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுமி சர்மிளா, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், அவருடைய புத்தகங்கள் அனைத்தும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது எனத் தெரிவித்தபோது, மனம் நெகிழ்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தச் சிறுமிக்குக் கல்வி பயிலுவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வதாகத் தெரிவித்தார்.

நிலச்சரிவினால் தலையில் படுகாயமுற்று நினைவிழந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சபஸ்டின் என்பவரது மனைவிக்கு ஆறுதல் கூறிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவருக்குத் தீவிரச் சிகிச்சை அளிக்கும்படி அங்கிருந்த தலைமை மருத்துவ அதிகாரியிடம் உத்தரவிட்டதோடு, கோவையில் தகுந்த சிகிச்சை அளிக்க வாய்ப்பில்லை எனக் கருதினால் அவரைச் சென்னைக்கு உடன் கொண்டு சென்று, தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நிலச்சரிவினால் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி அவர்களின் குடும்பத்திற்கு (10 நபர்கள்) தலா ரூ.10,000 வீதம் வழங்கினார்கள். நிலச்சரிவினால் உயிரிழந்த திரு அகஸ்டியன் அவர்களின் துணைவியார் திருமதி தி.பி. மேரி ஜெசிந்தா அவர்கள் இரண்டு குழந்தைகளுடன் ஆதரவற்ற நிலையில் இருந்ததைக் கண்ணுற்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அப்பெண்ணிற்கு விதிகளைத் தளர்த்தி உடன் வேலைவாய்ப்பு அளிக்க நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உத்தரவிட்டார்கள்.

## மூன்று முறை பார்த்தார்!

கோயம்புத்தூர் விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டர் மூலம் கிளம்பி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் பரளியாறு - மரப்பாலம் இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். மிகப் பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதைக் கண்டு, 3 முறை சுற்றி வந்து மிகத் தாழ்வாகப் பறந்து பார்வையிட்டு, இந்த நிலச்சரிவு தொடர்பாக மேலும் விவரங்களை உடன் வந்திருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்ராமன், மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு டி. பிச்சாண்டி ஆகியோருடன் கேட்டு அறிந்து கொண்டார்கள்.

இந்த நிலச்சரிவில் பெருத்த சேதம் மலைப் பகுதிகளுக்கு ஏற்பட்டுள்ளதால், அவற்றைப்



போர்க்கால அடிப்படையில் மீண்டும் அமைப்ப தற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். பின்னர், வேறு வழியாக ஹெலிகாப்டர் மூலம் பறந்து சென்று குன்னூர் நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்வையிட்டார். இவ்வாறு ஹெலிகாப்டர் மூலம் ஒரு மணி, 15 நிமிடங்கள் பார்வையிட்ட பிறகு, கோவை பீளமேடு விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.



## ஆலோசனை

நீலகிரி மாவட்டத்தில் பரளியாறு-மரப்பாலம் இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவையும், அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் ஹெலி காப்டர் மூலம் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பின்னர் கோவை பீளமேடு விமான நிலையத்தில் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும், நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் மேட்டுப்பாளையம்-குன்னூர் செல்லும் மலைப் பாதையை உடனடியாக அமைத்து, சீர் செய்வது குறித்தும் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டம் சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செய லாளர், வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு சி.என். ராமதாஸ், நெடுஞ்சாலைத்துறை தலை மைப் பொறியாளர், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சி.வி. சங்கர், நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு டி. பிச்சாண்டி, காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர் திரு வால்டர் தேவாரம், கோயம்புத்தூர் மாநகரக் காவல் ஆணையாளர் திரு கணேசன், கோவை சரகக் காவல்துறை துணைத்தலைவர் திரு வி.சி. பெருமாள் ஆகி யோர் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பரளியாறு-மரப்பாலம் இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவைத் தொடர்ந்து, மேலும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உண்டா என்பதைக் கண்டறிய Geological Survey of India நிறுவனத்தின் மூலம் மாநில நெடுஞ்சாலைத் துறை ஒரு ஆய்வு Investigation நடத்த வேண்டும் என்றும், தொடர்ந்து நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பு, மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் (Central Road Research Organisation) துணையுடன் பொறியியல் ஆய்வு நடத்த வேண்டும் என்றும், அந்த ஆய்வின் அடிப்படையில் நிலச்சரிவால் கிட்டத்தட்ட அழிந்துபோன மலைப்பாதைகளை மீண்டும் போர்க்கால அடிப்படையில் உருவாக்கி, சீர்படுத் திக் கொண்டு வரவேண்டும் என்று ஆணை யிட்டார். இப்பணியை விரைவில் செய்து முடிக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அறி வுறுத்தினார்.

அடர்ந்த வனங்களும் காட்டுப் பகுதிகளுமாக ஒரு காலத்தில் இருந்த நீலகிரி மாவட்டம், வனங்களும் மரங்களும் அழிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் தான் இதுபோன்ற நிலச்சரிவுகள் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிலையை முற்றிலுமாக மாற்றி, நீலகிரி மாவட்டம் முழுமை யையும் மரங்களை அதிக அளவில் வளர்த்து அடர்ந்த காட்டுப் பகுதிகளை உருவாக்க (Afforestation) செயல் திட்டம் ஒன்றை தயாரித்துச் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பாக நிலச்சரிவினல் பாதிக்கப்பட்ட இடங்களில் மரங்களை மீண்டும் நட்டு வனப்பகுதிகளாக ஆக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை யிட்டார்.

## நிவாரணப் பணியை விரைவில் மேற்கொள்ள...

அதுவரை மேட்டுப்பாளையத்திலிருந்து கோத்த கிரி-குன்னூர் வழியே ஊட்டி செல்லும் பாதை யைப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தவேண்டி உள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் போக்கு

வரத்தைச் சிறிது காலத்திற்கு நிறுத்திவைக்க வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சித்தலைவர், காவல்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து ஒரு போக்குவரத்துத் திட்டம் (Traffic Regulation Plan) தயாரித்துச் செயல்படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டார். மேலும் டீ, காய்கறிகள் லாரிகள் மூலமாகக் கொண்டு வருவதற்கும், அத்தியாவசியப் பொருட்களை இரவில் மேலே கோண்டு செல்வதற்கும், காலையில் பயணிகள் போக்குவரத்து செல்லவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டத்திற்கென ஒரு தனி Repeater Station அமைத்துத் தொலைத் தொடர்பு சாதன வசதியைச் செய்து தர வேண்டும் என்று காவல் துறைக்கு ஆணையிட்டார். அவ்வாறு செய்தால் தான் தகவல்களை விரைந்து அனுப்புவதோடு நிவாரணப் பணியை விரைவில் மேற்கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்டத்திற்குத் தேவையான பணி இடங்களையும், ஜீப்பு போன்ற வாகன வசதிகளை விரைந்து வழங்கும்படி ஆணையிட்டார். எல்லா நிவாரணப் பணிகளையும் தொடர்ந்து தொய்வின்றிச் செயல்படுத்த வேண்டும் என்று எல்லா அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார். பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ, ஜெயலலிதா அவர்கள் விமானப்படை தனி விமானம் மூலம் சென்னைக்கு மாலை 3.00 மணியளவில் திரும்பினார்.

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம்

நீலகிரி மாவட்டத்தில் குன்னூருக்கு அருகே உள்ள பரளியாறு மற்றும் மரப்பாலம் இவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவையும் அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு



இந்த நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், உயிர்ச்சேதம் குறித்தும் மலைப் பாதைக்கு ஏற்பட்ட பாதிப்பைக்குறித்தும் கடிதம் எழுதியுள்ளார்கள். அந்தக் கடிதத்தில் தற்போது 1½ கிலோமீட்டர் தூரத்திற்கு முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்ட இந்த மலைப்பாதை மீண்டும் விரைவில் அமைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதைச் சுட்டிக்காட்டி, அப்பணியில் இராணுவத்திற்குச் சொந்தமான (Border Roads Organisation) மற்றும் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம் (Central R0ads Research Institute) ஆகிய நிறுவனங்களிலிருந்து தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், (Geological Survey of India) நிறுவனத்தின் மண் அரிப்பு நிபுணர்களை அனுப்பி வைத்து, அந்த இடத்தைப் பார்வையிட்டு தொழில்நுட்பக் கருத்துக்களை வழங்க ஏற்பாடு செய்யுமாறும் அக்கடிதத்தில் கோரியுள்ளார். மேலும், அவர்களை மிக விரைவில் நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து, இந்த ஆய்வை நடத்துவதோடு மட்டுமல்லாமல், இந்த அமைப்பு பணிக்கும் அவர்கள் தங்களது ஒத்துழைப்பையும், உதவியையும் நல்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மாண்புமிகு பிரதமர் அவர்கள் பதில்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பாரதப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு 14.11.93 அன்று நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு பற்றியும், பலர் உயிர் இழந்தது பற்றியும் ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தைக் கண்ணுற்ற மாண்புமிகு பாரதப் பிரதமர், இந்தச் சம்பவம் குறித்து தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தச் செய்தியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சம்பவம் குறித்து எடுத்த நிவாரண நடவடிக்கைகளை வெகுவாகப் பாராட்டி, நீலகிரி மாவட்டத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து உதவிகளையும் செய்வதாகவும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் உறுதி அளித்துள்ளார்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras–600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# வளர்ச்சிப் பணிகள்



திரு. கிருஷ்ணசாமி ராஜீவன்
மாவட்ட ஆட்சித்தலைவர்
மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தைப் பொருத்தமட்டில் - 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில் 2.10.60 முதல் உருவாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர், தெருவிளக்கு, சாலைபராமரிப்பு, சுகாதாரம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப் பட்டு அதனடிப்படையில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகள் நடப்பு ஆண்டில் முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## குடிநீர்த்திட்டப் பணிகள்

மதுரை மாவட்டத்தில் 2,268 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் 1008 குடியிருப்புகள் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்றவைகளாகும். 1,260 குடியிருப்புகள் பகுதி குடிநீர் வசதி பெற்றவை. 1,260 குடியிருப்புகள் முழுமையாகக் குடிநீர் வசதி பெறக் கீழ்க்கண்டவாறு குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வறட்சி நிவாரணப் பணிகள்

நடப்பு ஆண்டில் ரூ.34.80 இலட்சம் மதிப்பீட்டில் 122 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.2 இலட்சம் மதிப்பீட் டில் 8 குடிநீர்க் குழாய் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.16 இலட்சத்திற்கு 72 புதிய பம்புசெட்டுகள் வாங்கப்பட்டு, பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாகப் பொருத்தப்பட்டு உள்ளன. எழுமலையில் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி துவக்கப்படவுள்ளது.

## கிராமக்குடிநீர் மானியத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் ரூ.23.22 இலட்சம் மதிப்பீட்டில் 108 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வேலை களுக்கு அரசு மானியமாக ரூ.18 இலட்சம் வழங் கியுள்ளது. ரூ.5.22 இலட்சம் ஊராட்சி ஒன்றியங் களின் பங்குத்தொகை பெறப்பட்டுள்ளது.

## ஊராட்சி ஒன்றியப் பொதுநிதி வேலைகள்

ஊராட்சி ஒன்றியத்தினுடைய தேவைகள், அதிகமிருப்பதால், அரசின் நிதி உதவியோடு





கிராம மக்களுக்கு தக்க வசதி செய்துதரப் பொது நிதியிலிருந்து பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன; அவற்றின் விவரம் வருமாறு:

நடப்பு ஆண்டில் ஊராட்சி ஒன்றிய உபரி நிதியில்ருந்து ரூ.6.70 இலட்சம் மதிப்பீட்டில் 35 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.3.51 இலட்சம் மதிப்பீட்டில் 270 ஆழ்குழாய்க் கிணறுகள் சுத்தப்படுத்தப்பட்டன.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திட்ட வேலைகள்

கிராமப்புறங்களில் 34 கைப்பம்புகளும் 65 பவர் பம்புகளும் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும் ரூ.208.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப் பட்டு வருகின்றன. நகரப் பகுதிகளில் 47 குடிநீர்த் திட்டப்பணிகள் ரூ.127.54 இலட்சம் மதிப் பீட்டில் நடை பெற்று வருகின்றன.

## குடிநீர் ஆதாரங்கள் - பராமரிப்பு வேலைகள்

மதுரை மாவட்டத்தில் 5,600 கைப்பம்புகளும் 1,443 விசைப்பம்புகளும் பராமரிக்கப்படுகின் றன. கைப்பம்புகளைப் பழுதின்றிப் பராமரிக்க ரூ.17 இலட்சம் பெறுமானமுள்ள உதிரிப் பாகங்கள் சுழற்சி முறையில் வாங்கிப் பயன்படுத் தப்படுகின்றன. கைப்பம்பு/விசைப்பம்புகளைப் பராமரிக்க, நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.29,24,950 செலவழிக்கப்பட்டுள்ளன.

## தெருவிளக்குகள்

மதுரை மாவட்டத்தில் 36,295 தெரு விளக்குகள் உள்ளன. இவற்றைப் பராமரிக்க நடப்பு ஆண்டில் மின் கட்டணத்திற்கு ரூ.70 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. நிதி வசதி யில்லாத ஊராட்சிகளுக்கு மின் கட்டணம் செலுத்த, அரசு ரூ.15 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்ட்டர்கள் போன்ற மின் சாதனங்கள் ரூ.34 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

## ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு

பொதுமக்களின் வசதிக்கான, ஊராட்சி ஒன்றியச் சாலையைப் பராமரிக்க நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.10,55,066 செலவழிக்கப்பட்டுள்ளது.

## திருமண மண்டபங்கள்

இந்த மாவட்டத்தில் - ஏழை எளிய மக்கள் தனியார் திருமண மண்டபங்களில் அதிக வாடகை செலுத்தித் திருமணம் நடத்த முடியாத நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, 20 அம்சத் திட்ட ஊக்கு விப்புத் தொகையிலிருந்து நடப்பு ஆண்டில் உத்தம பாளையம், உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 3 திருமண மண்டபங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

## சித்தா மருத்துவமனை.

பொதுமக்களுக்கு, சித்தா வைத்திய முறையில் மருத்துவ சிகிச்சை அளிக்க, பொது கிராம சித்தா மருத்துவ மனைக்கு நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.13,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

## மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மானியம்

மகப்பேறு பெறும் தாய்மார்களுக்கு மருத்துவ வசதி அளிக்கவும், குழந்தைகளைப் பராமரிக்கவும் நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.15,21,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

## ஈமச்சடங்கு மானியம்

மதுரை மாவட்டத்தில் வாழுகின்ற ஆதி திராவிடர் குடும்பங்களில் மரணம் ஏற்படும்போது ஈமச்சடங்குச் செலவிற்காக ரூ.100 வீதம் நடப்பு

★ அருள்மிகு முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில், மதுரை மாவட்டத்தில் மட்டுமே இரண்டு உள்ளன. ஒன்று திருப்பரங்குன்றம்; இன்னொன்று உள்ள இடம் அழகர்மலை. புராணப்படி, முருகப் பெருமான் தெய்வானையை மணந்துகொண்டது திருப்பரங்குன்றத்திலேதான்; இது ஒரு மலைக்குடைவுக் கோயிலாகும். மதுரைக் கும் இதற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர். நாம் குறிப்பிட்ட மற்றொரு படைவீடு உள்ள இடம் அழகர்மலைக்குச் சற்று மேலே மலை மீதுள்ள பழமுதிர் சோலை. அதற்கும் சிறிது மேலே உள்ளது நூபுரகங்கை (சிலம்பாறு). இங்குள்ள சிறிய நீருற்றில் குளிப்பது, கங்கையில் நீராடுவதற்குச் சமம் என்று அழகர் பெருமானே பாண்டிய மன்னனுக்குக் கூறியதாகப் புராணம் தெரிவிக்கிறது. நூபுரகங்கைக்கு அருகிலேயே ராக்காயி அம்மன் திருக்கோயிலும் அமைந் துள்ளது. குரங்குகள் இங்கே கூட்டம் கூட்ட மாகத் திரிகிற அழகே அழகு!



ஆண்டில் 1,170 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு அரசு மானியம் ரூ.1,17,000 செலவழிக்கப்பட்டு உள்ளது

## தொழில் வளர்ச்சியில் மதுரை மாவட்டம்

தொழில் வளர்ச்சியிலும் மதுரை மாவட்டம் தலை நிமிர்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மாவட்டத்தில் இயங்கிவரும் தொழில்கள் பெரும்பாலும் விவசாயப் பொருட்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. மாறிவரும் வாழ்க்கை முறைகள் மற்றும் விஞ்ஞான வளர்ச்சிக் கேற்பப் புதிய தொழில்களைத் தொடங்கிப் பொருளாதார முன்னேற்றம் பெற, மாவட்டத் தொழில் மையம் அனைத்து உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிவருகிறது.

இம்மாவட்டத்தில் விவசாயப் பொருட்களை ஆதாரமாகக் கொண்டு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள், அரிசி மற்றும் மாவு ஆலைகள் சமையல் எண்ணெய் தயாரித்தல், தென்னை நார் உற்பத்திக் கூடங்கள், பருத்தி ஆடைகள் உற்பத்திக் கூடங்கள் பலவும் இயங்கி வருகின்றன.

மாவட்டத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைந்து பொருளாதார முன்னேற்றம் பெற அரசு பல்வேறு சலுகைகளையும் மானியங்களையும் மாவட்டத் தொழில் மையம் மூலம் அவ்வப்போது வழங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் உள்ள ஒன்பது வட்டங்களில் உசிலம்பட்டி வட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்டு பகுதியாக அறிவிக்கப்பட்டு, தொழிற்சாலையின் நிலையான முதலீட்டில் 20 சதவிகித மானியமாக வழங்கப்படுகிறது. வாடிப் பட்டி, ஆண்டிபட்டி, உத்தமபாளையம் வட்டங்கள் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப் பட்டு 15 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

முதல் மூன்று ஆண்டுகளுக்கு நிறுவனம் உபயோகப்படுத்தும் மின்சாரக் கட்டணத்தில் 40 சதம், 30 சதம், 20 சதம் மானியமாக வழங்கப் படுகிறது. மின்மானியம் மற்றும் சில சிறப்புத் தொழில்களுக்குச் சிறப்பு முதலீட்டு மானியமாக 20 சதவிகிதம் அல்லது உயர்ந்த அளவு ரூ.15,00,000 (பதினைந்து இலட்சம்) இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

## ஒருமுனைத் தீர்வுக்குழு

மின் இணைப்பை உரிய காலத் தில் பெற்றுத் தரவும் அதுகுறித்த இடர்பாடுகளைக் களையவும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவ ராகக் கொண்டு 'ஒரு முனைத்தீர்வுக்குழு' ஒன்று இயங்கிவருகிறது. 1992-93-இல் இக்குழுவின் உதவியால் நிறுவனங்கட்கு உரிமங்களும் மின் இணைப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

புதிதாகத் தொழில் துவங்க முனையும் தொழில் முனைவோருக்குப் பயிற்சித் திட்ட மொன்று 1990-91 முதல் இதுவரை 120 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 11992-93-இல் பயிற்சி வகுப்புகள் முற்றிலும் பெண்களுக்காகவே நடத்தப்பட்டன. 1993-94-இல் மகளிர், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தவர், மின்னணுத்துறையில் பட்டம் பெற்றவர் ஆகியவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் தனித்தனியே நடத்தப்படவுள்ளது.

• மதுரை மாவட்டத்தில் எங்கு நின்று பார்த்தாலும் எழுந்து நிற்கும் அரண்போல மேற்குத் தொடர்ச்சி மலை காட்சி தரும். ஆண்டிப்பட்டி மலை, வருஷநாடு மலை, சிறுமலை, காந்த மலை, கருவிமலை நத்தம், அழகர் மலை என்றெல்லாம் அம்மலைத்தொடர் குறிப்பிடப்படுகிறது.

● மதுரை மாவட்டத்தில் - வைகையாறு, மஞ்சளாறு, சுருளியாறு, வராக நதி, பாலாறு பெரியாற்றுக் கால்வாய், பொரந்தலாறு ஆகியவை பாய்ந்து பரவி பசுமை தேக்குகின்றன.

## தொழில் பேட்டை

கப்பலூரில் 24 ஏக்கர் நிலப்பரப்பில் 'ஆட்டோ மொபைல் தொழிற் கூட்டுறவுத் தொழிற்பேட்டை' ஒன்று பதிவு செய்யப்பட்டு ரூ.128.84 இலட்சம் முதலீட்டில் 240 தொழிற்கூடங்கள் நிறுவப்பட வுள்ளது. இங்கு தானியங்கி உதிரி பாகங்கள் தயாரித்தல், பழுதுபார்க்கும் தொழிற்கூடங்கள் இயங்கவுள்ளன. இங்கு 2,400 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் ரூ.480 இலட்சம் மதிப்பில் உற்பத்தியும் கிடைத்திட வாய்ப்புள்ளது.

மேலும் மதுரை வடக்கு வட்டம் 'உரங்கான் பட்டி' கிராமத்தில் 68.5 ஏக்கர் நிலப்பரப்பில் மதுரை பின்னலாடை தயாரிப்போர் சங்கத்தினரால் 150 தொழிற்கூடங்கடங்கிய தொழிற்பேட்டை அமைக்கக் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்தொழிற் பேட்டை மூலமாகத் துணைத் தொழில்கள் பெருகி வேலைவாய்ப்பும் அதிகரிக்கப் போதிய வாய்ப் பிருக்கிறது.



மதுரை நாகமலையில் உள்ள சமணர் கோயிலில் தீர்த்தங்கரர்.

ஆண்டிப்பட்டியில் 'சிட்கோ' நிறுவனத்தின் மூலம் உரிய வகையில் தொழிற்பேட்டைக்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு தொழிற்கூடங்கள் அமைத்துத் தொழில் வளம் பெருக்கும் வகையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரு கின்றன.

**1993-94-ஆம் ஆண்டுக்கான சிறுதொழில் வளர்ச்சி-குறியீடும் முன்னேற்றமும்**

| | குறியீடு | முன்னேற்றம் (30.9.93 முடிய) |
|---|---|---|
| தற்காலிக சிறுதொழில்கள் சான்றுகள் | 5160 | 2289 |
| நிரந்தர சிறுதொழில்கள் சான்றுகள் | 1330 | 578 |
| விற்பனைவரி தள்ளிவைப்பு | - | 6 நிறுவனங்களுக்கு ரூ.21.12 இலட்சம் |
| முதலீட்டு மானியம் முதல் காலாண்டு | ரூ.7.82 இலட்சம் | ரூ.3.6 இலட்சம் |
| மகளிருக்கான தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் | 40 | 40 |
| தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தொழில் பயிற்சி | 10 | 10 |
| மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோருக்கான பயிற்சி | 40 | 35 |
| பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் | 600 | 465 நபர்களுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. |
| குடிசைத் தொழில்கள் சான்றிதழ் | 440 | 225 |
| கைவினைத் தொழில்கள் சான்றுகள் | 440 | 229 |
| மின் மானியம் | 2 இலட்சம் | 2 இலட்சம் |

தமிழகத்தில் தொழிலில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் எனும் ஒரு தொழில் நோக்குடன் தமிழ்நாடு அரசு மேற்கூறிய பலவேறு ஊக்குவிப்புச் சலுகைகளையும் மானியங்களையும் மாவட்டத் தொழில் மையம் மூலமாக வழங்கு கிறது. எனவே இச்சலுகைகளைப் பயன்படுத்தி தொழில்களைத் தொடங்கி, வீடும் நலம்பெற்று பொருளாதார முன்னேற்றம் காண வாரீர் என அழைக்கிறோம். ●

# மதுரை மாவட்டத் திருக்கோயில்கள்


அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில்.

போ. இராமராஜூ
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, மதுரை-1.

தமிழ்நாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்டு, மதுரை மாவட் டத்தில் மட்டும், ஆண்டு வருமானமாக ரூ.10,000/-க்கு மேல் வருமானமுள்ள திருக் கோயில்கள் 90 உள்ளன.

மதுரை மாவட்டத் திருக்கோயில்களில், மிகவும் புகழ் பெற்றும், வரலாற்றுச் சிறப்புப் பெற்றும், சுற்றுலா மையமாகவும், கீழ்க்கண்ட திருக் கோயில்கள் விளங்கி வருகின்றன:

1. மதுரை நகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

2. அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்.

3. திருமோகூர், அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில்.

4. திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிர மணியசுவாமி திருக்கோயில்.


வண்டியூர் தெப்பக்குளம் மாரியம்மன் கோயில்- நிலா வெளிச்சத்தில்!



அருள்மிகு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்.

5. அழகர்கோவில், அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயில்.

இதில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம் முதல் படை வீடு; அழகர்கோவில், சோலைமலை முருகன் கோயில் ஆறாவது படை வீடு ஆகும்.

பாடல் பெற்ற ஸ்தலங்களாக சைவத்திருக் கோயில்கள் நான்கும், வைணவத் திருக் கோயில்கள்-3ம், இம்மாவட்டத்தில் விளங்கி வருகின்றன. அவை பின்வருமாறு:

**மதுரை மாவட்டத்தில் உள்ள பாடல் பெற்ற சைவத் திருக்கோயில்கள்**

1. அருள்மிகு திருவாப்புடையார் திருக் கோயில், செல்லூர்.

2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக் கோயில், திருப்பரங்குன்றம்.

3. அருள்மிகு ஏடகநாதசுவாமி திருக்கோயில், திருவேடகம்.

4. அருள்மிகு திருமறைநாதசுவாமி திருக் கோயில், திருவாதவூர்.

**பாடல் பெற்ற வைணவத் திருக்கோயில்கள்**

1. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர் கோவில்.

2. அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக் கோயில், திருமோகூர்.

3. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை நகர்.

மதுரை மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட திருக் கோயில்களில் கீழ்க்கண்ட விவரப்படி முக்கியத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக் கோயிலில் நடைபெறும். ஸ்ரீ மீனாட்சி திருக் கல்யாணம் சித்திரைத் திருவிழா.

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்- அழகர் கோயிலில் நடைபெறும். சித்திரைத் திருவிழா (வைகையாற்றில் கள்ளழகர் எழுந்தருளும் விழா).


வாய்மையே வெல்லும்

# தமிழ்நாடு
# அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## விளம்பரம்

தொகுதி 2 மற்றும் 3 பணிகளுக்கான முதனிலை எழுத்துத் தேர்வுகள், முறையே 8.1.1994 (சனிக்கிழமை) மற்றும் 9.1.1994 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளன என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. நுழைவுச் சீட்டுகள் விண்ணப்பதாரர்களுக்குத் தனித்தனியே குறித்தகாலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

DIPR/1817/MS/93

● மதுரை என்ற சொல்லுக்கு இனிமை என்ற பொருளுண்டு. அமிழ்தினுமினிய தமிழ் வளர்த்த நகரமாதலால் மதுரை என்ற மதுரமான பெயரைப் பெற்றது மதுரை மூதூர். பெரும்பாலும் மருத நிலவளம் கொண்ட மாவட்டம் மதுரை; மருதம் என்பது வயலும் வயல்சார்ந்த இடமும் ஆகும். இதனாலேயே அக்காலத்தில் மருதை என்றே இந்நகரின் பெயர் வழங்கப்பட்டதாகவும், நாளடைவில் அதுவே மருவி மதுரை ஆனது என்றும் கூறப்படுவதும் உண்டு. - என். சுப்பிரமணியன்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்-திருப்பரங்குன்றத்தில் நிகழும். வைகாசி விசாகம்-பங்குனி உத்திரம்.

அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில், சதுரகிரியில் கொண்டாடப்படும். ஆடி அமாவாசை.

அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில்-வீரபாண்டியில் எடுக்கப்படும். சித்திரைத் திருவிழா.

அறநிலையத்துறையின் சார்பில், கீழ்க்கண்ட திருக்கோயில்களில் முறைப்படி கீழ்க்கண்ட விவரப்படி, பள்ளிக்கூடங்கள், அன்பு இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சித்த வைத்தியசாலை, வேத ஆகமப் பயிற்சி மையங்கள் ஆகியன நடத்தப் பட்டுவருகின்றன.

**பள்ளிக்கூடங்கள்**

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை.

அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம்.

அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோவில்.

அருள்மிகு சுந்தரராஜா ஆரம்பப்பள்ளி, அழகர்கோவில்.

**அன்பு இல்லங்கள்:**

திருவாதவூர் - அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

அழகர்கோவில் - அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோவில்.



அருள்மிகு அழகர் கோயில்.

**முதியோர் இல்லம்:**

திருப்பரங்குன்றம் - அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

**சித்த வைத்தியசாலை:**

திருப்பரங்குன்றம் - அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

**வேத ஆகமப்புத்தொளிர் பயிற்சி மையங்கள்:**

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை.

ஒரு கால பூஜைக்குக் கூட வழியில்லாத திருக்கோயில்களில், ரூ.3,500/- அரசு நிதியுதவி அளிக்கப்பட்டு, அதன் மூலம் ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது.

இது தவிர ஒரு கால பூஜைக்காக, ரூ.25,000/- முதலீடு செய்யும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, மேற்படித் தொகை நான்கில் ஒரு பங்குத் தொகையான ரூ.6250/-ஐப் பொதுமக்களிடம் உபயமாகப் பெற்றும், மீதித் தொகையான ரூ.18,750/-ஐ அரசிடமிருந்து மானியமாகப் பெற்றும், மொத்தத் தொகை ரூ.25,000/-ஐ முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டி மூலம் நிரந்தரமாக ஒரு கால பூஜை நடத்துவதற்கு, சுமார் 90 ஆலயங்களில் விரைவில் திட்டம் அமல் செய்யப்படவுள்ளது.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், வேத பாராயணம் பாடுவோர், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், அரையர் சேவை செய்வோர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமும், பழங்கால இசைக்கருவிகள் வாசித்து ஓய்வில் இருப்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமும் விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள நலிவடைந்த திருக்கோயில்களுக்கு, திருப்பணி செய்வதற்காக, அரசு மானியமாக ரூ.10,000/- வழங்கப்பட்டு, திருப்பணி நடைபெற்றுவருகிறது.

கீழ்க்கண்ட திருக்கோயில்களுக்குச் சிறப்புத் திருப்பணிக்காக, தமிழ்நாடு அரசு மானியம் வழங்கியுள்ளது:

அருள்மிகு காளமேகப்பெருமான் திருக்கோயில், திருமோகூர்.

அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில், சதுரகிரி.

அருள்மிகு மலைக்கிணறு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், செங்குறிச்சி.

மதுரை மாவட்டம்:

# ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள்



"குழந்தைகள் நாட்டின் மிக உயர்ந்த முக்கியமான சொத்தாகும்" என ஆகஸ்ட் 1974-இல் தெரிவித்ததுடன், அதனைத் தேசியக் கொள்கையாகவும் அரசு அறிவித்தது. அவர்களின் உணவு, வளர்ப்பு மற்றும் எண்ணங்கள் ஆகியவற்றினைப் பேணுதல் தேசத்தின் பொறுப்பாகும் எனவும் அறிவித்தது. குழந்தை பிறப்பதற்கு முன்னும், பிறந்த பின்னும், வளர்ச்சிக் காலத்திலும் அவர்களின் உடல்நிலை, மனநிலை மற்றும் சமூகவளர்ச்சி ஆகியவற்றினைப் போதிய அளவில் கவனிக்கும் பணியினை ஏற்படுத்துவது ஒரு மாநிலத்தின் முக்கியக் கொள்கையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குழந்தைகளின் வளர்ச்சியைத் தேசியக் கொள்கையாக அறிவிக்கப்பட்ட பின்னும், ஆரம்பகால குழந்தைப் பருவத்தின் உடல்நிலை, மன நிலை மற்றும் சமூக வளர்ச்சிக்கான ஆதாரங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன என்று அறியப்பட்டது. குழந்தைப் பருவத்திலேயே இறப்பு, நோய், பள்ளி செல்லாத நிலை போன்றவற்றினைத் தடுக்கவும், குறைக்கவும் இந்திய அரசானது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துவக்கியது. அதன்படி 1975-ஆம் ஆண்டு 33 முன்னோடித் திட்டங்களையும், அதன் பின் 1988-89-ஆம் ஆண்டில், தேசத்தில் உள்ள கிராமப் புறங்களில் 1,201 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களையும், நகர்ப்புறங்களில் 194-ம், மலைப் பகுதிகளில் 547 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களையும் ஆக மொத்தம் 1942 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களையும் துவக்கியது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமானது, ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு அவர்கள் பயனடையும் விதத்தில் சொந்தக் கிராமத்திலோ அல்லது அவர்கள் வசிக்கும் இடத்திலோ பணி செய்வதாகும்.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் பணிகள்**

1. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நிலையை மேம்படுத்துதல்.
2. குழந்தையின் உடல், உள்ள அறிவு, சமூக வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தல்.
3. குழந்தைகள் இறப்பு விகிதம் நோய்களினால் பாதிக்கப்படும் நிலை, பள்ளி செல்லாநிலை, சத்துப் பற்றாக்குறை நோய், ஆகியவற்றைக் குறைத்தல்.
4. குழந்தைகள் வளர்ச்சிக்காகப் பாடுபடும்படி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

— வீ.பா. பத்மகுமரேசுவரி
திட்ட அலுவலர்
ஒருங்கிணைந்த குழந்தைகள்
வளர்ச்சித் திட்டப்பணி
மதுரை

5. முறையான சத்துணவு தாய்மார்களுக்கு வழங்கி அவர்களின் இயல்பான தேகநிலையினைப் பாதுகாப்பதுடன் குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்க வழிவகை செய்தல்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கும், தாய்மை அடைந்துள்ள பெண், பாலூட்டும் பெண் ஆகியோர்களுக்குப் பின்வருமாறு பணித் திட்டங்கள் உள்ளன.

1. இணைஉணவு வழங்குதல்.
2. நோய்த் தடுப்பு
3. உடல்நலப் பரிசோதிப்பு
4. தீவிர சிகிச்சை
5. சத்துணவு மற்றும் உடல்நிலைக் கல்வி
6. முறைசாரா முன்பருவக் கல்வி.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தைச் சார்ந்த பலவேறு திட்டப் பணிகள், பாதுகாப்பான குடிநீர் வசதி ஏற்படுத்துதல், வயது முதிர்ந்த பெண்களின் கல்வி அறிவு மேம்படுத்துதல், நடமாடும் உணவு வசதி போன்றவற்றினை விரிவுபடுத்துதல் போன்றவற்றினைச் செயல்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கூடுதல் சத்துணவு

குறைந்த வருவாய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், பிரசவ நிலையிலுள்ள பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்குக் கூடுதல் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எடை மற்றும் வயது ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு கூடுதல் சத்துணவு வழங்கப்படுகிறது. மருத்துவ ரீதியில் சத்துணவு வழங்குதல் சாலச் சிறந்ததாகும்.

## நோய்த் தடுப்பு

தொண்டை அடைப்பான், இரணவாத ஜன்னி, கக்குவான் இருமல், இளம்பிள்ளைவாதம் ஆகிய நோய்களிலிருந்து காக்கும்பொருட்டு, அனைத்துக் குழந்தைகளுக்கும் நோய்த் தடுப்பு முறை வழங்கப்படுகிறது. 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு டைபாய்டு காய்ச்சல் வராத அளவில் தடுப்பூசி போடப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் இரணவாத ஜன்னி தடுப்பூசி போடப்படுகிறது. இரும்புச்சத்து மாத்திரையும் வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்தும், இரும்புச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகிறது.

## உடல்நிலை பரிசோதனை

பிரசவ நிலையிலுள்ள தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் உடல்நிலையினைப் பரிசோதிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. குழந்தைகளை வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்பூச்சி ஆகிய நோய்களிலிருந்து காக்கும்பொருட்டு குழந்தைகளின் நலனறிய சிற்சில பரிசோதனை செய்யப்படுகிறது. காலந்தவறாது பரிசோதிக்கப்படுகிறது.

## தீவிர சிகிச்சைப்பணி

இப்பணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. மிகவும் மோசமான

## மதுரை: சில முக்கிய ஆண்டுகள்

*1843* - அரசு மருத்துவமனை திறக்கப்படுதல்.
*1866* - மதுரை நகராட்சியாகியது.
*1869* - மத்திய சிறைச்சாலை கட்டப்பட்டது.
*1873* - மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
*1875* - மதுரை-திருச்சி இருப்புப்பாதை தொடக்கம்.
*1880* - மதுரைக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது.
*1881* - பசுமலையில் அமெரிக்கன் கல்லூரி அமைப்பு.
*1885* - யானைக்கல் அருகே வைகையில் கீழ்ப் பாலம் கட்டப்பட்டது.
*1892* - மதுரை ஆலை (Madura Mills) தொடக்கம்.
*1900* - 'மங்கம்மாள் சத்திரம்' கட்டுமானப் பணி முடிவு.
*1903* - மதுரைத் தமிழ்ச் சங்கம் மூலம் 'செந்தமிழ்' ஏடு வெளியிடப்படல்.
*1911* - மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதி, இராமநாதபுரம் மாவட்டமாகப் பிரிக்கப்படுதல்.
*1913* - பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்.
*1921* - மீனாட்சி ஆலை தோற்றம்.
*1933* - மதுரை நகராட்சிக்கு நிர்வாக அதிகாரிகள் நியமனம்.
*1938* - வைத்தியநாத ஐயர் தலைமையில், அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில் அரிசன மக்கள் நுழைவு.
*1918* - சீமாட்டி டோக் கல்லூரி தொடக்கம்.
*1949* - தியாகராசர் கல்லூரி தொடக்கம்.
*1954* - மதுரை மருத்துவக் கல்லூரி தொடக்கம்.
*1957* - செந்தமிழ்க் கல்லூரி அமைப்பு.
*1958* - மதுரை விமானப் போக்குவரத்து தொடக்கம்.
*1964* - வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.
*1965* - மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி தொடக்கம்.
*1966* - மதுரைப் பல்கலைக்கழகம் நிறுவப்படல்.
*1969* - அரசரடியில் தமிழ்நாடு இறையியல் கல்லூரி தொடக்கம்.
*1971* - மதுரை மாநகராட்சியாக உயர்வு பெறல்.
*1974* - இராஜா முத்தையா செட்டியாரால், தமிழிசைச் சங்கம் நிறுவப்பெறுதல்.
*1978* - மதுரை நகரப் பேருந்துத் தடங்கள், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு உட்படல்.
*1981* - ஜனவரி 4 முதல் 10 வரை, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பெறல்.

—தொகுப்பு: மு.பா. அன்புச்சோழன்

● மதுரைமா நகரில் 1888-ல்தான், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

# மதுரை: சில குறிப்புகள்



★ மதுரைக்கு 21 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது அருள்மிகு அழகர் கோவில். இங்கே எழுந்தருளியிருப்பவர் அருள்மிகு திருமால் (விஷ்ணு). கள்ளர் என்ற சமூகத்தார் முக்கியமாக வழிபடும் தெய்வமாக இருப்பதால் இதற்குக் கள்ளழகர் என்று பெயராம். பாண்டிய மன்னர்கள் பலரும் இக்கோயிலுக்குப் பலவகை நிவந்தங்கள் அளித்துள்ளனர். சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்த கல்யாண மண்டபத்தில் உள்ள அழகிய கற்றூண்கள், விமானம் இங்குண்டு. மதுரை மாநகரில் சித்திரைத் திருவிழா நிகழும் போது, அருள்மிகு கள்ளழகர் மதுரைக்குக் கொண்டுவரப்படுவார். கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் திருவிழா, தமிழகத்திலேயே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

★ ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் (1866) தான் மதுரை மாநகர் ஒரு நகராட்சி ஆகியது; அப்போது அந்நகரின் மக்கள்தொகை 41,600; 1980 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 8,00,000. அன்று முதல் 1971 வரை மதுரை மாநகராட்சியில் 41 பேர் தலைவர்வர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். திரு வி.எச். லெவிஞ் (1866-67) — திரு எஸ். முத்து (1969-71).

★ மதுரை மாவட்டம் மேலூரிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது திருவாதவூர்; சைவ சமயாச்சாரியார் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகர் பிறந்த ஊர் இது. 'நரிதனைப் பரியாக்கிய' புராணக் கதையின் நாயகரான இவரைத் திருவாதவூரர் என்றும் குறிப்பிடுவதுண்டு.

★ இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற ஏராளமான தியாக சீலர்கள் மதுரை மாவட்டத்தில் இருந்திருக்கிறார்கள். அதனை நினைவுகூரும் வகையில், மதுரை தமுக்கம் கலையரங்கம் அருகே அழகியதோர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு உள்ளது.

— வி. கந்தசாமி
('மதுரை வரலாறும் பண்பாடும்' நூலிலிருந்து).

• மதுரை நகருக்கு 1875-ல் புகைவண்டித் தொடர்பு ஏற்பட்டது.

நிலையிலுள்ள தாய்மார்கள் சிறப்புச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு Referral நிறுவனங்களுக்கு அனுப்பபடுகிறார்கள். குழந்தைகளுக்கும் உரிய வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையம், துணை நிலையம், மருந்தகம், மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் Referral மருத்துவமனைகளில் உள்ளன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தைச் சார்ந்த மருந்து அலுவலர், மருத்துவச் செவிலியர் தனிச்சிரத்தை எடுத்துச் செயல்படுகின்றனர்.

## சத்துணவு மற்றும் உடல் நலக்கல்வி

13 வயதிலிருந்து 45-வயதிற்குட்பட்ட அனைத்துப் பெண்களுக்கும், அவற்றுள் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு சத்துணவும் உடல்நிலைக் கல்வியும் வழங்கப்படுதல். சிறப்பு நடவடிக்கைகள், அங்கன்வாடி பணியாளர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் வீடுகளுக்கு வருகை தந்து சமையல், சுகாதாரம் போன்றவற்றினை எவ்வாறு காத்தல் போன்றவற்றினைச் செயல் படுத்திக்காட்டும் பணியினை மேற்கொள்ளுதல்.

3 முதல் 5-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மையங்கள், பாலர் பள்ளிகள் ஒவ்வொரு கிராமம் மற்றும் வசிக்கும் இடத்திலும் உள்ளன. இதன் நோக்கமானது, குழந்தைகளின் விருப்பநிலை, சக்தி மற்றும் பழகும் தன்மை ஆகியவற்றினை மேம்படுத்துதல்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட நிர்வாக அமைப்புகள், கிராமப்புறங்களிலுள்ள இன வளர்ச்சி வட்டாரம், மலைப்பகுதிகளுக்கு மலைவாழ் மக்கள் வளர்ச்சி வட்டாரம், நகர்ப்புறங்களில் கூட்டமாக அமைந்துள்ள சேரிப் பகுதிகள் ஆகியவற்றில் அமைந்துள்ளன. இத்திட்டப்பணிகள், மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் வறட்சிப் பகுதியினருக்கும் முன்னுரிமை அளிப்பதற்காகத் தேர்விடப்பட்டுள்ளன.

ஒரே இனத்தைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் வசிக்கும் பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பணிகளை மேற்கொள்கின்றன. பொதுவாக ஒரு அங்கன்வாடி 1000 மக்கள் தொகையுள்ள கிராமம் மற்றும் நகர்ப்புறங்களையும், 700 மக்கள் தொகையுள்ள மலைவாழ் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

## முறைசாராக் கல்வி மற்றும் முன்பருவக் கல்வி

இத்திட்டத்தில் முறைசாரா மற்றும் பாலர் கல்வி மையங்கள் ஒரு முக்கிய அங்கமாகும். இது அனைத்துக் குழந்தைகளும் வளர்ச்சியுற மிகவும் பயன்படுவதுடன், குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் செயல்படவும் பெரிதும் பயனுள்ளதாக உள்ளது.

முறைசாரா மற்றும் பாலர் கல்வி முறையானது 3 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



• ஆசைக்கும் அச்சத்திற்குமிடையே ஊசலாடுவோர், பூசலின் போது ஏசலும், பூரித்திருக்கும்போது புன்னகையும் பெறமுடியுமேயொழிய வெற்றி பெறமுடியாது.

—பேரறிஞர் அண்ணா

## முறைசாராக் கல்வியின் நோக்கம்

அங்கன்வாடியில் உள்ள பாலர் பள்ளிக் கல்வியின் நோக்கமானது, குழந்தைகளின் உடல்ரீதியான, மன ரீதியான நல்லொழுக்கம் மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்தலும், மொழி மற்றும் புத்திசாலித்தனத் தினை வளர்ச்சியுறச் செய்தலுமே ஆகும்.

## பாலர் பள்ளிக் கல்வியின் நோக்கம்

1. குழந்தைகள் நல்ல உடல் வளர்ச் சியுடன் இருக்கவும், திடகாத்திர மாக இருக்கவும், கூட்டுறவுடன் சாமர்த்தியமாக இருக்கவும் பயன் படுதல்.

2. சமூகப் பொறுப்புகள், விரும்பத் தக்க உறவு முறைகள் குழந்தை களுக்கு ஏற்படவும் மற்றவர்களின் உரிமையினை மதிக்க ஏற்றுக் கொள் ளவும், மற்ற குழந்தைகளுடன் பழக வும் பயன்படுதல்.

3. குழந்தைகளின் கற்பனைத்திறன் உருவாகவும், ஆர்வம் ஏற்படவும் வழிவகை செய்தல்

4. குழந்தைகளின் இயற்கையான சண்டையெழுப்புகிற குணத்தினை யும், நாசப்படுத்துகிற அல்லது பாழாக்குகிற குணத்தினையும் கட் டுப்படுத்துவதுடன், அவர்களின் சுயமான சக்தி மற்றும் குணநலனை ஒருவழிப்படுத்தவும் பயன்படுதல்.

5. குழந்தைகளின் புத்திசாலித்தனத் தினை வளர்ச்சியுறச் செய்யவும் சொந்த மொழியில் தனது உணர்ச்சி மற்றும் திறமைகளை வெளிப்படுத்த வும், சுற்றுப்புறத்தினை அறிந்து கொள்ளவும் பயன்படுதல்.

6. குழந்தைகள் வேலை செய்யக் கற் றுக் கொள்ளுதலை உற்சாகப்படுத் தலும், தனியாக விளையாடவும், பெரியோர்களிடமிருந்து பெறப்படும் உதவி மற்றும் வழி காட்டுதலை ஏற்றுக்கொள்ள இயல வும் வழிவகை செய்தல்.

7. குழந்தைகளின் நல்ல பழக்க வழக்கங்கள் மேம்படவும் உடல் ஆரோக்கியமாக இருக்கவும் பயன் படுதல்.

பாலர் பள்ளிகளில் அனைத்துக் குழந்தைககளின் வளர்ச்சியினை மேம்படுத்துவதுடன், 24 பல்வேறு தலைப்புகளைத் தேர்வு செய்து, அந்த 24 தலைப்புகளின் கீழ் குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் பாடமானது இருவாரத் திற்குத் தொடர்ச்சியாக நடத்தப்படு வதுடன், அடுத்த இரு வாரத்திற்கு வேறொரு தலைப்பு பாடமாக நடத்தப்படுகிறது. இத்தலைப்புகள் குழந்தைகளுக்கு அங்கன்வாடிப் பணியாளர்களால் தயார் செய்யப் பட்ட உபகரணங்களின் உதவியால் பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

1. சுதந்திர உரையாடல்
2. மொழிக்கல்வி
3. எண் பயிற்சி
4. செய்கைப்பாடல்
5. கதை சொல்லும் முறை
6. அறிவியல் அனுபவம்
7. திட்டமிட்ட விளையாட்டு
8. புலப்பயிற்சி
9. தினசரி வாழ்க்கைச் செயல்
10. ஆக்க வேலைகள்
11. பொம்மலாட்டம் நடித்துக் காட்டுதல்.
12. சுதந்திர விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி.

நடமாடும் குழு பயிற்சியாளர் களால் அங்கன்வாடிப் பணியாளர் களுக்குப் பாலர் பள்ளி செயல் பாடுகள் குறித்துப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அங்கன் வாடிப் பணியாளர்கள் ஒவ்வொரு தலைப்புக்கும் பாடங்களைத் திட்ட மிட்டுத் தயார் செய்வதுடன், குறிப்பிட்ட தினங்களில் குழந்தை களுக்கு வகுப்புகளும் நடத்துகின்றனர்.

இப்போது மதுரை மாவட்டத் தில் 5 திட்டங்களும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 3 திட்டங் களும் இராமநாதபுரம் மாவட்டத் தில் 3 திட்டங்களும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத் தில் ஒரு திட்டமும் ஆக மொத்தம் 12 திட்டங்கள் மதுரை திட்டக்குழு அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ் வொரு திட்டத்தின் பெயரும் அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மைய எண்ணிக்கையும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கையும் திட்டத்தின் பெயர்களும்

திட்டம்-1-க்கு 104 மையங்கள்,
திட்டம்-2-க்கு 76 மையங்கள்,
திட்டம்-3-க்கு 91 மையங்கள்,
திட்டம்-4-க்கு 90 மையங்கள்,
தேனி-84

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத் தில் ஒதுக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கையும், திட்டத்தின் பெயர்களும்

திண்டுக்கல்-100,
நிலக்கோட்டை-122,
வடமதுரை-89

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒதுக் கப்பட்ட மையங்களின் எண்ணிக் கையும், திட்டத்தின் பெயர்களும்

இராமநாதபுரம்-52, போகலூர் -42, பரமகுடி-68

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட மையம் மற்றும் திட்டத்தின் பெயர்

தேவகோட்டை-59

மொத்தம் 977 மையங்கள். •

தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது தான் அறிவு.

—கன்பூஷியஸ்



• மதுரை நகரம் மின்வசதி பெற்ற ஆண்டு 1926.

## சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

*1* சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) *25* h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

*1* இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.*24,000*/-க்கான முதலீடு

*2* மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்

*2* நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்

*3* ஐந்தாவது பரிசுகள் - *2* நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் *6* நாள் தென்னிந்திய சுற்றுலா

*10* ஆறாவது பரிசுகள் - *1* சவரன் (*22* காரட்) தங்கநாணயம்

*600* ஏழாவது பரிசுகள் - ரூ.*100*/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- **இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)**
- **கிசான் விகாஸ் பத்திரம் (KVP)**
- **தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE)**
- **தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)**
- **15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)**
- **மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)**
- **ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்**
  **1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)** **1% ஊக்கத்தொகை**
- **3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)**
  **அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)**

**மேலும் 2%** ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

**வெளியீடு: இயக்குநர்,**
**சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,**
**சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685**

சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/884/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

# மதுரை மூதூர்

'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை'...

'தென்தமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரை!...'

—இப்படிப் பல பழந்தமிழ் இலக்கியங் களிலே மதுரை மாநகரின் மாண்பு குறை வறச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய போற்றுதலுக்கும் புகழுதலுக்கும் காரணம் என்ன என்று பார்க்கின்றபோது, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையுடைய திருநகர் அது எனத் தெரியவரும்.

'படுத்திருக்கும் வினாக்குறி போல் மீசை வைத்த
பாண்டியர்கள் வளர்த்த மொழி...'

—என்று, இற்றைக் கவிஞர் சுரதா அற்றை நாள் பண்டியரின் அருஞ்சிறப்பைப் பாடுகிறார்.

உலகமொழி என இன்றைக்குச் சொல்லப்படுகின்ற ஆங்கிலத்தின் பிறப்பு வளர்ப்பு பற்றி அறிய முடிகிறது; ஆராய முடிகிறது. ஆனால் தமிழ் மொழியின் தோற்றமும் பிறப்பும் பற்றி ஆராய்ச்சி மனம் கொண்டவர்களாலும் அறிய முடியவில்லை.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்னே தோன்றி, பழமையும் தொன்மையும் கொண்டு, பன்னெடுங் காலமாக மாறா இளமையுடனும் மங்காப் பொலிவுடனும் வாழ்ந்து வளர்ந்துவரும் மொழியான நமதருந் தமிழுக்குத் - தனக்கென ஒரு தனித்துவமும் வரலாறும் கொண்ட தமிழுக்கு மாட மா மதுரை யிலே சங்கம் அமைத்திருந்த காலம் பற்றிக் கூறவந்த மூதறிஞர் பலரும் பலவிதமாகக் கூறினர்.

**முத்தமிழும் முச்சங்கமும்**

சங்ககாலம் கி.மு.8000 முதல் கி.பி. 100 ஆக இருந்திருக்கலாம் என்கிறார். வி.கே. சூரியநாராயண சாஸ்திரியார்; கி.பி.8 முதல் 9-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம், என்கிறார், ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல்; கி.மு.500 என் கிறார் எம். சீனிவாச ஐயங்கார், கி.மு.1015 முதல் கி.பி.150 வரை இருக்கக்கூடும் என்கிறார் தாமோதரம் பிள்ளை.

இன்னும் இதற்கோர் முடிவு உண்டானபாடில்லை.

பீடும் பெருமையும் கொண்ட நம் தமிழுக்குப் பாண்டிய மன்னர்கள் கூடல் மாநகரில் சங்கம் வைத்திருந்த விவரம் இறையனாராகப் பொருளிலேதான் காணப்படுகிறது.

அதன்படி—

பழமைக்குப் பழமையாய், புதுமைக் குப் புதுமையாய் விளங்கிடும் நம் தமிழுக்கான தலைச் சங்கம் தென் மதுரையில் அமைந்திருந்தது. அதனைக் காய்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாகப் பாண்டிய மன்னர்கள் 89 பேர் காத்து வளர்த்தனர். 4449 பேர் அங்கம் வகித்த இச்சங்கம் 4440 ஆண்டுகள் இருந்து கடல் கோள்பட்டது. இந்தத் தலைச் சங்கத்திலே தான் பரிபாடல், முதுகுருகு, முதுநாரை முதலான பல நூற்கள் பாடப்பட்டன.

வாழையடி வாழையென வாழ்ந்த பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் உடைய தமிழுக்கான இடைச்சங்கம் கபாடபுரத்திலே நிறுவப்பட்டது. பாண்டிய மன்னர்கள் வெண்டேர்ச் செழியனிலிருந்து முடத்திரு மாறன் ஈறாக 59 பேர், இதன் புரவலர்கள்; 3,700 பேர் இதில் பங்கேற்றுப் பாடினர். தமிழ்நலம் நாடினர்; கலி, குருகு, அகவல், வெண்டாளி, வியாழ மாலை எனப் பல நூற்கள் வெளிவரக் காரணமாயிருந்த இந்த இடைச்சங்கம், 3,700 ஆண்டுகள் இருந்து சிறந்திருந்த நிலையில் கடல் கொள்ளப்பட்டது.

உத்தர மதுரையில், மாமன்னன் முடத்திருமாறனால் துவக்கப்பட்டது கடைச் சங்கம். உக்கிரப்பெருவழுதி வரை 49 பேர், கால வெள்ளத்தால் அழிக்க முடியாத இலக்கியச் செல்வங்களும் இலக்கண அரண்களும் உடைய நம் தமிழ்காத்த சங்கம் காத்தனர். 1850 ஆண்டுகள் அரும்பணியாற்றிய இச் சங்கத்தில் 449 புலவர் பெருமக்கள் அணி செய்தார்கள். சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், கணக்காயனார்மகனார் நக்கீரனார், மதுரை இளநாகனார் உள்ளிட்ட அப்புலவர் பெருமக்கள்- நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, கூத்து வரி, சிற்றிசை முதலான சிறந்த நூல்கள் பல தோன்றிடக் காரண மாயினர்.

முத்தமிழ் வளர்த்திட முச்சங்கங்களின்

## சான்றோரின் சிலைகள்!

★ உலகத் தமிழ் மாநாடு 1981-ஆம் ஆண்டில் நடைபெற்றபோது மதுரை மாநகரில் நிறுவப்பட்ட திருவுருவச் சிலைக்குரிய ஆன்றோர்களின் விவரங்கள்: திருவள்ளுவர், தொல்காப்பியனார், தத்துவ போதக சுவாமி (Rubert De Nobili), பாண் டித்துரைத் தேவர், கவிமணி தேசிக விநாயகம், உ.வே.சாமிநாதையர், திரு வி. கல்யாணசுந்தரனார், ஆறுமுக நாவலர், சோமசுந்தர பாரதியார், வேத நாயகனார், தனிநாயக அடிகள், வீரமா முனிவர், திருமலை நாயக்கர், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

—எம். கஸ்தூரிபாய்





சிறப்பிவை. இவை மட்டுமா மதுரையின் மாண்பு? இன்னும் பல இலக்கியச் சான்றுகளே உண்டு. இதோ, சில:

**மதுரையின் பிறபெயர்கள்**

அழகு தமிழ் இலக்கியத்தில் மதுரையின் பிற பெயர்களாக ஏறத்தாழ ஐம்பது பெயர்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு: அங்கண் மூதூர், ஆலவாய், உயர் மதிற்கூடல், கடம்பவனம், கன்னுபுரம், கூடற்பதி, கூடல், கூடல்மா நகரம், கூடலம் பெரும்பதி, சிவராசதானி, சிவன் முத்தித் தலம், தக்கண மதுரை, தமிழ் கெழுகடல், திறல் மதுரை, திருமதுரை, திருமலி மூதூர், திருமாமதுரை, திருவாலவாய், துவாத சாந்தத் தலம், தெய்வத் தமிழ்க் கூடல், தெளி தமிழ்க் கூடல், தென் மதுரை, தென் மதுராபுரம், தொன் மதுரை, நான்மாடக் கூடல், பூலோகக் கயிலாயம், பூலோகச் சிவலோகம், பெரும் பெயர் மதுரை, பொற்கூடல், மதுரை, மதுராபுரி, மதுரா நகர், மதுரை மூதூர், மதுரைப்பதி, மருதை, மல்லன் மூதூர், மலிபுகழ்க்கூடல், மாடமதுரை, மும்மைத்தமிழ்க் கூடல், வழுதிக்கூடல், வெள்ளியம்பலம்.

**புகழ்பாடும் நூற்கள்**

சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தத் தக்க தமிழ் வளர்த்த மதுரை பற்றிய குறிப்புக்கள் பல்வேறு தமிழிலக்கியங்களிலே காணக்கிடைக்கின்றன. எவையெல்லாம் அவை தெரியுமா?

அகநானூறு, அழகர் அந்தாதி, அழகர் கிள்ளை விடுதூது, இறையனார் அகப்பொருள் உரை, ஔவையார் தனிப்பாடல்கள், கல்லாடம், கலித் தொகை, கலிங்கத்துப்பரணி, கந்த புராணம், கந்தர் கலிவெண்பா, கம்பர் தனிப்பாடல்கள், காளமேகப் புலவர் பாடல்கள், கூடற்பள்ளு, கோடீச்சுரக் கோவை, சங்கர சோழனுலா, சிலப் பதிகாரம், சிறுப்பாணாற்றுப்படை, சொக்க நாத வெண்பா; தக்கயாகப் பரணி, தமிழ்ச் சங்க மான்மியம், தமிழ்விடு தூது, திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக் கோவையார், திருமுருகப்பாசுரம், திருமுருகாற்றுப்படை, திருவாலவாயு டையார் கோவில் திருப்பணி மாலை, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருவாசகம், தேவாரம், தேவையுலா, பரஞ்சோதி முனிவர் திரு விளையாடற் புராணம், பரிபாடல், பரிபாடல் திரட்டு, பாண்டிக்கோவை, பாண்டிமண்டல சதகம், புகழேந்திப் புலவர் பாடல்கள், புறநானூறு, புறத் திரட்டு (ஆசிரிய மாலை) பெரிய புராணம்.

-இவை மட்டுமா? இன்னும் நீள்கிறது பட்டியல்.

நற்றிணை, நந்திக் கலம்பகம், நாரை விடு தூது (காளிமுத்துப் புலவர் பாடியது) நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், நெடுநல்வாடை, மதுரைக் கலம்பகம், மதுரைக்காஞ்சி மதுரைத் தலபுராணம், மதுரைத் திருப்பணிமாலை மதுரைத் தேவாரம், மதுரை மான்மியம், மதுரை மும்மணிக்கோவை, மதுரை யமக அந்தாதி, மணிமேகலை, முக்கூடற் பள்ளு, முத்தொள்ளாயிரம், மூவருலா, மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலவிருத்தி, வண்டுவிடுதூது (கடிகை முத்துப் புலவர்) ஆகிய பல இனிய தமிழ் நூற்கள், மதுரையின் உயர்வு பற்றிக் கூறுவனவாகும்.

தமிழறிந்தார் மட்டுமல்ல; பிற மொழி யாளரும் கூட மதுரை நகரின் மாண்பு குறித்து எழுதிச் சென்றிருக்கின்றனர்.

அல்பருனியின் குறிப்பு (அராபியர்), கால்டுவெல் குறிப்பு, கௌடில்லியரின் அர்த்த சாஸ்திரம், வடமொழி நூற்களான சியாமளா தண்டகம் - மதுரா விஜயம், நாலமியின் பூகோள நூல், பாரசீகப் பயணிகளின் குறிப்பு, பிளினியின் குறிப்பு, புரொன்யசா பாதிரியார் கடிதங்கள், பெரிப்ளூஸ் எழுதிய எரித் தியன் கடல், மகாவமிசம் (இலங்கை வரலாற்று நூல்), மார்கோபோலோ குறிப்புகள் மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா, வாசப் என்கிற முகமதிய பயணியின் குறிப்புகள், வியாசரின் மகாபாரதம், ஸ்ட்ராபோவினுடைய குறிப்பு, ஸ்கந்தபுராணம் அகத்திய சம்ஹிதை, ஹாலாஸ்யு மகாத்மியம் ஆகிய பிற மொழி நூற்களிலும் குறிப்பு களிலும் கூட மதுரை மாநகர் சிறப்பித்துச்

சொல்லப்பட்டிருக்கிறது.

**மதுரை நகரப் புலவர்கள்!**

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்த மொழியான தமிழாம் தாய்க்குப் புகழ் சேர்த்த புலவர் பெருமக்களில் பலர் மதுரையைச் சேர்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

யாரெல்லாம் அவர்கள் என்கிறீர்களா? இதே விவரம்-

அளக்கர் ஞாழார் மகனார் மன்னனார், அளக்கர் ஞாழார் மகனார் அம்மன்னனார், அறுவை வாணிகன் இளவேட்டனார், ஆசிரியர் நல்லந்துவனார், ஆசிரியர் கோடல் கொற்றன், ஆலருவி நாட்டு ஆலம்பேரி சாத்தனார், இளங் கண்ணிக் கௌசிகனார், இளங் கௌசிகனார், இளம் பாலாசிரியன் சேந்தன் கூத்தனார், ஈழத்துப் பூதன் தேவனார், எழுத்தாளன், எழுத்தாளன் சேந்தன் பூதன், ஓலைக் கடைக்கண்ணம் புகுந்த ராயத்தனார், ஓலைக் கடையத்தூர், நல்வெள்ளையார் பகடையத்தூர்மகன் வெண்ணாகன், கண்டரதத்தன் கண்ணதனார் கண்ணனார், கணக்காயனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார், சுதக் கண்ணன், சுந்தரதத்தன், கவுணியன் பூதத்தனார், கள்ளம்போதனார், கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், கவுணியன் பூதத்தனார், கள்ளம்போதனார், கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் காமக்கனி நப்பாலத்தனார், காருலவியங் கூத்தனார், குமரன், கூத்தனார், கூலவாணிகன் சாத்தன், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

—மூச்சு முட்டுகிறதா? ஒரு வினாடி ஓய்வெடுத்துக் கொண்டு மேலே படியுங்கள்...

கொல்லன் புல்லன், கொல்லன் வெண்ணாகனார், பொன்செய் கொல்லன் வெண்ணாகனார், சீத்தலைச் சாத்தன், செய்கண்ணனார், நத்தங் கண்ணனார், தமிழ்க் கூத்தனார், தமிழ்க் கூத்தனார் கடுவன் மன்னனார், நக்கீரர் நக்கீரனார், நல்வெள்ளியார், படைமங்க மன்னியார், பண்ட வாணிகன் இளந்தேவனார், மருதங் கிழார் மகனார், சோகுந்தனார், பாலாசிரியன், நற்றாமனார், பாலாசிரியன் நப்பாலனார் பாலாசிரியன் சேந்தன் கொற்றனார், புல்லங் கண்ணனார், பூதன் இள நாகனார், பூவண்ட நாகன்வேட்டனார், பெருங்கொல்லன், பெருமருதனார், பெருமருதிள நாகனார், பேராலவாயர், போத்தனார், மருதங் கிழார் மகன் இளம்போத்தன், மருதங் கிழார் மகனார் கோகுத்தனார், மருதங் கிழார் மகனார் பெருங்கண்ணனார், மருதனிள நாகனார், வேளாசார், வேளாதத்தார்.

—இவர்களெல்லாம் மதுரைப் புலவர்களே! ஒவ்வொருவர் பெயருக்கு முன்னாலும் 'மதுரையை'ச் சேர்த்துப்படித்திட வேண்டும். அப்படித்தான் இலக்கியங்களிலே காணப்படுகிறது!

**பாண்டிய மன்னர்கள் பட்டியல்**

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றேழு பேர் என்கிறது 'இறையனார் அகப்பொருள் உரை'. அவ்வளவு பேரின் பெயர்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிட்டிய மன்னர்களின் பெயர்கள் இவை-

அண்டர் மகன் குறுவழுதியார், அறிவுடை நம்பி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, கடுங்கோன், கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி, காய்சின வழுதி, கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, கீரஞ்சாத்தன் குறுவழுதியார், கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நிலத்தரு திருவிற் பாண்டியன், நெடுஞ்செழியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பன்னாடு தந்த பாண்டியன், பூதப் பாண்டியன், முடத்திருமாறன், வடிம்பலம்ப நின்ற பாண்டியன், வெண்டேர்ச் செழியன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, வெற்றிவேற்செழியன்.

—இவர்களெல்லாம் சங்க காலப் பாண்டிய மன்னர்களாவர்.

கடுங்கோன் மாறவர்மன் அவனி சூளாமணி, சடையவர்மன் செழியன்

## திருத்துவோம்



★ வழியில் ஒரு கூடைக்காரனைக் கண்ட நான், ''என்னப்பா அது?'' என்றேன்.

''வாயப்பயம்'' என்றான், அவன்.

''இப்படித் தமிழைக் கொலை செய்யும் நீ, இந்த ஊருக்கு ஏம்பா வந்தே?'' என்றேன்.

''பொயக்க'' என்றான்.

''அடச்சே! எங்கெப்பா இருக்குது உன் ஊரு?'' - இது நான்.

''கெயக்கே'' - இது அவன்.

''ஏன் இப்படிப் பேசறே, தமிழைச் சரியாகப் பேசக் கூடாதா?'' என்றேன் நான்.

''அப்படிப் பேசித்தாங்க வயக்கம்'' என்றான், அவன்.

-இப்படிப்பட்ட தமிழ்க் கொலையாளிகளைத் திருத்த வேண்டும்.

—மதுரையில் 1981-இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கி.ஆ.பெ. அவர்கள் பேசியது.

— ராஜு

சேந்தன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன் இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராச சிம்மன், பராந்தக நெடுஞ்சடையன், சீமாறன் சீவல்லபன், இரண்டாம் வர குணவர்மன், பராந்தக வீரநாராயணன்...

—இவர்களெல்லாம் மதுரையை ஆண்ட முற்காலப் பாண்டிய மன்னர்கள்.

மூன்றாம் இராசசிம்ம பாண்டியன், வீரபாண்டியன், அமரபுயங்கன், மானா பரணன், சுந்தர பாண்டியன், விக்ரம பாண்டியன், சீவல்லபப் பாண்டியன், பாண்டியன் வீரகேசரி, மாறவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் பராந்தக பாண்டியன், மாறவர்மன் சீவல்லவன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், மாற வர்மன் விக்கிரம பாண்டியன்...

—இவர்களெல்லாம் கி.பி. 900 முதல் கி.பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்.

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், இரண்டாம் மாற வர்மன் சுந்தரபாண்டியன், முதல் சடைய வர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் விக்ரம பாண்டியன், முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் சுந்தர பாண்டியன், மாறவர்மன் விக்ரம பாண்டியன், ஜடாவர்மன் வீர பாண்டியன்..

—இவர்களெல்லாம் கி.பி. 1190 முதல் கி.பி. 1310 முடிய ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களாவர்.

சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன், பராக்கிரம பாண்டியன், மாறவர்மன் வீர பாண்டியன், மாற வர்மன் பராக்கிரம பாண்டியன்...

—இவர்களெல்லாம் கி.பி. 1310-ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள்.

பராக்கிரம பாண்டியன், இரண் டாவது பராக்கிரம பாண்டியன், மூன்றாவது பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் குலசேகரன், சடைய வர்மன் விக்ரம பாண்டியன் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் சீவல்லபப் பாண்டியன், சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன், நெல்வேலி மாறன், சடையவர்மன் அதிவீரராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், வரகுணராம குலசேகர பாண்டியன்...

—இந்தப் பாண்டிய மன்னர் களெல்லாம் தென்பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த பிற்காலப் பாண்டியர்கள் ஆவர்.

1866-ஆம் ஆண்டில் நகராட்சியாகி, 1971-ஆம் ஆண்டில் மாநகராட்சி ஆகிய மதுரையின் மீது - அந்நாளில் படை யெடுத்தோர் பலராவர். தமிழகத்தின் அணியெனத் திகழும் இந்நகரைத் தம தாக்கிக் கொள்ள மாலிக்காபூர் (கி.பி. 1311), அலாவுதீன் (கி.பி.1312), குஸ்ருகான் (கி.பி.1316), உலூகான் (கி.பி.1323), முகமது பின்-துக்ளக் ஆகியோர் படையெடுப்பு நடத்தினர்.

**சுல்தான்களும் நாயக்க மன்னர்களும்**

மதுரையை ஆண்ட சுல்தான்கள்- ஜலாலுதீன், அலாவுதீன் உடௌஜி, குத்புதீன், கியாஸ்உத்தீன் தம்கானி, நாசிர் உத்தீன், அடில்ஷா, பக்ருதீன் முபாரக்ஷா, அலாவுதீன் சிக்கந்தர் ஆகியோராவர்.

மதுரையில் நாயக்க மன்னர்கள் கை ஓங்கியது நாளடைவில். அவர்கள் ஆட்சிக்கால மதுரை வரலாறு இது:

விசுவநாத நாயக்கர், முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், விசுவப்ப நாயக்கர், கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர், முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர், முதலாம் முத்து வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், குமாரமுத்து நாயக்கர், இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர், சொக்கநாத நாயக்கர், மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர், மங்கம்மாள் விஜயரங்க சொக்கநாத நாயக்கர், மீனாட்சி அரசி (விஜயரங்க சொக்கநாதர் மனைவியார்).

—மதுரையை ஆண்ட நாயக்கர்கள் பட்டியல் இது.

அன்றைய வரலாற்றிலும் இன்றைய வரலாற்றிலும் தனக்கென தனிப்பெருமை கொண்டு திகழும் தண்டமிழ் வளர்ந்திட வழிகோலிய மதுரை மூதூரின் மாண்புகள் இன்னும் இன்னும் எத்தனையோ!

—கங்கை கொண்டான்

## மதுரைச் செய்திகள்



★ சங்க காலத்தில் தமிழ் மொழியின் உறைவிடமாக விளங்கிய மதுரையில் - 1981-ஆம் ஆண்டு ஜனவரி(4-10)-யில், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்திற்கு, அப்போதிருந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெருநிதி வழங்கி அம்மாநாடு சிறப்புற நடைபெற வகை செய்தார்.

★ கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் மதுரையில் வாழ்ந்த தமிழறிஞர்களில் குறிப்பிடத் தக்கோர்; பாண்டித்துரைத் தேவர் (1867-1911), அரசஞ் சண்முகனார் (1868-1915), 'பரிதிமாற் கலைஞர்' எனப்பட்ட வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (1870-1903), நாவலர் சோமசுந்தர பாரதியார் (1879-1959), ஜெகவீரபாண்டியனார் (1886-1967), சங்கரதாஸ் சுவாமிகள் (1867-1922), தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (1899-1980), டாக்டர் மு. வரதராசனார் (1912-1974).



# டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத்திட்டத் தொடக்க விழா

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

குழந்தைகளின் நலத்திற்கான இந்த 15 அம்சத் திட்டத் தொடக்க விழா என்னைப் பொறுத்தவரையில் ஒரு உணர்ச்சிகரமான நிகழ்ச்சியாகும். தமிழ்நாட்டில் குழந்தை நலத்திற்காகத் தனித்த ஒரு திட்டத்தை வடிவமைக்க என்னால் தொடங்கப்பட்ட முயற்சியின் நிறைவே இவ்விழாவாகும்.

குழந்தைகளின் தேவைகள் முழுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாளைய வேட்கைக்குத் திட்டவட்டமான வடிவம் தரவும், இன்றைய குழந்தை நாளைய தலைவராக உருவாகும் வண்ணம், அர்த்தமுள்ள வகையில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தவும் இந்த விழா முனைகிறது.

இந்திய மரபின்படி குழந்தையும் தெய்வமும் ஒன்றே! குழந்தைப் பருவம் என்பது தெய்வீகம் பொருந்தியது. சமுதாயம் தனது சிந்தனையிலும், செயலிலும் முதலிடத்தை வழங்கி, குழந்தைக்கு அனைத்தையும் தந்து வந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, குழந்தைகள், பெண்கள், முதியோர், பிணியாளர், உடல் நலிவுற்றோர் ஆகிய அனைவரும் ஒரே அளவில் சமுதாயத்தின் பாதுகாப்பைப் பெறுவதற்கு, சம நிலையில் வைக்கப்பட்டனர். அவ்வாறே, கருவுற்ற தாய்மார்களும், சிறு குழந்தைகளும் ஒரே மாதிரியாகக் கருதப்பட்டு, ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் திகழும் வகையில் ஒரே மாதிரியாகப் பராமரிக்கப்பட்டனர். இந்திய வழக்கப்படி, தாய் சேய் உறவு என்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு பெரும் கட்டமைப்பின் ஒரு பகுதியாகவே குழந்தை அன்றும் கருதப்பட்டது; இன்றும் கருதப்படுகிறது. குழந்தை வளர்ச்சிக்கான ஏற்பாடுகளோ, அதன் துன்பங்களைப் போக்குவதற்கான வழிமுறைகளோ, இந்த அடிப்படைப் பிணைப்பைக் கருத்தில் கொண்டே அமைய வேண்டும். பாதுகாப்பு மையமானது படிப்படியாக, தாயிடமிருந்து குழந்தையை நோக்கி நகர்கின்ற வகையில் இது அமைய வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, குழந்தைப் பருவத்தைப் பற்றி இந்திய மரபில் காணப்படும் இந்த உயரிய தத்துவம் பெரும்பாலும் பகற்கனவாகவே இருந்திருக்கிறது. இந்தியச் சமூகத்தில் குழந்தையின் நடைமுறை அனுபவம் வேறுபட்டதாகவே இருந்து வந்துள்ளது. இந்தியக் கலாசாரத்தின் பெருங்குறை, பெண் குழந்தைகளைப் புறக்கணித்ததாகும். பெண் குழந்தைக்கெதிரான வன்முறையை வளர்ப்பதாகவே சிற்சில விஷயங்களில் இந்தப் போக்கு அமைந்துவிட்டது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு நுண்ணிய வஞ்சகமான வகையில், பெண் குழந்தை விஷயத்தில் நடு நிலைமை நீங்கித் தவறிழைப்பதாகவே இந்திய நடைமுறை இருந்து வந்திருக்கிறது. குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பும் சலுகைகளும் தங்கள் சொந்தக்

குழந்தைகளிடமிருந்து பொருளாதார, சமூக எதிர்பார்ப்புகளைக் கொண்ட இந்தியப் பெற்றோர்களது சுயநலத் தேவைகளின் மறைமுக வெளிப்பாடாகவே அமைந்து வந்துள்ளன.

பெற்றோர்களின் ஆதிக்கம், மூட நம்பிக்கையைத் தொட்டுவிடக்கூடிய சமுதாய நிர்ப்பந்தங்கள், பொருளாதாரத் தேவைகள் ஆகியவை குழந்தைகளின் பராமரிப்பு விஷயத்தில், நமது சித்தாந்தத்திற்கும், செயல்பாட்டிற்கும் இடையே ஆழமான பிளவை உண்டாக்கி இருக்கின்றன. இன்று, சூழ்நிலை மாறி வருகின்றது என்பதில் ஐயமில்லை. குழந்தைகளின் சிக்கல்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான அவசியம், இளைஞர்களிடையே காணப்படும் படைப்புத்திறன், ஆக்க சக்தி, புத்திக் கூர்மையும் செயல் துடிப்பும் மிக்க குடிமக்களாக இளைஞர்கள் உருவாகும் வண்ணம் அவர்களுடைய படைப்பாற்றலையும் ஆக்க சக்தியையும் வளர்க்க வேண்டிய தேவை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் முன்னைக் காட்டிலும் தற்போது மிகுந்த விழிப்புணர்ச்சி காணப்படுகிறது. ஒரு குழந்தைக்காக நாம் செய்யும் செலவு ஒரு சமுதாயத்தின் உடல் நலத்தையும், திறனையும் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உணர்ந்து கொண்டதால், அண்மைக் காலத்தில், ஐ.நா. சபை, யூனிசெஃப், உலக வங்கி உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளும், இந்தியா உள்ளிட்ட பல்வேறு தேசங்களும், தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளும், தலைசிறந்த நிபுணர்களும் குழந்தை வளர்ச்சியில் தங்கள் கவனத்தை அதிகரித்து வருவதைக் காண்கிறோம்.

இன்று, குழந்தையின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், நமது சிந்தனையிலும், நமது போக்கிலும், பெருமளவு தெளிவு உண்டாகியிருக்கின்றது. அனைத்து நாடுகளின் ஒருமித்த பார்வை குழந்தையின் மீது விழுந்திருப்பதால், வளர்ச்சிக்கான பாதை எங்கே அமைகிறது என்பதையும், இந்தப் பாதையை வடிவமைக்க எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும், நம்மால் இப்போது காண முடிகிறது. இவ்வாறு நமது திட்டங்களும், செயல்பாடுகளும் இந்த வளர்ச்சிப்பாதையில் குழந்தை முன்னேறிச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும்வண்ணம் வடிவமைக்கப்படுகின்றன.

அரைகுறையாகத் தீட்டப்பட்ட, அப்போதைய தேவைகளுக்காகத் தீட்டப்பட்ட திட்டங்களையும், பிரச்சினையின்



விளிம்பை மட்டும் தொடுகின்ற திட்டங்களையும், நாம் பின்பற்றுவதில் அர்த்தமில்லை என்பதே, கடந்த காலத்தில் குழந்தை நலத்திட்டத்தை செயல்படுத்திய அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். குழந்தைகளின் தேவைகள் பற்பல; பல்வேறு வகைப்பட்டவை என்பதையும், அவை ஒரு முழுமையான கோணத்தில் காணப்பட வேண்டியவை என்பதையும், குழந்தைகளுக்கான செயல் திட்டம் என்பது, குழந்தையின் உடல் வளர்ச்சி, உணர்வு வளர்ச்சி, மன வளர்ச்சி ஆகியவற்றில் ஒரு முழுமையான திருப்திகரமான விளைவை ஏற்படுத்த வேண்டும் என்பதையும், நாம் தற்போது அறிந்திருக்கிறோம். எல்லாக் குழந்தைகளும், உடலளவில் மட்டும் வளர்ச்சி அடையாமல் உள்ளத் துணிச்சல், நம்பிக்கை, திறன்கள், குன்றா மனவளம் குறையாத உணர்திறன் ஆகியவற்றிலும் வளர்ச்சி காண வேண்டும் என்பதே நம் முயற்சியாக இருக்கவேண்டும்.

சிவகாசியில் ஒரு பட்டாசுத் தொழிற்சாலையில் குழந்தைகள் பணிக்கு அமர்த்தப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட தவிர்க்கத்தக்க துயரச் சம்பவத்தை இரண்டாண்டுகளுக்கு முன்பாக நான் கண்டேன். நமது சமூக நலத்துறை அமைச்சரிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் இந்தத் துயரச் சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் மக்களும், மாநில அரசுமே ஏற்கவேண்டுமென்றும், எதிர்காலத்தில் மீண்டும் இது நிகழா வண்ணம் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நான் கூறினேன்.

கடந்த ஓராண்டுக்காலமாக நமது சமூக நலத்துறை அமைச்சரும், மாநில அரசு அதிகாரிகளும் ஆழ்ந்த ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தத்தக்க தீர்க்கமான சிந்தனையில் ஈடுபட்டு வந்தார்கள். யுனிசெஃப் மற்றும் குழந்தை நலத்திட்டங்களை மேற்கொண்டு மற்ற பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றாலும் அவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். இதன் விளைவுதான் தமிழகக் குழந்தைகளுக்கான 15 அம்சத் திட்டம்.

நமது எதிர்காலத்தையும், நம்பிக்கைகளையும், கனவுகளையும், பிரதிபலிக்கின்ற குழந்தைகளுக்காகத் தமிழ்நாடு அரசு தன் கட்டுப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்வடைகிறேன். இவ்வாறு, இந்த ஈடுபாட்டைப் புதுப்பித்துக் கொள்வதென்பது வெற்று வார்த்தைகளின் வெளிப்பாடல்ல! தாய்சேய் நலம் பேணும் ஓர் உறுதியான 15 அம்சத் திட்டமாகும். இது மாநில அரசின் அனைத்துத் துறைகளுக்கான ஒரு 'செயல் திட்டமு'மாகும்.

குழந்தைகளுக்காக இப்படிப்பட்ட ஒரு விரிவான திட்டத்தை வகுக்கும் முதல் மாநிலம் நமது மாநிலம்தான். இந்த





நூற்றாண்டு நிறைவடைவதற்கு முன்பாகவே அதாவது இன்னும் ஏழு ஆண்டுகளுக்குள்ளாகவே நாம் அடைய வேண்டிய பெரும் இலக்குகள் மீது நம் பார்வையை பதித்து விட்டோம். 1995-ஆம் ஆண்டுக்குள் அடையவேண்டிய குறிப்பிட்ட இலக்குகளையும், 1998-ஆம் ஆண்டுக்குள் (அதாவது 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசிக்குள்) அடைய வேண்டிய குறிப்பிட்ட இலக்குகளையும் நாம் தீர்மானித்து விட்டோம். பல்வேறு இனங்களில் கி.பி. இரண்டாயிரத்துக்குள் அடைய வேண்டிய தேசிய இலக்குகளை நாம் ஏற்கெனவே அடைந்து விட்டோம். உதாரணமாக, 2000-ஆம் ஆண்டில் தேசிய குழந்தை இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு அறுபது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாம் ஏற்கெனவே ஐம்பத்தேழு என்ற விகிதத்தை எட்டி விட்டோம். தேசிய பிறப்பு விகிதம் 1000-க்கு 21 என்று நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 20.7 என்ற விகிதத்தை நாம் ஏற்கெனவே அடைந்து விட்டோம். கி.பி.2000-இல் அடைய வேண்டிய தேசிய இறப்பு விகிதம் 1000-க்கு 9 ஆக உள்ளது. நமது மாநிலத்தில் தற்போதைய இறப்பு விகிதம் 8.8 ஆகும். பிரசவத்தில் இறக்கும் தாய்மார்களின் இறப்பு விகிதம் தேசிய அளவில் 1000-க்கு 2 ஆகும். நமது விகிதம் 1.1 ஆகும். அடிப்படைத் தடுப்பூசி போடுதலில், கி.பி. 2000-க்கான தேசியக் குறியீடு 85 சதவீதம். நாமோ ஏற்கெனவே 100 சதவீதம் இலக்கை எட்டிவிட்டோம். இத்தகைய பெரும்பாலான துறைகளில் தமிழக தன்னிகரற்ற முன்னோடியாக இருந்து வந்துள்ளது. எதிர்காலத்திலும், இந்தத் தனித்தன்மை நீடிக்கும்.



15 அம்சத் திட்டத்தில், குழந்தைத் தொழிலாளர் போன்ற சில அம்சங்கள் ஏதோ ஒருவகையில் என்னால் முன்னால் அறிவிக்கப்பட்டவை. ஒருங்கிணைந்த தாய்சேய் மேம்பாட்டுக்காக ஒட்டுமொத்தமாக, அனைத்து அம்சங்களையும் இணைத்து ஓர் ஒருங்கிணைப்புத் திட்டத்தை உருவாக்கத் தற்போது நான் முயற்சி மேற்கொண்டுள்ளேன். முதலாவதாக, குழந்தைகளின் உடல்நலம், சத்துணவு ஆகியவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும். பிறக்கும் குழந்தை 3 கிலோ எடையுடன் இருப்பது இறப்பு விகிதத்தைக் குறைத்து, குழந்தை உயிர் வாழும் வாய்ப்பைப் பெருமளவு அதிகப்படுத்தும் என்று நிபுணர்கள் என்னிடம் கூறியுள்ளனர். கொத்தடிமைத்தனமும், ஆபத்தான தொழிற்சாலைகளில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடிய முறையும் ஒழிக்கப்படும். இது நமது பதினோராவது இலக்காகும்.

பெண் குழந்தைகளின் நிலை உயர பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் பரவலாக்கப்படுகிறது. இது நமது பன்னிரண்டாவது பயனுறு இலக்காகும். இதனால் ஆணுக்குப் பெண் இங்கே அனைத்திலும் சமம் என்று அரியதோர் திட்டம் கி.பி. இரண்டாயிரத்தில் நிறைவேற்றப்பட்டுவிடும். எனவே, நமது முதலாவது இலக்கு கி.பி. இரண்டாயிரத்தில் பிறக்கும் குழந்தைகளின் சராசரி பிறப்பு எடை மூன்று கிலோவாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

இரண்டாவதாக, தடுப்பு ஊசி மூலம் தடுக்கப்படக்கூடிய போலியோ, டெட்டனஸ் போன்ற எல்லா வகையான நோய்களையும் அறவே ஒழித்துவிட்ட,



முதல் மாநிலமாக நமது மாநிலம் திகழும். சிசு மரணம் என்பது தற்போது நமது மாநிலத்தில் ஆயிரத்துக்கு 57 என்று இருக்கிறது. இது பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவாகவே உள்ளது. அதே நேரத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பொருத்தவரை, வயிற்றுப்போக்கால் ஏற்படும் மரணத்தையும், நுரையீரல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் மரணத்தையும் ஒழித்து சிசு மரணத்தை 30 சதவிகிதமாகக் குறைக்கவும் ஏற்றதொரு திட்டத்தையும் நிறைவேற்றி வருகிறோம். இது நமது மூன்றாவது இலக்காகும்.

நான்காவது இலக்கு வைட்டமின்-ஏ சத்துக்குறைவு, அயோடின் சத்துக்குறைவு, இரத்த சோகை நோய் ஆகியவற்றால் அல்லற்படும் குழந்தைகள், தாய்மார்கள் ஆகியோரின் எண்ணிக்கையை 30 சதவிகிதமாகக் குறைப்பதாகும். தாய்ப்பால் ஊட்டுவதைக் குறைத்து, புட்டிப்பால் ஊட்டும் பழக்கத்தையே தாய்மார்கள் அதிகமாக மேற்கொண்டு வருகிறார்கள். புட்டிப்பாலை ஊட்டுவதால் ஏற்படும் தீமைகளையும், தாய்ப்பால் ஊட்டுவதால் ஏற்படும் நன்மைகளையும் தாய்மாருக்கு எடுத்துரைத்து உணர்த்தவேண்டும். எல்லா மருத்துவமனைகளும், மகப்பேறு நிலையங்களும் 'மழலையர் நட்பகம்' என்று போற்றப்படும் நிலையை இந்தியாவிலேயே முதன்முதலாக உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடுதான் என்ற அரியதோர் நிலையை உருவாக்குவது நமது ஆறாவது இலக்காகும்.

தாய், சேய் நலம் பேணுவதில் முக்கிய இடம்பெறுவது வயது. அதுபோலவே, குழந்தை பிறப்புகளுக்கு இடையில் தேவைப்படும் கால இடைவெளியும் முக்கியமானதாகும். எனவே, பெண்களின் திருமண வயதினை உயர்த்தியும், குழந்தை பிறப்புகளுக்கு இடையில் உள்ள கால இடைவெளியை அதிகப்படுத்தியும், இளம் வயதிலேயே திருமணம் செய்வதும், அடிக்கடி குழந்தை பெறுவதும் போன்ற அவல நிலைக்குள்ளாகி அடிமைப்பட்டுக்கிடக்கும் பெண்களை விடுவிப்பது நமது ஏழாவது இலக்காகும். இதன்மூலம் அல்லற்படுத்தும் அதிகப்படியான பிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு 15 என்ற அளவுக்கு குறைக்க முடியும் என்று நம்புகிறோம்.




குழந்தை பெறுவது, குழந்தையைப் பேணி வளர்ப்பது போன்றவற்றைப் பற்றிய செய்திகளையும், சிக்கல்களையும் அறிந்துகொள்ள கல்வி அறிவு மிகமிகத் தேவை. ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வு இன்னும் அதிகமாகவே இருந்து வருகிறது.

நம்முடைய விடாமுயற்சியினால் ஆரம்பப் பள்ளிப்படிப்பை இடையிலேயே நிறுத்திவிடுவோரின் எண்ணிக்கை 1991-ஆம் 19.3 சதவிகிதமாக, ஒரே சீராகக் குறைந்து வந்திருக்கிறது. சட்டத்தின் மூலமும், பிரச்சாரத்தின் மூலமும் எல்லோருக்கும் 5 ஆண்டு கட்டாயக் கல்வி வழங்குவதற்கு ஏற்பவும் கல்வியின் தரத்தை உயர்த்திடவும் தக்கதோர் திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்தியாக வேண்டும். இது நமது எட்டாவது இலக்காகும்.

பெண்களிடையே கல்வியறிவு பரவும்போது, பிறப்பு விகிதமும், சிசு இறப்பு விகிதமும் குறைந்து வருவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. மேலும்,




படித்த ஒரு தாயால் தன் குழந்தைகள் அனைவருக்கும் கல்வியறிவு புகட்டிவிட முடியும். எனவே, கி.பி. இரண்டாயிரத்தில் தமிழ்நாட்டில் பெண்கல்வி நூறு சதவிகிதம் நிறைவேறிவிடும். படிக்காத பெண்களே இல்லை என்ற நிலை ஏற்படும். இதுவே நமது ஒன்பதாவது இலக்கு.

தாயின் உடல் நலத்தையும், சேயின் உடல் நலத்தையும் பேணிக்காத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீரும், சுகாதார வசதிகளும், கிராமங்களிலும், சிறுவர் வாழ்கிற பகுதிகளிலும் கிடைக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இது நமது பத்தாவது இலக்கு.

கொத்தடிமைத்தனமும், ஆபத்தான தொழிற்சாலைகளில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடிய முறையும் ஒழிக்கப்படும். இது நமது பதினோராவது இலக்காகும்.

பெண் குழந்தைகளின் நிலை உயர பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் பரவலாக்கப்படுகிறது. இது நமது பன்னிரண்டாவது பயனுறு இலக்காகும். இதனால் ஆணுக்குப்பெண் இங்கே அனைத்திலும் சமம் என்று அரியதோர் திட்டம் கி.பி. இரண்டாயிரத்தில் நிறைவேற்றப்பட்டுவிடும்.

'பெண் சிசுவதை' என்னும் சமூகக் கொடுமையினைத் தமிழ்நாட்டிலிருந்து முற்றிலும் அகற்றிட சீரிய நடவடிக்கைகளை அரசு எடுத்துவருவது நீங்களெல்லாம் அறிந்ததே. அந்த நடவடிக்கைகள் மேலும் தொடரும்; தொய்வின்றித் தொடரும். இது நமது பதின்மூன்றாவது இலக்கு.

கிராமங்களில் உள்ள ஊனமுற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். குழந்தைகளுக்கு ஏற்படும் ஊனத்தை வராமல் தடுக்கவும், தொடக்கநிலையிலேயே அதனைக் கண்டு பிடிக்கவும் கி.பி. இரண்டாயிரத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அத்தனைப் பேருக்கும் மறுவாழ்வு அளித்திடவும், திட்டமிட்டுச் செயற்படுவதே பதினான்காவது இலக்காகும்.

இறுதியாக எனது இதயத்தின் அடித் தளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பும் உணர்ச்சிமிக்க ஒன்றினை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். சின்னஞ்சிறு குழந்தைகள் இளம்வயதிலேயே இதய நோயால் மரணத்தைத் தழுவிடும் கொடூரத்தை நான் கண்டிருக்கிறேன். இந்நோயினைக் கண்டறியவும், குணப்படுத்தவும் அறிவியல் தந்த அற்புதமான சிகிச்சைச் சாதனங்கள் இன்று நமது மாநிலத்திலேயே உள்ளன. எனவே, இருதய அறுவைச் சிகிச்சையை இலவசமாக அளித்து குழந்தைகளுக்கு ஏற்படும் இருதய நோய்களை அகற்றுவோம். குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சைக்குரிய செலவு முழுவதையும் அரசே ஏற்கும். இந்த அரிய சாதனையை முதன்முதலாக நிகழ்த்துவது நமது மாநிலம்தான்.

நமது பதினைந்து அம்சத்திட்டம் தக்க பாதுகாப்பும் வசதியும் இன்றி வாடும் குழந்தைகள் மீது தனி கவனம் செலுத்திச் செயற்படும். நான் விளக்கிக்காட்டியுள்ள இந்த இலக்குகள் அனைத்தையும் நிறைவேற்றி வெற்றிகாண்பதற்கு ஏற்றவாறு அரசின் நிர்வாக இயந்திரம் முழு மூச்சுடன் முடுக்கி விடப்படும். இந்த ஒருங்கிணைந்த திட்டத்தை பற்றிய அறிவிப்பினை இன்றுதான் வெளியிடுகிறேன் என்றாலும், இந்த இலக்குகளை அடைவதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டொரு பெண் குழந்தைகளோடு நிறுத்திக்கொண்டு கருத்தடை அறுவை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு ஊக்கமளித்திடும் சிறந்த திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவது பற்றி மிகவும் ஆர்வத்துடன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் ரூ.2000 வைப்புநிதியும், அக்குழந்தையின் படிப்புக்கு அவ்வப்போது ஒரு குறிப்பிட்ட தொகையும், பின்னர் அக்குழந்தை இருபது வயதினை அடைகின்ற போது ரூ.10,000 மொத்தத் தொகையும் வழங்கிட உதவிடும் சிறப்பு ஊக்கத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே அறிமுகப் படுத்தியுள்ளோம். இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயற்படுத்திடத் திட்டமிட்டு வருகிறேன். இப்போது உள்ள ரூ.2,000 என்ற வைப்புத் தொகை ரூ.4000 ஆகவும், ரூ.10,000 ஆக உள்ள மொத்தத் தொகை ரூ.20,000 ஆகவும் இன்று முதல் உயர்த்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெண் குழந்தையின் முதலாவது பிறந்த நாளில் வழங்கப்பட்டு வருகிற தொகை இப்போது ரூ.250 ஆகும். இனிமேல் ரூ.800 மதிப்புள்ள 2 கிராம் தங்க மோதிரம் ஒன்று வழங்கப்படும். வைப்புத் தொகையான ரூ.5000 பற்றிய விவரங்களைக்கொண்ட கணக்குப் புத்தகம் (பாஸ் புக்) ஒன்று திறக்கப்பட்டு, அவ்வப்போது எவ்வளவு பணம் எடுக்கப் படுகிறது, எடுக்கப்பட வேண்டும் என்பதற்கான விவரக்குறிப்புகள் அப்புத்தகத்தில் பதிவு செய்யப்படும். பணத்தைப் பெறுவதற்கான அடையாள அட்டை வழங்கிடும் முறையும் அறிமுகப்படுத்தப் படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுள்ள தாய் 35 வயதுக்கு மேற்படாதவராக இருந்தாக வேண்டும் என்றிருந்தது. இந்த வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்படுகிறது. இப்படிப்பட்ட சீர்மிகு மாற்றங்களினால் அளவான குடும்பங்கள் அமைந்திடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையினை அடையவும், பெண் குழந்தையின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும், இந்தப் பெண் குழந்தைகள் நலத்திட்டம் தக்க வழி வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியில் எங்களோடு கலந்துகொண்டு சிறப்பித்துள்ள டேவிட்

க்ளாஸ் அவர்களுக்கும், அவருடைய தலைமையில் அவருடன் பணியாற்ற வந்துள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தினை நிறைவேற்றிட உதவிடும் உலக வங்கிக் குழுவினருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் தனிச்சிறப்புமிக்க ஊட்டசத்துத் திட்டத்தினை நிறைவேற்றிட உதவி வருகின்ற உலக வங்கியின் பணிகளைப் பாராட்டுகிறேன். இன்று நாங்கள் அறிவித்துள்ள இச்சீரிய இலக்குகளை அடைந்திட நாங்கள் மேற்கொள்ளும் அரிய முயற்சிகளுக்கு உலக வங்கியின் உதவி தொடர்ந்து கிடைத்து வரும் என்று நம்புகிறோம்.



'யூனிசெஃப்' நிறுவனத்திற்கும், டாக்டர் ஜான்ரோட் அவர்களுக்கும் எனது இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'யூனிசெஃப்' நிறுவனத்தின் அணுகுமுறையும், ஆழ்ந்த ஈடுபாடும், அளப்பரிய அன்பும் இந்த குழந்தைகள் நல ஒருங்கிணைப்புத் திட்டத்தினைப் பற்றி நான் சிந்திக்கவும், செயல் திட்டம் வகுக்கவும் எனக்குப் பெரிதும் ஊக்கமளித்து, உத்வேகத்தைத் தந்தது என்பதை நான் இங்கே தெரிவித்தாக வேண்டும்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் திங்களில் என்னைச் சந்தித்த 'யூனிசெஃப்' நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜான் ரோட் அவர்களின் உந்துதலினால்தான் நான் இந்தப் பெரும் பணியினை ஒரு சவாலாக ஏற்றுச் செய்ய முன்வந்துள்ளேன். இதனைப் பொருத்த வரை அவர்தான் எனக்கு உந்து சக்தி, ஊக்க சக்தி.

குழந்தைகளுக்காக அரசு தீட்டும் திட்டத்தில் தமிழ்நாடுதான் இந்தியாவில் முதல் இடத்தைப்பிடிக்க வேண்டும் என்பதே அந்தச் சவால் ஆகும். அந்தச் சவாலை நாம் சந்தித்து விட்டோம், சாதனையையும் படைத்துவிட்டோம் என்றே நான் நினைக்கிறேன். நமது இலக்குகளை அடைவதற்கான பணிகளை இதய சுத்தியுடனும், மிகுந்த ஈடுபாட்டுடனும் தொடங்கவேண்டும். குழந்தைகளின் நலம் காக்க நாம் மேற்கொண்ட இலட்சியப்பணி நமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கான அரியதோர் முதலீடாகும். நமது நாட்டின் ஆக்கமிக்க பெருமைக்குரிய குடிமக்களாக உருவாக்குவதற்காக தமிழகத்தின் குழந்தைகளுக்கு எல்லா வகையான வாய்ப்புகளும் வசதிகளும் வழங்கி உதவிட நாங்கள் மேற்கொள்ளும் எங்கள் முயற்சிகளுக்கு நீங்கள் அனைவரும் ஆக்கமும் ஊக்கமும் தந்திட வேண்டும் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மனித வளத்தினை வளர்க்கும் பணியினை குழந்தை வளர்ந்து வரும் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் நாம் தொடங்கிச் செயற்படுத்தியாக வேண்டும். மனித வளத்தின் மேம்பாடு மழலைப் பருவத்திலேயே தொடங்கியாக வேண்டும்.

மறைந்த நம் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த உண்மையினை நன்றாக உணர்ந்திருந்தார். அதனாலேதான் தமிழ்நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்காக இலவச நண்பகல் சத்துணவுத் திட்டத்தினை அவர் அறிமுகப்படுத்தி உறுதியுடன் நிறைவேற்றினார். இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கூறினார்கள்:

''ஆலைகள், இயந்திரங்கள், அரிய பொதுத் திட்டங்கள் என்று தேசிய வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுகின்ற நாம் எப்படியோ மனிதனை மறந்து விட்டோம். எதுவுமே மனிதனைச் சார்ந்துதான் இயங்குகிறது என்பதை கருத்தில் கொள்ளத் தவறிவிட்டோம். ஆலைகள், கருவிகள் எல்லாம் முக்கியமானவைதான். ஆனால், நிச்சயமாக இறுதியில் மனிதன்தான் முக்கியம். மனிதன் தான் முக்கியம் என்கிறபோது அவன் வளர்ந்துவிட்ட மனிதனாக முக்கியத்துவம் பெறுவதைவிடக் குழந்தையாக இருக்கும்போதுதான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவனாக இருக்கிறான்''.

நம்முடைய குழந்தைகளுக்குத் தேவைப் படுவது எதுவோ, அவர்களுக்குச் சரியாகப் பயன்படுவது எதுவோ அவற்றை நாம் அவர்களுக்கு வழங்கிடுவோம்.

நமது தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் ராபர்ட் பிராஸ்ட்டின் கவிதை வரிகளை மேற்கோள் காட்டத் தொடங்கினார்.

அந்த மேற்கோள் கவிதையை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

கண்ணுக்கினிய காரிருள் சூழ்ந்த
அடர்ந்த வனாந்தரம் கண்ணெதிரில்!
காப்பாற்ற வேண்டிய உறுதிமொழிகள்
கைவசம் உள்ளன என்னிடத்தில்!
கண்களை மூடும் காலம் வரும்முன்
கடக்க வேண்டும் பெருந்தொலைவு
கண்களை மூடும் காலம் வரும் முன்
நான் கடக்க வேண்டும் பெருந்தொலைவு

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்கும் மிகப்பிடித்தமான மேற்கோள்களில் ஒன்றாகும் இது. எனவே, இன்று எனக்கு மட்டுமல்லாமல் குழந்தை நலத்திற்கான 15 அம்சத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழக அரசின் அனைத்து அலுவலர்களுக்கும் இந்த மேற்கோள் பொருந்துவதாகும். எனவே உங்கள் அனைவருக்கும் இந்த மேற்கோள் பொருந்துவதாகும். எனவே உங்கள் அனைவருக்கும் கூறிக்கொள்ள விரும்புவது இதுதான். ''கண்ணுறங்கச் செல்லுமுன் நாம் கடக்க வேண்டிய தொலைவுகளும், ஆற்ற வேண்டிய கடமைகளும் நிறைய உள்ளன. தமிழகக் குழந்தைகளுக்கு நான் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி இதுதான். இன்று எங்களுக்கு முன் நாங்களே வைத்திருக்கும் இந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முன்னால் நாங்கள் இமை மூடமாட்டோம். இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழக மக்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

நன்றி.



# டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம் - தொடக்க விழா

தமிழ்நாட்டில் ஆரோக்கியமான குழந்தைகள் சமுதாயத்தை உருவாக்கும் வகையில் ஒரு புதுமையான திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருப் பெயரில் உருவாக்கப்பட்டது. ''டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்'' என்ற இந்த மாபெரும் திட்டத்தின் தொடக்க விழா 11.11.93 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திட்ட அறிக்கையை வெளியிட்டு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அவரிடமிருந்து இந்தத் திட்ட அறிக்கையை யூனிசெப் நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதி ஜான் ரோடே பெற்றுக் கொண்டார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப இன்று கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு அன்பு, ஆதரவு தரும் வகையில், தாயாகப் பெரும் பணியாற்றி இந்தியத் துணைக்கண்டத் திலேயே ஒரு முன்னோடியாக புதிய திட்டத்தை நமது முதல்வர் புரட்சித்தலைவி ஏற்படுத்தியுள்ளார்'' என்றார்.

யூனிசெப் நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜான் ரோடே, தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

உலக வங்கி அதிகாரி திரு டேவிட் கிளாஸ் அவர்கள் பேசுகையில் ''இந்தத் திட்டத்துக்கு உதவ வழியுள்ளதா என்பதை உலக வங்கி தமிழக அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கும்'' என்றார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள் பேசுகையில், ''சுதந்திரம் என்றால் அண்ணல் காந்தி, தமிழ்நாடு பெயர் மாற்றம் என்றால் அறிஞர் அண்ணா, சத்துணவு என்றால் புரட்சித்தலைவர் என்று நினைவு வருவதுபோல குழந்தைகள் நலத்திட்டம் என்றால் புரட்சித்தலைவி அவர்களின் பெயர் சரித் திரத்தில் நிலைத்து நிற்கும்'' என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''இந்த மாபெரும் திட்டத்தை அரசு எந்த முறையில் வெளி யிட்டாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு சரியாகக் கிடைக்கவில்லையென்றால் இத்திட்டம் வெற்றி பெற இயலாது. இந்தத் திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத் திலேயே செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழகமாகத் தான் இருக்கும்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சேடபட்டி திரு இரா. முத்தையா அவர்கள் தலைமை யேற்றுப் பேசுகையில், ''இந்தியத் துணைக் கண்டத் திலேயே முன்னோடியான பல திட்டங்களைக் கொண்டு வந்த புரட்சித்தலைவியின் இத்திட்டமும் உலகத்திலேயே ஒரு மாபெரும் முன்னோடித் திட்டமாக இருக்கும். இந்தத் திட்டம் உலக நாடுகளில் ஒரு முன்னோடித் திட்டம் என்பதோடு மட்டுமல்ல, நமது புரட்சித்தலைவி அவர் களும் ஒரு முன்னோடி முதலமைச்சர் என்பது உண்மை'' என்றார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் யூனிசெப் பிரதிநிதி டாக்டர் ஜான் ரோடே அவர்களுக்கும், உலக வங்கி அதிகாரி திரு டேவிட் கிளாஸ் அவர்களுக்கும் நினைவுப் பரிசு வழங் கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள், நினைவுப் பரிசு வழங்கினார். மேலும் திருக்கோயில் புனரமைப்பு நிதிக்காக ரூ.1,50,000 மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

சமூகநலத்துறையில் சிறந்து பணியாற்றியவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருது வழங்கினார்.

முன்னதாக விழாவினையொட்டி, சென்னை சேப்பாக்கத்தில் உள்ள விருந்தினர் மாளிகையிலிருந்து சாலையின் இருபுறங்களிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்கும் வகையில் மாணவ மாணவி யர்கள் வண்ணச் சீருடையில் அணிவகுத்து நின்றனர். சமூகநலத்துறைச் செயலர் திரு ஆர். கிருபாகரன், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

விழாவில், அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள் மற்றும் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: கரு. சண்முகசுந்தரம்.

## துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்
## திருநெல்வேலி-2.

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் எல்லா வருவாய்ப் பிரிவினரும் கிராமங்களிலும், நகரங்களிலும் சொந்த வீடு கட்ட உதவுகின்றன.

கூட்டுறவுச்சங்கத்தை நாடுவீர்!

குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டுவீர்!

இவண்;

1. 0.1947 திருநெல்வேலி பாளையங்கோட்டை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், பைபாஸ் சாலை, திருநெல்வேலி-3.
2. 0.2058 பேட்டை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வீரபாகு நகர், பேட்டை.
3. 0.2158 மகாராசநகர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், மகாராசநகர், திருநெல்வேலி-11.
4. 0.1935 அம்பாசமுத்திரம் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், அம்பாசமுத்திரம்.
5. 0.1167 பாளையங்கோட்டை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், பெருமாள்புரம், திருநெல்வேலி.
6. டிஎன்வி எச்எஸ்ஜி.39 திருநெல்வேலி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், திருநெல்வேலி டவுன்.
7. டிஎன்வி எச்எஸ்ஜி.25 பாளையங்கோட்டை வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், திருநெல்வேலி.
8. டிஎன்வி எச்எஸ்ஜி.42 நான்குநேரி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், நான்குநேரி.
9. டிஎன்வி எச்எஸ்ஜி.43 இராமநாதபுரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், இராமநாதபுரம்.
10. டிஎன்வி எச்எஸ்ஜி.40 தென்காசி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், தென்காசி
11. டிஎன்வி எச்எஸ்ஜி.41 செங்கோட்டை வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், செங்கோட்டை.
12. டிஎன்வி எச்எஸ்ஜி.20 அம்பாசமுத்திரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், அம்பாசமுத்திரம்.
13. டிஎன்வி எச்எஸ்ஜி.44 சங்கரன்கோவில் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், சங்கரன்கோவில்.
14. டிஎன்வி எச்எஸ்ஜி.28 வீரகேரளம்புதூர் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வீரகேரளம்புதூர்.
15. டிஎன்வி எச்எஸ்ஜி.45 சிவகிரி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், சிவகிரி.



# மனம் கவரும் மதுரை



—புலவர் தமிழ்ப்பித்தன்



மூன்றுதமிழ்ச் சங்கங்கள் முகிழ்த் திருந்தே
மூத்தபுகழ்க் கொடிநாட்டிப் புலமை பெற்றே
வென்றியசெந் தமிழ்நகரம்; உலகம் போற்றும்
ஒப்பரிய முப்பாலாம் குறள்நூல் வேதம்
ஈன்றெடுத்த திருநகரம்; ஈடே இல்லா
எழில்நகரம்; பொழில்நகரம்; நான்காம் சங்கம்
தோன்றிவந்த பெருநகரம்; தூய்மை மிக்க
தொன்னகரம்; மாநகரம் மதுரை யாகும்!

பாண்டியர்கள் சேரசோழர் பல்ல வத்தார்
முகமதியர் நாயக்க மன்ன ரெல்லாம்
ஆண்டிருந்த பழநகரம்; அழகு கொஞ்சும்
அமைப்புடைய நகரென்றே வாழ்த்துப் பாடல்
பூண்டிருக்கும் அருள்நகரம்; புதுமை எல்லாம்
போட்டியிட்டு வரவேற்றுப் படிக்கும் ஆசை
தூண்டிவிடும் உயர்நகரம்; துணிகள் நெய்யும்
தொழிலாலை நிறைநகரம் இதுவே யாகும்!

ஆனைமலை, நாகமலை, அழகர் கோயில்
அமைந்தவெழிற் சோலைமலை, சுவையே சேர்க்கும்
தேனையவிழ் தாண்டிகுடி மலையும் உண்டு!
தென்பரங்குன் றெனச்சொல்லும் கோயில் உண்டு!
மானைநிகர் கண்ணகியாள் கடந்தே சென்ற
மாப்பெரிய சுருளிமலை இங்கே உண்டு;
வானைநிகர் பாளையங்கள் மெத்த உண்டு;
வரலாற்றில் நிலைத்திருக்கும் ஊர்கள் உண்டு;

விடுதலைக்குப் பின்னிங்கே வெற்றிச் சேதி
விளைந்ததுண்டு பலவகையில்; மடமை யென்னும்
கெடுதலையே நீக்குகின்ற கல்வித் தொண்டில்
கிளம்பியுள்ள பல்கலையின் கழகம்; நன்மை
கொடுக்கின்ற பால்வளர்ச்சி, வீட்டுத் திட்டம்,
குடிதண்ணீர்;மின்வசதித் தொண்டு; நெஞ்சைத்
தொடுதற்கே உரியதொரு அரிய சேதி
தூயநகர் 'மாநகராய்' எழுந்த கீர்த்தி!



கொட்டாத தேனியுண்டு; கம்பம் உண்டு!
குறையாத பெரியகுளம், சிலைமான் உண்டு!
வட்டாகாக் கருப்பட்டி உண்டு; மக்கள்
வாய்இனிக்கச் சீனிதரும் ஆலை உண்டு!
முட்டாத 'பசு'வுண்டு; மூவர் பாடா
முதுமையுள தேவாரம் உண்டு; காஞ்சிப்
பட்டோடு போட்டியிடும் புதுப்பட் டாடை
படைக்கின்ற சின்னாளப் பட்டி உண்டு!

மாதங்கள் வீதிகளின் பெயரில் உண்டு;
மாதர்கள் விரும்பியணி மல்லி உண்டு;
வாதங்கள் புரிகின்ற வழக்கில் வல்லார்
வகைவகையாய் இங்குண்டு; நித்தம் அன்னார்
பாதங்கள் படிந்திட்வே வழக்கு மன்றம்
பாங்குடனே புதிதாக எழுந்த துண்டு;
கீதம்பாடும் வாணர் பலபேர் வாழ்ந்த
கீர்த்தியிலும் மேலாம்எம் மதுரை யூரே!



தமிழ் வளர்த்த பெரியார்:



# திருமுருக கிருபானந்த வாரியார்

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சிங்கண்ணச் செட்டித் தெருவிலுள்ள 'திருப்புகழமிர்தம்' இல்லத்தினுள் நுழைகிறோம்.

கற்பூரம் சந்தனம் மலர்களெல்லாம் இணைந்து மணம் காற்றிலே மெல்ல மிதந்து வருகின்றது. அந்த மணத்தினூடே வெண்கலக் குரலொலி, இன்பத் தேனாய் வந்து பாய்கின்றது காதினிலே. அருகே அன்பர்கள் அடிபணிய, அருளே உருவாய்க் காட்சியளிக்கின்றது ஒரு தெய்வீகத் தோற்றம்.

அகன்ற மார்பிலே அணி மணிகள் தவழ, அகன்ற நெற்றியிலே திருநீறும் குங்குமமும் விளங்க, அழகிய கண்களிலே அருளொளி மலர அற்புதத் தோற்றத்தையே காண்கிறோம் அங்கே!

ஆம். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து, திருமுருகன் பெருமையே நாளெல்லாம் பேசி நாத்தழும்பேறிய நாவலர் நற்றமிழ்வாணர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களே அவர்.

வாரியார், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், காங்கேயநல்லூரில் 25.8.1906-இல் பிறந்தார். பெற்றோர் மல்லய்யதாச பாகவதர் - கனகவல்லி.

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதாலோ என்னவோ, வாரியார் தம் தந்தையையே குருவாக ஏற்றார்போலும்! ஆம். வாரியார் பள்ளிக்குச் சென்றதில்லை. ஆனால், பிற்காலத்தில் சொற்பொழிவு மேடையையே அவர் பள்ளி ஆக்கிய வரலாறு உண்டே!

தமது மூன்றாவது வயதிலே அவர் தம் தந்தையாரிடம் தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களைக் கற்றார். சென்னை யானை கவுனிப் பகுதியில் வாழ்ந்த, பிரம்மஸ்ரீ தென்மடம் வரதாச்சாரியாரிடம் வீணை பயின்றார்.

எட்டு வயது எட்டும்போதே வாரியார், வெண்பா பாடி அனைவரையும் தன்பால் ஈர்த்தார். இளம் வயதிலேயே இலக்கிய ஆர்வம் வளர்ந்தது. அத்துடன் இறையுணர்வும் இழைந்தது. வைகறைத் துயிலெழுந்து நீராடி இசைப்பயிற்சியில் ஈடுபடுவார். பிறகு நன்னூல் முதலான இலக்கணங்களைக் கற்பார். பிற்பகலில் தேவாரம், திருப்புகழ் முதலானவற்றை எழுதி, மனப்பாடம் செய்வார்.

தமது பன்னிரண்டாம் வயதில், திருப்புகழ் முதலான ஆயிரம் பாடல்களை மனப்பாடம் செய்து, அப்படியே ஒப்பிவிக்கவும் செய்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார்.

'மேடைப் பிரசங்கம்' என்பது பிற்காலத்தில் தோன்றிய வித்தையல்ல வாரியாரைப் பொறுத்தமட்டில், அது பச்சிளம் பாலகனாய் இருந்த பருவத்திலேயே கைவந்த கலையாயிற்று. 'குல வித்தை கல்லாமல் பாகம்படும்' என்பதற்கு வாரியாரின் இளமைக் கால நிகழ்ச்சிகள் சான்றாக அமைந்தன.

வாரியாரின் முதல் மேடைப் பிரசங்கம் - சொற்பொழிவு எப்போது நிகழ்ந்திருக்கும்? இருபது வயதிலா? அலலது முப்பது வயதிலா? இல்லை,

## வாரியார் சுவாமிகள் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு!

### — மாண்புமிகு முதல்வர் இரங்கல் செய்தி:

"திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், இலண்டனிலிருந்து சென்னை திரும்பும்போது, விமானத்திலேயே திடீர் மரணமடைந்து இறைவன் திருவடியைச் சேர்ந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் நான் மிகுந்த அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன்.

"திருமுருக கிருபானந்த வாரியார் இலண்டனில் நோய்வாய்பட்டு, சிகிச்சை பெற்று வந்தபோது, அவர் பூரண குணமடைய, தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது.

"முருகப் பெருமானின் பெருமைகளைப் பரப்புவதையே தனது வாழ்நாளில் இலட்சியமாகக் கொண்டு, நம்மிடையே வாழ்ந்து வந்த திரு வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவு, ஆன்மீகத்துறைக்கு மட்டுமன்றி, தமிழ் மொழிக்கும், தமிழ் இசைக்கும் ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

"திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவினால் வாடும் அவரது குடும்பத்தார் மற்றும் அவர் மீது அன்பு கொண்ட பக்தர்கள் அனைவருக்கும், எனது ஆழ்ந்த இரங்களையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

# திருமுருக கிருபானந்த வாரியார் மறைவுக்கு தமிழகச் சட்டமன்றப் பேரவையில் இரங்கல் தீர்மானம்



சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் 9.11.93 அன்று காலை கூடியது, கூட்டம் தொடங்கியதும், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம்ஒன்றை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் கொண்டு வந்தார்.

இரங்கல் தீர்மானத்தில் அவர் கூறியிருப்பதாவது:

''பிறந்த மண்ணுக்குப் பெருமை பல சேர்த்து உலக நாடுகளில் ஆன்மீக மழையைப் பொழிந்து அளப்பரும் தமிழ்ப் பெரும் தொண்டராக விளங்கி நல்ல பண்பாட்டுத் தமிழை நாளும் வளர்த்து தமிழகத்திலும் உலக நாடுகளிலும் ஆன்மீக நெறிகளின் தீர்ப்புகளைப் பெரும் மழையாகப் பொழிந்து வந்த திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமது 87-வது வயதில் 7.11.93 அன்று மறைவுற்ற துக்க செய்தி தமிழகத்திற்கும் தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் ஆற்றொணாப் பெருந் துயரத்தை அளிப்பதாகும்.

''அவர் ஈடும் எடுப்புமற்ற தமிழ்ப் பேரறிஞராய், சிறந்த இசை வல்லுநராய் அரிய பல நன்னெறிக்கலைகள் மூலம் இசை சொற்பொழிவு ஆற்றும் கலைஞராய், திருப்பணிகள் பல புரிந்த சமயச் சீலராய், அறப்பணிகள் பலவற்றையும் செய்த அருஞ்செம்மலாய், எல்லாத் தரப்பு மக்களாலும் போற்றிப் பாராட்டி வரவேற்கப்படும் சான்றோராய்த் திகழ்ந்தவர் ஆவார்.

''அவரது இழப்பு தமிழ் உலகத்திற்கும் ஆன்மீக உலகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் சென்ற 70 ஆண்டுக் காலமாகத் தன்னலம் கருதாமல் பொதுத் தொண்டாற்றிப் பெரும் புகழ் கொண்ட பெருமான் ஆவார். அவர் மதிப்புமிகு டாக்டர், கலைமாமணி, இசைப்பேரறிஞர், தமிழ்க் கொண்டல் போன்ற பட்டங்கள் பல அளிக்கப் பெற்றுப் பாராட்டப் பெற்றவர் ஆவார்.

''அவர் ஆற்றிய பெருந் தொண்டுகளுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அன்னார் மறைவு குறித்து இச் சட்டமன்றப் பேரவை ஆழ்ந்த கவலையையும், மிகுந்த வருத்தத்தையும் கொள்வதோடு, அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் தமிழ் அன்பர்களுக்கும், தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது''.

இயற்கை எய்திய பெருமகனார்க்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அவை உறுப்பினர்கள் அனைவரும் 2 மணித்துளிகள் எழுந்து நின்று மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

---

பன்னிரண்டு வயதில்! எப்படி? அது ஒரு கதை!

வாரியாரின் தந்தையார், 'மேடைப் பிரசங்கம்' செய்வதில் வல்லவர். கேட்பார் பிணிக்கும் கருத்துக்களைக் கூறும் ஆற்றல் வாய்ந்தவர். அன்னார் ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டார். அதனால் சொற்பொழிவாற்ற முடியாமல் போய்விட்டது. உடனே தன் மகன் வாரியாரை அழைத்து, திருப்புகழ் பெருமை குறித்துச் சொற்பொழிவாற்றி வரும்படிப் பணித்தார். வாரியார் தம் தந்தை இட்ட கட்டளையைத் தலைமேல் தாங்கி மேடை நோக்கி விரைந்தார். திருப்புகழ் அமிர்தத்தை வாரி வாரி வழங்கினார். அன்பர்கள் அனைவரும் அதன் இனிமையிலே மயங்கினர்; தனிமையிலே நின்று திறம் காட்டிய அற்புதம் கண்டு வியந்தனர்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி வந்தார் வாரியார்.

தந்தை உயிரோடிருக்கும்போதே அவருக்குச் சமாதிக் கோயில் கட்டினார். 1950-ஆம் ஆண்டு வாரியாரின் தந்தை காலமானார். அவரது உடல் அந்தச் சமாதிக் கோயிலிலே அடக்கம் செய்யப்பட்டது.

வாரியாரின் தாயார் 1977-இல் காலமானார். அப்போது அவருக்கு வயது 99. அவரது உடலும், ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டபடி, தந்தையார் அடக்கம் செய்யப்பட்ட சமாதிக் கோயிலிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

வாரியார் தமது 19-வது வயதில் தன் தாய் மாமன் மகள், அமிர்தலட்சுமியை மணந்தார். வாரியார் தம்பதிகளுக்கு மகப்பேறு இல்லை. 1986-இல் வாரியாரின் துணைவியார் காலமானார்.

தந்தையே எல்லா வகையிலும் இவருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். இவர் மிகச் சிறந்த முருக பக்தராக விளங்கியதற்கு காரணமே, வாரியாரின் தந்தை முருக பக்தராக விளங்கியதுதான்; இவர் பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய் திருக்கிறார். தந்தை வழியொட்டி பிற்காலத்தில் வாரியாரும் பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து வந்ததைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக, வயலூர் முருகனிடம் வாரியார் தம் மனத்தைப் பறிகொடுத்திருந்தார். அந்த முருகன் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார் அவர்.

வயலூர் முருகன் திருவுருவச் சிலையை பஞ்சலோகத்தில் செய்து, சிறிய பெட்டியில் எங்கு சென்றாலும் எடுத்துச் செல்லும் வழக்கமாகக் கொண்டிருந்தார் அவர். நாள்தோறும் அதற்கு வழிபாடு செய்யத் தவறமாட்டார்.

அவர் எல்லா மதத்தாரையும் மதித்தார் என்பதற்கு அவரது இளமைக்கால நிகழ்வுகளே சான்றுகளாக இருக்கின்றன.

வாரியாருக்கு அப்போது பன்னிரண்டு வயதிருக்கும், மேல்விஷாரத்திலுள்ள ஒரு மௌலவியிடம் குரானைத் தமிழில் எழுதி மனப்பாடம் செய்தாராம். அது மட்டுமல்ல, பைபிளுக்கு விளக்கவுரை சொல்லி, போப்பாண்டவரால் பாராட்டும் பெற்றுள்ளார்.

திருப்புகழுக்கு உரை எழுதியுள்ளார். 'திருப்புகழமிர்தம்' என்னும் திங்களிதழின் ஆசிரியராக 37 ஆண்டுகள் பணியாற்றினார். இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அவர் இயற்றியுள்ளார்.

வாரியார் சமயப்பணியோடு, சமுதாயப் பணியையும் மேற்கொண்டார். அருணகிரிநாதர் அறக்கட்டளை அமைத்துத் திருப்பணிகள் பலவற்றை மேற்கொண்டார். ஏழை எளிய சிறுவர்கள் கல்வி கற்க உதவிகள் புரிந்திருக்கிறார். திருச்சி திருப்பராய்த் துறையில் 'இராம கிருஷ்ண குடில்' எனும் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி அங்கு ஆதரவற்ற சிறுவர்களுக்குத் தொழிற்கல்வி கற்பிக்க வழிவகுத்தார்.

ஒருசமயம் தாய் கனகவல்லி அம்மையார் வாரியாரிடம் ''நீ பெரியவனாக வளர்ந்ததும் ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாராம் அதன்படி காங்கேய நல்லூரில் திருக்குறள் சபை நிறுவி நாள்தோறும் ஏழைகளுக்கு உணவு வழங்கி வந்தார். 'திருமுருக கிருபானந்த வாரியார் பொது நல நிதி' ஒன்றை நிறுவி ஏழை மாணவர்களுக்கு உதவி வந்தார்.

வாரியாரின் பாதம் படாத இடமே இல்லை. பட்டி தொட்டிகளில் நாடு நகரங்களில் அவரது குரல் ஒலித்தது. வாரியார் வருகிறார் என்றால் அங்கு வாராத மக்களே இல்லை எனலாம். சங்கத் தமிழை சிங்கமென முழங்கியவர். பாமர மக்களும் உணர்ந்து கொள்ளும் வகையிலே மனமுருகப்பாடியவர். அவர் எல்லாத் திறத்தாரின் தோழமையையும் சம்பாதித்துக் கொண்டார் என்பதற்கு அவர் மறைவின் போது பல மதத்தவரும் அஞ்சலி செலுத்தியதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம்.

வாரியார் ஒரு தமிழ்க்கடல். அவரது மனம் எனும் ஆழ்கடலில் நல்ல கருத்துக்கள் என்னும் முத்துக்கள் ஒளிவீசித் திகழ்ந்தன. அந்த நல் முத்துக்களை அவர் நாளெல்லாம் உதிர்த்தார். சிந்திக்கவும் சிரிக்கவுமான செறிவான கருத்துக்கள் அவரது உரைகளிலே இயல்பாக வந்து விழுந்தன.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைப் 'பொன்மனச் செம்மல்' என்று வழங்கி மகிழ்ந்தவர் வாரியார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாரியார் வாரி வாரி வழங்கிய தமிழ் வள்ளலாக விளங்கினார். அள்ள அள்ளக் குறையாத அற்பச் சிந்தனை ஊற்றாக அவர் உள்ளம் திகழ்ந்தது. வாரியார் ஆற்றிய தன்னேரில்லாத் தமிழ்ப் பணியைப் போற்றிப் பாராட்டி பல இலக்கிய அமைப்புகள் அவருக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தன.

திருப்புகழ் ஜோதி, அருள்மொழி அரசு இசைப் பேரறிஞர், திருப்பணிச் சக்கரவர்த்தி, திருப்பணிச்சரபம், அமுத மொழிக் கொண்டல், சொற்பொழிவு வள்ளல் முதலான விருதுகள் வாரியாரை வந்தடைந்தன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்குக் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்தது.

வாரியாரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது.

வாரியார் வாழ்வு, தமிழ் வாழ்வு; தமிழுக்காகவே இறுதிநாள் வரையும் பணியாற்றியவர். ஒப்பு என்பது அவரைப் பொறுத்தவரையில் இல்லை. அவர் என்பது வயதைக் கடந்த நிலையிலும், இருபது வயது இளைஞராகவே இயங்கி வந்தார். அதற்குக் காரணம் என்ன?

அதற்கு அவரே ஒரு பத்திரிகையின் பேட்டியில் கூறிய பதில்:

''நான் சுறுசுறுப்பாக இருப்பதற்கு முதல் காரணம், மனம். என் மனம் எப்போதும் முருகனையே சேவித்து வருவதால், அது இளமையுடனே இருக்கிறது. அதற்கு அடுத்த காரணம், உணவுக் கட்டுப்பாடு, எண்ணெய்ப் பதார்த்தங்கள், பால், நெய், கிழங்கு வகைகளை அறவே விலக்கி விடுகிறேன். காலையில் எதுவும் சாப்பிடுவது கிடையாது. மதியம் கொஞ்சம் உணவு. இரவு கோதுமைக் கஞ்சி. இப்படி உணவு விஷயத்தில் கட்டுப்பாடாக இருப்பதால், இதுவரை உடம்புக்கு முடியவில்லை. என்று படுத்ததே கிடையாது. அதே போல, இதுவரை நான் காலையில் குளிக்காமல் இருந்ததும் கிடையாது. குளித்து முடிந்து முருகனுக்குப் பூசை செய்த பின் பணிகளில் ஈடுபடுவதால், சுறுசுறுப்பு என் கூடவே இருக்கிறது''.

இந்த ரகசியத்தை நாமெல்லாம் கடைப்பிடிக்கலாமே!

வாரியார் உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் உழைத்து வந்தார். உலகமெலாம் சுற்றி வந்தார். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகையில் அவர் இவ்வாண்டு அக்டோபர்த் திங்கள் 19-ஆம் நாள் இலண்டன் மாநகர் சென்றார். அங்கு அவர் உடல் நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

நவம்பர் திங்கள் 7-ஆம் நாள் தாயகம் திரும்பி வருகிறபோது, விமானத்திலேயே அவரது உயிர் பிரிந்தது என்கிற செய்தி, செய்தியாக வந்தது. நாளெல்லாம் செந்தமிழ்த் தேனை காதில் பாய்ச்சிய வாரியாரின் மறைவுச் செய்தி, செந்தேளாகக் கொட்டியது. தமிழுலகம் அழுதது. ஆம். ஆன்மீக வானில் ஒளிமிகுந்த தாரகை ஒன்று விழுந்தது!

அருட்கடலாய், அஞ்ஞான இருளை ஆதவன்போல் போக்கி மெய்ஞ்ஞான திருவிளக்காய்த் திகழ்ந்த திருவுரு மறைந்தது!

அருணகிரி தமிழை அழகாய் வளர்த்து கருணை மழை பொழிந்த கார்மேகம் மறைந்தது! அவர் மறைந்தாலும், அவர் அருளிய அறிவுரைகள் - அறவுரைகள் எல்லாம் அப்படியே நம் மனத்தில் நிலைகொண்டுள்ளன. அவை படிப்பினையாகவும், அவரது பெருவாழ்வு நமக்கெல்லாம் பாடமாகவும் விளங்கும் என்பது உறுதி.

**— பி.வி. கிரி**

40-வது இந்தியக் கூட்டுறவு வார விழா!

# டான்பெட் உழவர் நண்பன்



மு. கிருஷ்ணசாமி
சிறப்பு அலுவலர்
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

இந்தியப் பொருளாதாரம் வேளாண்மையையே பெரிதும் சார்ந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கடந்த இருபது ஆண்டுகளில் நமது தொழில் துறை வெகுவாக பல்கிப் பெருகியிருப்பினும் வேளாண்மையின் மேன்மை என்றும் போல் பசுமை படர்ந்ததாகவே இருக்கிறது. இச்சூழலில் மற்றைய தொழில்கள் போன்றே விவசாயச் சார்பு தொழில்களும் வளர்ந்துள்ளன. பொதுத்துறை - தனியார் துறை ஆகியவற்றின் வாயிலாக விவசாய சார்புத் தொழில் பெருக்கங்கள் நமது பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்துள்ளன. எனினும் உற்பத்திப் பொருட்கள் - குறிப்பாக விளை பொருட்கள் நுகர்பொருளாக மாற்றப்பட்டு மக்களிடையே விநியோகம் செய்வதில் தீமை பயக்கும் போட்டி, செயற்கைப் பற்றாமையை உண்டாக்கல், பதுக்கல், உரிய விலை கொடுக்காது விளைவித்தவனைச் சுரண்டல், அநியாய விலை கோரி நுகர்வோரைச் சுரண்டல் முதலிய கொடுமை கண்டே கூட்டுறவு இயக்கம் அதிலும் குறிப்பாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மெல்ல மெல்ல தோற்றுவிக்கப்பெற்றன.

இச்சங்கங்கள் இடைத்தரகரெனும் அரக்கரின் தேவையற்ற ஈடுபாடு, தீமை பயக்கும்போட்டி மனப்பான்மை ஆகியவற்றினை அகற்றி இடுபொருட்களோடு இடுபொருட்களாக வியர்வை சிந்தி - உழைப்பை நல்கி உற்பத்தியின் விளை நிலமாம் விவசாயியின் விளைபொருட்கு உரிய விலை பெற்றுத்தரப் பெரிதும் துணையாய் நின்று வருகின்றன. இவ்வாறு அடிமட்டத்தில் இயங்கும் பிரதம விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளைத் தமது அங்கங்களாக ஆக்கிப் பின் வரும் நலப் பணிகளை நன்கே ஆற்றி வருகின்றன:

அ. உறுப்பினர்களின் விளை பொருட்கு ஆதாய விலை கிடைக்க வகை செய்தல்.

ஆ. விளைபொருளை அடமானமாகப் பெற்று முறையாகக் கடன் வழங்கல்.

இ. உறுப்பினர்தம் விளைபொருளை விற்றுத்தந்து பிரதமக் கூட்டுறவு வங்கிகள் அவர்க்களித்த பயிர்க்கடனை வசூலித்தளித்தல்.

ஈ. தேவைப்படும் இடுபொருட்கள் அளித்தல்.

உ. விளைபொருளை நுகர்பொருளாய் பக்குவப்படுத்தல்.

ஊ. விவசாய உறுப்பினர் - பொது மக்கள் ஆகியோரின் தேவைப் பொருட்கள் இருப்பு வைத்து நியாய விலையில் விற்பனைச் செய்தல்.

உறுப்பினர்தம் விளைபொருட்கு நல்ல விலை கிடைக்கவும் - அதே நேரத்தில் கூட்டுறவு மற்றும் அரசு சார்பு நிலையங்கள் வாயிலாக அவற்றினை விற்பதின் மூலம் இடைத்தரகர்களை விலக்கி நுகர்வோரும் நற்பயன் பெறவும் தனது உறுப்பினர் சங்கங்களைப் பயன்படுத்திச் செயலாற்றும் தலையாய கடனை ஏற்று 'டான்பெட்' நிறுவனம் செயலாற்றுகிறது. தனது வரம்பில் கிடைக்கும் பொருட்கள் நமது தேவைக்குக் குறைவாக இருக்குமானால் தேவை கருதி பிற மாநிலங்களுக்கும் சென்று விளை பொருள் கொள்முதலில் ஈடுபடுகிறது.

விவசாயத்தின் அடிப்படைத் தேவை இடுபொருட்கள்; விவசாயியின் அடிப்படைத் தேவை அவர்தம் விளைபொருட்களுக்கு ஆதாய விலை பெறுவது. உரம், வீரிய விதை, பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயக் கருவிகள் ஆகியவற்றை விநியோகிப்பது, தனது பாமணி 17:17:17 வகை உரக் கலவையினை உற்பத்திச் செய்வது, தோட்டப் பயிர்களுக்குத் தேவையான கலப்புரங்களைக் கலந்து 'டான்பெட்' கலப்புரம் எனும் பேரில் வழங்குவது - இவ்வாறு இடுபொருட்களை வழங்கியான பின்னர் அதனால் கிடைக்கும் உற்பத்திப் பொருட்களைத் தக்க நேரத்தில் விற்பித்துத் தருவது ஆகிய அரும்பணிகளை இணையம் ஏற்று நடத்தி வருகிறது.

இடுபொருள் வழங்கல் - உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்தல் ஆகிய சேவைகளை ஒரு கூரையின் கீழ் செய்திடும் நன்னோக்கினை மகிழ்வுடன்

ஏற்றுச் செயலாற்றி வருகிறது டான்பெட்.

உணவெண்ணெய் உற்பத்தி-வர்த்தகம் தற்போது டான்பெட் வசம் இல்லை. எனினும் 1982-83-ஆம் ஆண்டு முதற்கொண்டு உணவெண்ணெய் தயாரிக்கப் பயன்படும் சூரியகாந்தி விதையினைப் பொதுத்துறையில் இயங்கும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் மற்றும் ஒரு சில முன்னணியில் இயங்கும் சூரியகாந்தி எண்ணெய் தயாரிப்பாளர் ஆகியோருக்குப் பெருமளவில் கொள்முதல் செய்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். கடந்த 1990-91-ஆம் ஆண்டு முதற்கொண்டு மூன்றாண்டுகளில் முறையே ரூ.467.45 இலட்சம், ரூ.187.71 இலட்சம், ரூ.834.93 இலட்சம் மதிப்புக் கொண்ட சூரியகாந்தி விதையினை டான்பெட் கொள்முதல் செய்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் ரூ.412.34 இலட்சம் மதிப்புள்ள சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

நிலையற்ற சந்தை நிலவரம் நிலவிய காலத்தேயும் பருத்தி உற்பத்தியாளர்களுக்குப் பெரிதும் டான்பெட் உதவியுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள், தேசிய மற்றும் தமிழ்நாடு துணிக்கழகங்களின் நூற்பாலைகள் ஆகியவற்றிற்குப் பருத்திப் பஞ்சினைக் கொள்முதல் செய்து டான்பெட் தந்துள்ளது.

மேலும், ஏற்றுமதி வாணிபத்திலும் டான்பெட் 1979-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஈடுபட்டு பருத்திப் பஞ்சு, மிளகாய், மஞ்சள் எண்ணெய் நீக்கிய மணிலா பிண்ணாக்கு, முந்திரி, கொத்துமல்லி விதை, வெங்காயம் முதலான பொருட்களையும் ஏற்றுமதி செய்து வந்துள்ளது. கடந்த 1989-90-ஆம் ஆண்டு (1991-92 நீங்கலாக) 1992-93 வரை மட்டும் ரூ.428.78 இலட்சம் மதிப்புக் கொண்ட 7,919 'பேல்' பஞ்சு ரஷ்யா, ஜெனீவா, செக்கோஸ்லோவேகியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு இவ்விணையம் ஏற்றுமதி செய்துள்ளது.

மொத்தத்தில் 1990-91-ஆம் ஆண்டு முதலான மூன்றாண்டுகளில் முறையே ரூ.392.82 இலட்சம், ரூ.730.61 இலட்சம் மற்றும் ரூ.419.61 இலட்சம் மதிப்பார்ந்த பருத்தியினை டான்பெட் கொள்முதல் செய்தது. மேலும் மஞ்சள், முந்திரி, மிளகாய், வேர்க்கடலை, துவரை, மக்காச்சோளம் போன்ற பொருட்கள் விவசாயிகளுக்கு உதவிட டான்பெட் அதிக அளவில் கொள்முதலில் ஈடுபட்ட பொருட்களாகும்.

இதுபோன்ற வர்த்தக ரீதியான உதவிகள் மட்டுமன்றி, வாங்கல்-விற்றல் ஆகிய வாணிபச் செயல் வகைகளில் ஒருவருக்கொருவர் பயன்படும் வகையில் அனைத்துக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் சந்தை நிலவரச் செய்திகளை டான்பெட் அவ்வப்போது அளித்து வருகிறது.

**இடுபொருள் விநியோகம்:**

வேளாண்மை இடுபொருட்களை-அதிலும் குறிப்பாக இரசாயன உர வகைகள் விநியோகிக்கும் பணியில் 1967-ஆம் ஆண்டு முதற்கொண்டே டான்பெட் ஈடுபட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உடனுக்குடன் உரம் கிடைப்பதற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் 1973-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஒரு



முழுமையான மொத்த வர்த்தக நிறுவனமாக 'டான்பெட்' உருவெடுத்தது. கிராம அளவிலுள்ள பிரதமக் கூட்டுறவு வங்கிகள் 1976-ஆம் ஆண்டு முதற்கொண்டு டான்பெட்டின் சில்லறை வணிகராக நியமனம் பெற்றன. இதற்கு முன்னர் மொத்த விற்பனையாளராக இருந்து இயங்கி வந்த பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சில்லறை விற்பனை செய்ய அனுமதி பெற்றன.

விவசாய உறுப்பினர்க்கு வழங்கப்படும் பயிர் கடனில் உரப்பகுதி ஒரு முக்கிய அங்கமாக்கப்பட்டது. இடுபொருள் விநியோகப் பணியின் வெற்றிக்குப் பெரிதும் ஊக்கம் தந்தது. தமிழ்நாட்டில் உபயோகப்படுத்தப்படும் இரசாயன உர மொத்த அளவில் சுமார் 25 விழுக்காடுகளை டான்பெட் விநியோகித்து வந்துள்ளது. டான்பெட் கையாண்ட முறைமைகளும், தொழில் முறைப்படுத்தப்பட்ட மேலாண்மையும் எல்லா இடத்தும் சீரான விலையில் தரமான உர விநியோகம் மேற்கொள்ளப் பெரிதும் உதவியது. டான்பெட்டின் நீண்ட அனுபவம் - அரசினரின் ஒத்துழைப்பு - இவற்றால் எந்தப் பிரச்சினையோ தலையீடோ இன்றி இயங்க வியன்றது. கடந்த 1992-93-ஆம் ஆண்டு மட்டும் ரூ.151.62 கோடி மதிப்புக் கொண்ட 3,87,200 டன் உர வகைகளை டான்பெட் விநியோகம் செய்தது.

இந்திய அரசு 25.8.92 அன்று பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் வகை உரங்களுக்குள்ள விலைக்கட்டுப்பாட்டினை நீக்கியது. இதன் காரணமாக இவ்வுரங்களின் விலை இரண்டு - மூன்று மடங்கு உயர்ந்தது. இதன் காரணமாகத் தோன்றிய இக்கட்டான நிலைமையினைத் தவிர்ப்பதற்காக 1.10.92 முதல் ஓர் உரச்சலுகை திட்டத்தினை இந்திய அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.95.94 கோடி மதிப்புக் கொண்ட 1,37,656 டன் அளவுள்ள டி.ஏ.பி. எம்.ஓ.பி. மற்றும் சில கூட்டுரங்களை விநியோகித்து ரூ.10.83 கோடி பெறுமானமுள்ள சலுகையினை இணையம் உழவர்களித்தது. இச்சலுகை 1993-94-ஆம் ஆண்டிலும் 12.6.93 முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. முதல் மூன்று மாதக் காலத்திலேயே ரூ.1.64 கோடி அளவிற்கு இச்சலுகை பெறப்பட்டுள்ளது.

மேலும், உழவர்க்கு உதவிடவும் விவசாயப் பொருளாதாரத்தின் தரம் உயரவும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் - மண்டல இணைப்பதிவாளர்கள் ஆகியோரின் உறுதுணையோடு தஞ்சை, நாகை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து மாநிலத்தின் மற்றெல்லா இடங்களிலும் 'ஒரு கூரையின் கீழ் அனைத்துச் சேவை' எனும் உன்னத நோக்கத்தின் அடிப்படையில் பிரதம விவசாயக் கூட்டுறவு வங்கிகள் 100 வேளாண் சிறப்பங்காடிகளைத் தொடங்கிட டான்பெட் ஏற்பாடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் இவ்வங்காடிகளின் முதன்மைத் தேவைகளான பெயர்ப் பலகைகள், விலைப் பட்டில் அறிவிப்புப் பலகைகள், துணிப்பதாகைகள், மரதாங்கிகள், குவிச்சக்கர ஊர்திகள், விற்பனையாளர்க்கு சீருடைகள் ஆகியன வழங்கி டான்பெட் ரூ.20 இலட்சம் செலவிட்டது. மேலும், இப்பணியாளர்க்கு மதுரை கூட்டுறவுப் பயிற்சி மையத்தின் வாயிலாக உரிய பயிற்சி அளிக்கப்படவுமுள்ளது. இவ்வேளாண் சிறப்பங்காடிகளில் போதிய அளவு உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்துகள்,

கருவிகள் ஆகியன இருப்பு வைக்கப் படுகின்றன. கடந்த 1992-93-ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.1.50 கோடி பெறுமானமுள்ள இடுபொருட்களும் நடப்பாண்டான 1993-94-இன் முதல் ஐந்து மாதங்களில் ரூ.2.06 கோடி மதிப்பார்ந்த இடுபொருட்களும் இத் திட்டத்தின்கீழ் உழவர்க்கு வழங்கப் பட்டன. நடப்பாண்டில் இரசாயன உரத்தைப் பொருத்தமட்டில் ரூ.254 கோடி மதிப்புள்ள 5,40,000 டன் அளவு உரம் வழங்கப்பட திட்டமிடப் பட்டுள்ளது. காலவாக்கில் 1997-98-ஆம் ஆண்டில் 12,65,000 டன் உரத்தினை டான்பெட் விநியோகம் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அதிகப்படி விற்பனை விளிம்பும், நிதியுதவியும் அளித்து தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் பிரதம விவசாயக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக உழவர் சேவை மையங்கள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**உர இறக்குமதி**

கடந்த 1992-93-ஆம் ஆண்டில் இவ்விணையம் 35,000 டன் டி.ஏ.பி. உரத்தினை 'ஜோர்டான்' மற்றும் அமெரிக்க நாடுகளினின்று இறக்குமதி செய்தது சிறப்பு வாய்ந்ததொன்றாகும். இது உர விநியோகத்தைச் சீராக வைத்திருக்கவும் விலை அதிகரிப்பு சூழ்நிலையைத் தனியார் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்க்கவும் பயன்பட்டது. வெளிச்சந்தை விலை 50 கிலோ கொண்ட மூட்டை ஒன்றிற்கு ரூ.368/- என விற்கப்பட்டபோது கூட்டுறவு அங்காடிகளில் ரூ.340/- என விற்றதே இதற்குப் போதிய சான்றாகும்.

**வீரிய விதை, பூச்சி மருந்து மற்றும் வேளாண் கருவிகள் விநியோகம்:**

விவசாயத் துறையினரால் சான்றளிக்கப்பெற்ற தரமுள்ள வீரிய விதைகள் விவசாயத் துறையினரின் விதைப் பண்ணைகளிலும், 'டூகோஸ்' கூட்டுறவு நிறுவனம் மற்றும் பலராலும் தயாரித்தளிக்கப் படுகின்றன. இவ்வாறே பூச்சியழிப்பு மருந்துகளைப் பல தனியார் நிறுவனங்களும் 'டூகோஸ்' நிறுவனமும் தயாரித்தளிக்கின்றன. விவசாயக் கருவிகள் தயாரிப்பில் தனியார் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் முதலானவை ஈடுபட்டுள்ளன. "அனைத்து இடுபொருட்களும் ஒரு கூரையின்கீழ் வழங்கப்படுதல்" எனும் கொள்கை கொண்ட 'டான்பெட்' டும் உரத்தோடு இவ்விடுபொருட்களையும் விநியோகித்து வருகிறது.



**சேமிப்பு:**

விநியோகப் பணியில் ஈடுபாடு கொண்ட எந்த நிறுவனத்திற்கும் சேமிப்பு வசதி என்பது மிக அத்தியாவசியமானதாகும். சேமிப்புக் கிடங்குகளில் விளை பொருட்கள் முறைப்படி சேமித்து வைக்கப்படுவது மட்டுமன்றி, சந்தையில் கிடைக்காத காலங்களிலும் கிடைக்கச் செய்யுமளவிற்கு சில பொருட்கள் - குறிப்பாக விரைவில் அழுகும் தன்மை கொண்ட பொருட்கள் விஞ்ஞான ரீதியில் அப்படிக் கெட்டுப்போய் விடாமல் நீண்டநாள் சேமித்து வைக்கப் பட வேண்டிய அவசியமுள்ளது. குளிர்ப்பதன வசதி இதற்கு உறுதுணையாகவுள்ளது. தற்போது இணையத்திடம் 26,560 டன் மொத்த கொள்ளளவு கொண்ட 35 கிடங்குகள் தமிழ்நாடெங்கும் உள்ளன. இவை தேவையான அளவிற்கு உரத்தினைக் கையிருப்பு வைத்து உர விநியோகத்தினைச் செவ்வனே செய்திடப் பெரிதும் உதவுகின்றன. மழை வெள்ளம் எனும் இயற்கை சீற்றத்தினின்றும் கோடானு கோடி மதிப்பார்ந்த பொருட்களைப் பாதுகாக்கின்றன.

மேற்கூறப்பட்ட சேமிப்புக் கிடங்குகள் மட்டுமன்றி 'டான்பெட்' வசம் 1,250 டன் கொள்ளளவு கொண்ட குளிர் வசதி நிலையமொன்றுள்ளது. இங்கு உருளைக் கிழங்கு, புளி, பழவகைகள், காய்கறி வகைகள், முட்டை, பால் பொருட்கள், பேரீச்சம் பழம், உலர்ந்த பழ வகைகள், தானிய வகைகள், சுவையூட்டுப் பொருட்கள், மற்றும் பிற பொருட்கள் சேமித்து வைக்கப்படுகின்றன. இக்குளிர்ச் சாதன நிலையம் பெரும்பாலும் சென்னைவாழ் நுகர்வோருக்கே பயன்படுகிறது. 'டான்பெட்' கொள்முதல் செய்த பொருட்கள் மட்டுமன்றி பல வேறு வர்த்தகர்களாலும் குஜராத் கூட்டுறவுப் பால் உற்பத்தி இணையம் மற்றும் பல நிறுவனங்களாலும் கொண்டு வரப்படும் பொருட்கள் நிர்ணயிக்கப் பெற்ற வாடகைக் கட்டணம் விதிக்கப் பெற்று சேமிப்பில் நீண்ட நாட்கள் வைக்கப்படுகின்றன. இந்நிலையத்தின் தேவை தற்போது அதிகரித்து வருகிறது. பெருகும் தேவையைக் கருதியும் - விஞ்ஞான ரீதியில் சேமிப்பதன் அவசியம் - நன்மைகள் ஆகியவற்றைப் பற்றி உபயோகிப்போரிடம் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும் மிகப் பெரிய அளவில் சென்னையைச் சார்ந்த கோயம்பேடு எனும் இடத்தில் உருவாகி வரும் மொத்த வியாபார அங்காடி வளாகத்தில் ரூ.170 இலட்சம் மதிப்பீட்டில் 2,500 டன் கொள்ளளவில் ஒரு குளிர்ப்பதனச் சாலையை டான்பெட் உருவாக்கி வருகிறது. தற்போது நெரிசலில் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் சென்னை கொத்தவால் சாவடிக்குப் பதிலாக நல்ல வசதியான இடத்தில் கனி வகைகள், காய்கறிகள், கண்கவர் மலர்கள், தானிய வகைகள், பயறுகள் முதலான பல்வேறு அன்றாடத் தேவைப் பொருட்களின் வாணிபத்திற்காகச் சீரிய முறையில் நிர்மாணிக்கப்பெற்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினர் (எம்.எம்.டி.ஏ.) மூலமாக, தமிழ்நாடு அரசு மேற்படி பேரங்காடியினை அமைத்து வருகிறது. வணிகப் பெருமக்களைப் பெரிதும் கவர்ந்து குளிர்சாதன வசதியெனும் புதுக்கலாச் சாரத்தை ஊரறியச் செய்யவிருக்கும் இப் பெருமைக்குரிய அலகினை அமைக்க 22 'கிரவுண்ட்' நிலப்பரப்பினை 'டான்பெட்' பெற்றுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் தற்போது தொடங்கப் பெற்று நடைபெற்றுக் கொண்டுள்ளன.

'டான்பெட்' நிறுவனம் கடன் வழங்குவது இல்லை. மாறாக சேவை வடிவில் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் ஆக்க வழியில் இயங்குகிறது. "கொள்வதும் மிகைக் கொளாது கொடுப்பதுவும் குறை படாது" எனும் அன்றைய காவிரிப்பூம்பட்டின வாணிபத் தத்துவமே இன்றையக் கூட்டுறவின் உண்மைத் தத்துவமென உணர்ந்து, இது உயர்ந்த பொருளாதாரத்திற்கு உயிர்நாடியாக விளங்குமெனும் நன் நோக்கத்தில் தன்னால் இயன்ற அளவிற்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ●

**★ எங்களுக்குத் தேசம்தான் தெய்வம்; தேசத்தின் மக்கள்தான் எங்கள் சொத்து, சுகம் எல்லாம். அதற்கு ஆபத்து வரும்போது எங்கள் உயிர்களை உருவிக் கொடுத்தாவது தேசத்தைக் காத்து நிற்போம்.**

—பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்



பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 14.11.93 அன்று அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்தனர்.

—'தமிழரசு' அடுத்த இதழிலும் மதுரை மாவட்டச் செய்திகள் தொடர்ந்து வெளிவரும்.


பயிர்களுக்கு ஒரு **புதிய** பாதுகாப்பு

வேம்பின் நற்குணங்களைக்கொண்ட

# நிம்பிசிடின்®

(பூச்சி மருந்துச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது.)

- இது வேப்பங் கொட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அஸாடிராக்ஷின் 0.03%-ஐ மூலப் பொருளாகக் கொண்டது.
- T.ஸ்டேன்ஸ் கம்பெனியின் ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்ட ஒரு படைப்பு.
- பருத்தி, நெல், நிலக்கடலை, காய்கறிகள், பயறுவகைகள், பூக்கள் போன்றவற்றில் காணும் பச்சைப் புழு, தாய்ப்புழு, மொட்டுத் துளைப்பான், வெள்ளை ஈ, ஸ்போடாப்டீரா, அசுவனி, இலைச்சுருட்டுப் புழு, சுருள் பூச்சி போன்றவற்றைக் கட்டுப்படுத்த நிம்பிசிடின் சிபாரிசு செய்யப்படுகிறது.
- பூச்சிகள் நிம்பிசிடினுக்கு எதிர்ப்புச் சக்தி வளர்த்துக் கொள்வதில்லை.
- இது பூச்சி மருந்து கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதால் இதன் தரம் நிரந்தரமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
- இது புழுக்கட்டுப்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படும் மற்ற பூச்சி மருந்துகளைவிட 20 முதல் 30 மடங்கு பாதுகாப்பானது.
- இது மருந்து தெளிப்பவர்களுக்கும் பாதுகாப்பானது.
- ஒருங்கிணைந்த பூச்சி பராமரிப்பு குறிக்கோளின்படி நிம்பிசிடின் பயனுள்ள பூச்சிகளைக் கொல்லாது.

T.STANES & CO LTD., 23, RACE COURSE ROAD, COIMBATORE-641 018. Phone: 21 15 14.

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!





கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
ence No. TN/MS(C)/PP-23



தமிழரசு





அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மதுரை மற்றும் நீலகிரி பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டு அல்லலபட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி உதவிகள் வழங்கினார்.

